

KALKI 1.1.95
ரூ. 3.00
கல்கி
சிரிப்புச் சிறப்பிதழ்

Welcome to World Tamil Delegates



LUXURY
BUSINESS CLASS
BUDGET HOTEL


We add to the value! Not to the price!!

Hotel Chandra Towers a rare blend of elegance and class, Situated strategically opposite Egmore Railway Station.

Centrally Air-Conditioned Rooms, Suites

Our Choice
Speciality Restaurant

Speciality
multi-cuisine
restaurant



Bon Sante'
Permit Room

well stocked
spacious **BAR**



La Galerie
(Banquet & Conference)


BANQUET HALL
is well equipped for banquet facilities from 15-200 persons.

Hotel Chandra Towers

(opp. Egmore Railway Station) No. 9, Gandhi Irwin Road,
Egmore, Madras - 600 008.
Phone : 8258171 (8 Lines) 8254863 Fax : 044-8251703



அட்டையில் : சுசித்ரா; வண்ணப்படம் : யோகா



நேரடி 'சிரி'ப்போர்ட்!
"டிஸ்டர்ப் பண்ணாதீங்க. ஆசிரியர் தலையங்கம் எழுதிக்கிட்டிருக்காரு!
சார், குட்டிக்கதைகள் வேணும்னு கேட்டீங்களே!
கருத்து: கிச்சா
படங்கள்: செல்லம்
எனக்கு ப்ரஷ் வேணாம் சார்!
1928-ல 'இளைஞர்களுக்கு மட்டும்'னு ஒரு போட்டி வெச்சிருந்தீங்களே, முடிவு தெரிஞ்சிக்கிட்டு போலாம்னு வந்தேன்!


சார், கடங்காரன், பெரிய கொம்பன்னு நினைப்பு, இவன் கிட்ட படம் போட்டு வாங்கறதுக்குள்ள அடுத்த யுகம் வந்து டும், மண்டைகனம் பிடிச்சவன், ரப்சா பார்ட்டி அப்படீன் னெல்லாம் சொல்லு வீங்களே, அவரு பேசறாரு. பேச றீங்களா?
EDITORIAL ROOM
மழைச்சீசன் ஜோக் யோசிக் கிறாரு
அவர் மட்டும் ஏன் அவ்வளவு சோகமா இருக்கார்?
அவர்தான் 'அபிச்சுவரி' காலம் பார்க்கிற வர் அதான்!

◆ எத்தனையோ வேலை நிறுத்தங்களைப் பார்த்திருக்கேன், கேட்டிருக்கேன். இளம் கலைஞர்களின் பாடா விரதம் பற்றி, கல்கியின் கவர் ஸ்டோரியில்தான் தெரிந்து கொண்டேன்!

சேலம், எம். கே. வேங்கவேல்.

◆ மற்ற துறைகளில் இருப்பவர்களைப் போலவே, பிரமோஷன் பற்றிய எதிர்பார்ப்பு இசைத் துறையினரிடம் இருப்பதும் நியாயம்தானே!

கானா என்றால் என்ன என்பதைச் சரியான முறையில் விளக்கியது அருமை!

பொன்மலை, ஜென்மா.

◆ குப்புடுவின் ஜெ. கச்சேரி விமர்சனம் சுபர்ப்! புகைப்படமும் ரொம்பப் பொருத்தம்!

ஸ்ரீவைகுண்டம், கே. ராமகிருஷ்ணன்.

◆ "ஜெ. கச்சேரிக்கு மிருதங்கம் வாசித்த சேடப்பட்டியார், வேஷ்டி கட்டியிருக்கும்போது பேண்ட் போட்ட கால் எப்படி வந்தது?

சென்னை - 42, எஸ். பார்வதி.

அது 'பாண்ட்' இல்லை; மிருதங்கத்தின் உறை! - ஆர்.

◆ 'மோக முள்' பட விமர்சனத்தின் கடைசி வரிகள் நெற்றியடி.

பாம்பன்குளம், முத்துவேணி அரசு.

◆ சிறுகதைகள் அபாரம். குறிப்பாக ஜி. நாராயணன் முள் சிறுகதை மூலம் நெஞ்சில் குத்திவிட்டார்... பந்த பாசத்தின் பெருமை விளங்கியது!

திருச்சி - 2, அக்கரைப்பட்டி கனகராஜ்.

◆ 'காங்கிரஸ் தலையில் விழுந்த இடி' என்ற தலைப்பைப் படித்தேன். விழுந்தது இடி அல்ல, 'அடி.' 70 வயதான ஒரு நடிகர் கவர்ச்சியான உடையணிந்து போலியான இளமைத் தோற்றத்துடன் பொய்யான வாக்குறுதியை அள்ளி வீசினால் முதலமைச்சர் ஆகலாம் என்ற தவறான முன்னுதாரணத்திற்கு ஆந்திர மக்கள் காரணமாய் இருப்பது வருத்தத்திற்குரியதுதான். கர்நாடகத்தைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் இன்னும் தன்னைச் சுயபரிசோதனை செய்து கொள்ளவேண்டும். காங்கிரஸ் ஒன்றுபட்டால் அதை எதிர்த்து நிற்கும் சக்தி யாருக்கும் இல்லை என்பதுதான் உண்மை.

காட்டுமன்னார்கோவில், பொன்னரசன்.

◆ மோட்டார் சைக்கிள் போட்டி எண் - 15 இல் அன்னக்கிளியில் சின்னக் கண்ணனை அழைத்தவர் யார் என்று கேட்டிருக்கிறீர்கள். ஐயா, அவர் சின்னக்கண்ணனை அழைத்தது 'கவிக்குயில்,' படத்தில் தான். நரியைப் பரியாக்கியது போல் குயிலைக் கிளியாக்கி விட்டீர்களே!

திண்டுக்கல் - 3, அ. வெங்கடேஷ்.

போட்டி எண் - 15 இல் 'அன்னக்கிளி' என்பதைக் 'கவிக் குயில்' எனத் திருத்திக் கொள்ள வாசகர்களை வேண்டுகிறோம். - ஆர்.

◆ 'வட்டமேஜை'யைக் குட்டை மேஜையாக்கிவிட்டீர்களே! இது நியாயந்தானா ஸார்?

திருச்சி - 20, ச. நாகராஜன்.

◆ 'பார்த்திபன் கனவு' தொடரைப் படித்துக் கொண்டு வந்த போது, நரசிம்ம பல்லவரும், குந்தவியும் மாமல்லபுரத்தைச் சுற்றிப் பார்க்கும் கட்டத்தில், (சிவகாமியின் சபதம் படித்திருக்கும் காரணத்தால்) 'பாவம்! மாமல்லரின் மனம் என்ன பாடுபடும்' என்ற எண்ணம் எழ, என் கண்களில் கண்ணீர் சுரந்து, தொடர்ந்து படிக்க முடியாமல் செய்துவிட்டது.

திருத்தணி, காஞ்சனா ராஜன்.

◆ பார்த்திபன் கனவு தொடருக்கு கோபுலுவின் யானை ஓவியம், அடடா, நூறு வருடங்கள் பயிற்சி பெற்றாலும் இத்தனை கம்பீரம் ஓவியத்தில் வருமா என்பது ஐயம். கல்கியைவிட்டு இறங்கி வருவது போல ஒரு பிரமையே ஏற்படுத்திவிட்டது இந்த 3-D யானை ஓவியம். கோபுலுவின் கைக்கு ஓர் அன்பு முத்தம்.

பெங்களூர் - 55, என். ராஜகோபாலன்.

நரியைப் பரியாக்கியது போல்..!


◆ 1. புஷ்பம் பாட்டி விரும்பிப் படிப்பது கல்கியில் ஆன்மிக விஷயம் மற்றும் அருள்வாக்கு. பாட்டி மிகவும் நல்லவர். தெய்வ பக்தி உள்ளவர். தேசபக்தியும் உண்டு. சிங்கப்பூரிலிருந்து காந்தியைப் பார்க்கவே இந்தியாவுக்கு வந்தவர்... 2. பாட்டியின் மகளுக்குப் பொழுது போவதே கல்கி புத்தகம்தான். பழைய கல்கிகளை எல்லாம் கூட எடுத்துப் படிப்பதுதான் வேலை. 3. அவர் மகள் வித்யா. காலையில் வாசலிலே காத்திருந்து கல்கி வந்ததும் கலி சிவம், கட்டுரை, அமரர் கல்கி தொடர்கதை படித்து விட்டுத்தான் மறுவேலை. அரசியல் விஷயங்களையும் விரும்பிப் படிப்பாள். 4. வித்யாவின் மகள் செல்வி. B.Sc., B.Ed. படித்தவள். கல்கியை ஆசையோடு படிப்பாள். அருள்வாக்கு, சினிமா விமர்சனம், சரித்திர, சமூகத் தொடர் கதைகள் எல்லாம் விரும்பிப் படிப்பாள். 5. ரெனுக்குப் பிடித்தது கல்கியில் ஜில்லு-ஜாலு. தூங்கும் சமயம் கல்கி புத்தகம் இருந்தால் ஜில்லு-ஜாலுவைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டே கண்ணயர்வான். இவ்வாறு நாங்கள் ஐந்து தலைமுறையினர் - ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் - கல்கியைப் படித்துக் கொண்டு வருகிறோம். அதிசயக் குடும்பம் என்று எல்லோரும் சொல்வார்கள். அதிசய கல்கி என்று நாங்கள் சொல்வோம்! கல்கிக்கு நன்றி.

பெங்களூர், வித்யா.



எஸ். சந்திரமௌலி

டயலாக்



ஆந்திரா அண்ணாவும் தமிழகத் தங்கையும்!

ஆந்திர அண்ணா பதவி ஏற்பு விழாவில் கலந்து கொள்ளச் சென்ற ஜெ., அவருடன் அந்தரங்க ஆலோசனை நடத்துகிறார்:

என்.டி.ஆர்: ஒரு டெலிபோன் போட்டு கேட்டுக்கிட்டேன். பிகு பண்ணிக்காம பதவி ஏற்பு விழாவுல கலந்துக்க வந்திட்டீங்க. ரொம்ப சந்தோஷம்.

ஜெ: நீங்க காங்கிரஸை வீழ்த்தியிருக்கீங்க. எனக்கும் காங்கிரஸ் எதிரி. எதிரியின் எதிரி எனக்கு நண்பன் தானே!

என்.டி.ஆர்: இத்தனைக்கும் நம்ம இரண்டு பேருக்கும், தலைமுறை இடைவெளி இருக்கு. அதைக்கூட நீங்க பெரிசு பண்ணலையே!

ஜெ: கிழங்கட்டைகளுக்கான பேச்சு அது... நீங்கதான் சஃபாரி டிரஸ்ல சும்மா ஜம்முனு இருந்தீங்களே; இளமை ஊஞ்சலாடிச்சு... அது கிடக்கட்டும், முதலமைச்சராகப் பதவி ஏற்கிற விழான்னா, போஸ்டர், கட் அவுட்டுன்னு தூள் கிளப்ப வேணாமா? அது மாதிரி ஒண்ணையும் காணோமே!"

என்.டி.ஆர்: நீங்க ஒண்ணு, தேர்தல் நேரத்துல அடிச்ச, சேஷன் ஜுரத்துல இருந்து நான் இன்னமும் முழுமையா மீண்டு வரலை.


ஜெ: அவர் தர்பாரெல்லாம் தேர்தல் வரைக்கும்தான். அப்புறம் நம்ம ராஜ்யம் தானே! பதவி ஏற்பு விழாவுக்கு உங்களோட சைதன்ய ரதத்துக்குப் பின்னாடி ஆயிரம் கார் பவனி வர ஏற்பாடு பண்ணியிருக்கலாம். வாய்ப்பை நழுவ விட்டுட்டீங்க.

என்.டி.ஆர்: தேர்தல் வாக்குறுதியா ரெண்டு ரூபாய்க்கு கிலோ அரிசி தரப் போறதாச் சொல்லிட்டேன். பட்ஜெட்ல ஏகமா துண்டு விழப்போகுது. என்ன பண்ணறதுன்னு தெரியலை.

ஜெ: ஹூம் இதுக்கா கவலைப் படறீங்க? மாவட்டம் மாவட்டமா போய், கோடிக் கணக்கான ரூபாய்க்குத் திட்டங்களை அறிவிச்சு அந்த விழாக்கள்ல ரெண்டு ரூபாய்க்குக் கிலோ அரிசி வழங்குங்க. அப்புறம் அறிவிச்ச திட்டம் மாதிரியே அரிசியையும் மறந்துடுங்க.

என்.டி.ஆர்: மத்தியில் காங்கிரஸ். இங்க தெலுங்குதேசம். அதனால கவர்னர் கொஞ்சம் தொந்தரவு கொடுப்பாரோன்னு பயமாயிருக்கு.

ஜெ: கவர்னர் டிரபிள் கொடுத்தா, அவரை மாத்திடச் சொல்லி, மறைமுகமா சென்டருக்கு பிரஷர் கொடுங்க. அது முடிய



அடுத்த இதழ்...

பொங்கலை முன்னிட்டு படிக்கப் படிக்க அலுக்காத கிராமச் சிறப்பிதழாக மலருகிறது

லைன்னா, கவர்னர் பதவியையும் நீங்களே வகிக்கிற மாதிரி சட்ட சபையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றிடுங்க.

என்.டி.ஆர்: எப்படிங்க ஒரு மாநிலத்து முதலமைச்சர், அந்த மாநிலத்து கவர்னராகவும் பணியாற்ற முடியும்?

ஜெ: ஏங்க, ஒரு மாநிலத்து கவர்னர், கூடுதலா இன்னொரு மாநில கவர்னர் பதவியை வகிக்க சட்டம் இடம் தரும்போது இதுக்கு மட்டும் ஏன் தடையிருக்கணும்? சட்டசபை எதுக்கு இருக்கு? நாம நினைத்தபடி சட்டங்களை மாற்றி, புதிய சட்டங்களை உருவாக்கத்தானே!

என்.டி.ஆர்: இதற்கு எதிர்க்கட்சிங்க என்ன சொல்லுவாங்களோ தெரியலையே!

ஜெ: அவங்களைப் பத்தி என்னத்துக்குக் கவலைப் படணும்? அவங்க ஒத்துழைக்க மாட்டாங்கன்னுதான் தெரியுமே! அதனால மறுபடியும் தேர்தல் வரும் வரைக்கும் சட்டசபை கூட்டத் தொடரிலேயிருந்து அவங்களை சஸ்பெண்டு பண்ணிட வேண்டியதுதான்!

என்.டி.ஆர்: சபாநாயகர் இதற்கெல்லாம் ஒப்புக் கொள்ளுவாரா?

ஜெ: அதுவும் உங்க கையிலதான் இருக்கு. அதுக்கேத்த மாதிரி ஆளை செலக்ட் பண்ணி சபாநாயகரா போடணும். நடுநிலை, மரபு, பார்லிமெண்டரி சட்டப் புத்தகம் அது இதுன்னு நோண்டிப் பார்த்துக்கிட்டு இருக்கிறவரா தேர்ந்தெடுக்காதீங்க.

(காங்கிரஸில் டிக்கெட் கிடைக்காத காரணத்தால் சுயேச்சையாக நின்று ஜெயித்த ஒருவர் என்.டி. ஆரைக் காண வந்திருப்பதாய் உதவியாளர் வந்து கூறுகிறார்.)





ஜெ: இந்த மாதிரி ஆசாமிகளுக்கு முதல்ல ஆசைகாட்டி, கால்ல விழச் சொல்லி போட்டோ பிடிச்சு வெச்சுக்குங்க. அப்புறமா ஓரம் கட்டிடலாம். அது சரி, யூனிவர்சிடி, அரசாங்கக் கட்டடம், பஸ் போக்குவரத்துக் கழகம் இப்படி எதுக்காவது உங்க பேர் இருக்கா?

என்.டி.ஆர்: இல்லை...ம்.... அதெல்லாம் எதுக்கு?

ஜெ: இப்படியெல்லாம் அச்சுபிச்சுன்னு பேசக்கூடாது! முதல்ல எல்லா பல்கலைக் கழக துணை வேந்தர்களையும் கூப்பிட்டுப் பேசுங்க. இன்னும் ஒரு வருஷத்துல குறைஞ்சது அரை டஜன் டாக்டர் பட்டங்களாவது உங்களுக்குக் கிடைக்கும்படி செய்துக்குங்க. உம்... மந்திரி சபை தேர்ந்தெடுத்தாச்சா? திறமையானவர்களா, ஒருத்தரோடு ஒருத்தர் போட்டி போட்டுக் கொண்டு, வேலை செய்யக் கூடியவர்களா இருக்கணும்.

என்.டி.ஆர்: ஆமாமாம். தொழில்துறையிலும், மற்றவற்றிலும் மாநிலம் துரிதமா முன்னேற்றம் அடையணுமே!

ஜெ: மண்ணாங்கட்டி! மந்திரிகளுக்கிடையில் போட்டின்னு நான் சொன்னது வேற அர்த்தத்துல. பேப்பர்ல விளம்பரம் தருவது! கட் அவுட் வைப்பது இதிலெல்லாம் போட்டி இருக்கணும். ஒருத்தர் வெள்ளி ரதம் இழுத்தா, இன்னொருத்தர் தங்க ரதம் இழுக்கணும். ஒருத்தர் "இதய தெய்வமே"ன்னு விளம்பரம் தந்தா இன்னொருவர் வெங்கடாசலபதி தாயார் படங்களில் உங்க முகத்தையும் சிவபார்வதி முகத்தையும் போட்டு, விளம்பரம் தரணும்.... அப்புறம் நான் இன்னொண்ணும் கவனிச்சேன்...

என்.டி.ஆர்: என்னது அது?

ஜெ: லட்சுமி பார்வதி, கழுத்துல ரெண்டு சங்கிலிதான் தொங்கிக்கிட்டு இருக்கு. அவங்களை நகைக்கடையா நடமாட விட வேண்டாமா? அப்பத்தான் ஜனங்க 'ஆ'ன்னு பார்ப்பாங்க. மரியாதை பிறக்கும்.

என்.டி.ஆர்: ஒரு சின்ன வேண்டுகோள். ரெஸ்ட் எடுக்க சௌகரியமாய் நீங்க ஹைதராபாத்ல ஒரு திராட்சை தோட்டம் வெச்சிகிட்டு இருக்கிற மாதிரி, எனக்குத் தமிழ் நாட்டிலே ஒரு மாந்தோப்பு விலைக்குக் கிடைக்குமான்னு பாருங்களேன்...

ஜெ: என் தோழி, அவர் குடும்பம், கட்சியின் மாவட்டம், வட்டம், போன்றவர்கள் எல்லாம் வளைத்துப் போட்டது போக, மீதி இடம் இருந்ததுன்னா தகவல் சொல்லி அனுப்பறேன்!

Kalki Shopping Page

Kalki Shopping Page

மனோஜ் கலர் ஜெராக்ஸ்


போஸ்ட் கார்டு சைஸ்
கலர் போட்டோக்களை
A4, A3 சைசுக்கு
என்லார்ஜ் செய்து
எங்கள் செலவில்
கொரியர் மூலம்
அனுப்பி வைக்கப்படும்

A4 - Rs. 75/= A3 - Rs. 125/=

கலர் போட்டோ, M.O. D.D.,
அனுப்ப வேண்டிய முகவரி

மனோஜ் ஜெராக்ஸ்
4, குமரன் ரோடு, திருப்பூர் - 641 601.
போன் : 700306, 701304. பேக்ஸ் : 701004.

ரூபா கோல்டு கவரிங்



உத்திரவாதம் உடையது!

உபயோகித்திருந்தாலும்
கம்பெனி நிபந்தனையின்படி
பணம் திருப்பி தரப்படும்.

பரதநாட்டியம் செட்டும்
அமெரிக்கன் டயமண் செட்
நகைகளும் கிடைக்கும்.

கதம்ப மாளிகை

36, பாண்டிபஜார், தி.நகர்,
சென்னை-600 017.

நீடித்த நோயிலிருந்து விடுதலை பெறுங்கள்!

எல்லா நாட்பட்ட நோய்களையும் குணமாக்க மூலிகை மருந்துகள் - குழந்தை இல்லாமை (Infertility) பெண்கள் மாதவிடாய் கோளாறுகள், புண், கட்டி, வெள்ளைப்பாடு, ஆண் உயிரணு குறை, சிறுநீரில் (Kidney & Bladder) கற்கள், கழுத்து, தோள், மூட்டு வலி வீக்கம், ஆஸ்துமா, Appendicitis, Colitis தோல் நோய்களுக்கு மருந்துகள்.


நேரில் ஆலோசனை பெற நேரம் :
10 a.m. - 1. p.m. & 5 p.m. - 8 p.m.
ஞாயிறு விடுமுறை

நவோதயா சித்தர் மருத்துவம்

No. 21/2, அலமேலுமங்காபுரம்
III தெரு, மயிலைகுளம்,
சென்னை - 4. போன்:4940662
(சாயிபாபா கோயில் பின்புறம்)

AALAYA/3/12/94

Kalki Shopping Page



பிரதமர்
முதல்வர்
உலகத் தமிழ் மாநாடு



கல்கி

1995
ஜனவரி 1
பவ
மார்கழி 17
மலர் : 53
இதழ் : 22



தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

சிரிக்க வைக்கும் பிரதமர்!

1994-ம் ஆண்டின் மிகப் பெரிய ஜோக்குக்கான பரிசை வேறு யாராவது தட்டிக் கொண்டு போய்விடப் போகிறார்களே என்பதற்காக பிரதமர் இட்ட மிட்டு வேலை செய்திருக்கிறார்! அவர் சிரிக்கிறாரோ இல்லையோ, மக்களைச் சிரிக்க வைப்பதில் மிகப் பெரிய வெற்றி அடைந்திருக்கிறார்!

தமது அமைச்சரவையில் ராமேஷ்வர் தாக்கூர், சங்கரானந்த், கல்பனாத் ராய் ஆகியோர் புனிதர்கள், ஒருவரும் மனமறிந்து ஒரு தப்பும் செய்யவில்லை என்றெல்லாம் முதல்நாள் நற்சான்றிதழ் கொடுத்துவிட்டு, மறுநாளே மூவரையும் வீட்டுக்கு அனுப்பியதை விடவும் ஒரு பெரிய ஜோக் இருக்கவே முடியாது.

'ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள், பணம் பண்ணும் நோக்கில் வேண்டு மென்றே தப்புச் செய்தால்தான் குற்றம்; திறமைக் குறைவால் மக்களுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுத்துவது தவறே இல்லை' என்ற மாயை முதன்முறையாக இன்றைய பிரதமரால் உருவாக்கப்பட்டது. நல்ல வேளை யாக ஒருநாள் வாழ்வோடு இந்த மாயை மறைந்து போனது. மறுபடி எந்நாளும் தலையெடுக்காமலே சென்று ஒழியட்டும்.

லஞ்ச ஊழல் போன்ற பெருங்குற்றங்கள் நடந்திருப்பதாகச் சிறிதளவு ஆதாரம் கிடைத்தாலும் அமைச்சரின் ராஜினாமாவை உடனடியாகப் பிரதமர் கோர வேண்டும். திறமைக் குறைவாக நடந்து கொண்டிருப்பாரேயானால் இலாக்கா மாற்றம் செய்யலாம். அதாவது பொறுப்பான அமைச்சகத்திலிருந்து அவரை நீக்கி, டி-பிரமோஷன் போன்று முக்கியத்துவம் இல்லாத ஒரு அமைச் சகத்துக்குத் தள்ளி விடலாம். இதனால் எதிர்காலத்திலேனும் அவர் எச்சரிக் கையாகச் செயல்படக் கூடும். மக்களுக்கு நீதி கிடைத்த உணர்வும் ஏற்படும்.

இவற்றையும் காலத்தோடு செய்ய வேண்டும். சர்க்கரை ஊழல் வெடித்த போதே இவ்வாறு நடந்து கொண்டிருந்தால், பங்கு பத்திர ஊழல் குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழு அறிக்கை வந்த உடனே அமைச்சர்கள் மீது உரிய நடவடிக்கையை ராவ்காரு எடுத்திருந்தால் அவர் மதிப்பு உயர்ந்திருக்கும். ஆந்திரா, கர்நாடக தேர்தல்களில் வெற்றி பெறா விட்டாலும் இவ்வளவு மோச மான தோல்வியைச் சந்திக்க நேர்ந்திராது.

ஆனால் ராவ் நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதைக் காலத்தோடும் செய்ய வில்லை. தள்ளாடி, தடுமாறிக் கொண்டிருந்ததற்குக் காரணம் என்ன என்று யோசித்தால் செயிண்ட்கிட்ஸ் விவகாரம் தொடங்கி, கோல்ட்ஸ்டார் விவகாரம் தொடர்ந்து, ஸூட்கேஸ் விவகாரம்வரை பலவும் நினைவுக்கு வரும். தார்மீக பலம் இல்லாதவர்களால் சட்டத்தின் ஆட்சியையோ, ஜனநாயக நல்மரபுகளையோ தர்மத்தையோ நிலை நிறுத்த முடியாது.

இப்போதுகூட ராவ் வேண்டாவெறுப்பாக எடுத்துள்ள நடவடிக்கைக்குக் காரணம், எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டம் மட்டுமல்ல; கட்சிக்குள்ளேயே அர்ஜுன் சிங் போன்றவர்கள் எழுப்பிய ஆட்சேபணைதான். 'காங்கிரஸை எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, மக்களும் நம்பவில்லை' என்று முந்நாள் ''லாட்டரி புனிதர்'' அர்ஜுன்சிங் கோஷம் எழுப்பியதைவிடவும், 'சோனியா காந்தியை அரசியலில் ஈடுபடச் செய்ய வேண்டும்' என்று இவர்கள் மிரட்டல் குரல் கொடுத்தது ராவுக்குப் பதவி பற்றிய பயத்தை நிச்சயம் ஏற்படுத்தியிருக்கும்.

அதன் விளைவாக எடுக்கப்பட்ட ராஜினாமா ஏற்பு நடவடிக்கை, அதன் பங்குக்குப் பின்விளைவை ஏற்படுத்தத்தான் போகிறது. இப்போது பதவி இழந்த அமைச்சர்கள் மூன்றாவதாக ஒரு கோஷ்டியை உருவாக்குவார்கள். இதனால் காங்கிரஸ் மேலும் பலவீனமடைவதைத் தவிர்க்க வேண்டுமானால் ஏற்கெனவே உள்ள அர்ஜுன்சிங் அண்டு கம்பெனி கோஷ்டியை ராவ்காரு வளைத்துப் போட வேண்டும். ஒன்று பட்டு, கட்சி நலனுக்கும் ஆட்சி நலனுக்கும் உழைத்த தாக மக்கள் நம்பும்படி நடந்து கொள்ள வேண்டும். தேவையின்றி பலியாடு களாக்கப்பட்ட ஏ.கே.அந்தோனி, ப.சிதம்பரம் போன்றோரை திரும்பவும் மைய அரங்குக்குக் கொண்டுவருவது பிரதமரின் கரங்களைப் பலப்படுத்துவது மட்டு மல்ல; அவர் தர்ம நியாயமாக நடந்து கொள்ள முற்படுகிறார் என்ற எண்ணத்தை மக்களிடம் உருவாக்கும்.

ஆட்சித் தலைமை, கட்சித் தலைமை இரண்டையும் கட்டிக் கொண்டு அழா மல், கட்சித் தலைமையைப் பொறுப்பான ஒருவரிடம் ஒப்படைக்க வாய்ப்பான தருணம் இது. இவ்வாறு சுமையைப் பகிர்ந்து கொள்வதால் ஆட்சி, கட்சி இரண்டுமே மேம்படும்.



நடமாடும் தெய்வமாய் விளங்கி நானிலத்தில் உள்ளவர்களை நல் வழிப்படுத்திய காஞ்சி காமகோடி பீடாதிபதி — ஸ்ரீ பரமாச்சாரியார் சுவாமிகளின் முதலாமாண்டு நினைவாஞ்சலியை ஒட்டி வருகிற 1.1.1995 அன்று காஞ்சி சங்கரமடத்தில் ஸ்ரீ பரமாச்சாரியார் சுவாமிகளைப் பற்றி ''தெய்வ தரிசனம்'' என்ற நூல் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளால் வெளியிடப்பட உள்ளது. இந் நூலில் பரமாச்சாரியார் சுவாமிகளை பக்தர்கள் சந்தித்த வினோத அனுபவங்கள், சுவாமிகளின் அரிய புகைப்படங்கள், கவிஞர்களின் கவிதைகள், உட்பட பல்வேறு சிறப்பம்சங்களுடன் 250 க்கும் மேற்பட்ட பக்கங்களுடன் வெளி வர உள்ளன.

இந்நூல் தமிழ் நாட்டின் ஒவ்வொரு பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மற்றும் நூலகங்களில் பொது மக்கள் படிக்க வேண்டிய அரிய பொக்கிஷம்.

இந்நூலின் விலை ரூ. 45/-. வருகிற (5.1.1995)க்குள் முன்கூட்டியே பணம் அனுப்புவோருக்கு ரூ. 30/-க்கு இப்புத்தகம் வழங்கப்படும். இந்த நல்ல நூல் வெளி வருவதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் காரணமாக இருக்கலாமே... உங்கள் நண்பர்களுக்கு இதனையே புத்தாண்டு பரிசாக கூட வழங்கலாம்.

புத்தகம் உங்களை உடன் வந்து சேரும்....

நூல் தொகையான ரூ. 30/- ஐ உடன்

கவிஞர் நெல்லை பாலு,
10, கூடலூர், மறைமலைநகர், கருநிலம் அஞ்சல்,
செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் - 603 204,
என்ற முகவரிக்கு அனுப்பவும்.



• தேவேகௌடா : முதல்வர்

தேவே கௌடா பதவி ஏற்பு...

மைசூர், மண்டியா, பெங்களூரின் எல்லையோர மாவட்டங்களெல்லாம் 'ஒக்கலிகர்கள்' என்று சொல்லப்படும் 'கௌடா' வகுப்பைச் சேர்ந்தவர்கள் அதிகம் வசிப்பதால் தேவேகௌடாவுக்கு அமோக செல்வாக்கு. 'கௌடர்கள் மிகுதியாக இருந்தும் ஹனுமந்தையா ஒருவர்தான் எங்கள் இனத்திலிருந்து முதல்வராக வந்தார். (விதான சௌதா கட்டப்பட காரணமாயிருந்தவர்) அவருக்குப் பின்னர் அந்த வாய்ப்பு எங்கள் இனத்தவருக்கு மறுக்கப்பட்டே வந்திருக்கிறது. இந்த முறை நாங்கள் விடப் போவதில்லை' - என்கிற மாதிரியான மனப்பான்மை கர்நாடகம் முழுக்க ஒக்கலிகர்கள் மத்தியில் எழுந்திருந்தது.

இந்த உணர்வைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றுதான் காங்கிரஸ் கட்சி கூட 'அடுத்த முதல்வர் ஒக்கலிகா இனத்தைச் சேர்ந்த எஸ்.எம். கிருஷ்ணாதான்' - என்று பட்டும்படாமலும் மறைமுகப் பிரசாரத்தில் ஈடுபட்டது. ஆனால் அந்த இனத்தவர்கள் மத்தியில் தேவேகௌடாவுக்கு இருக்கும் செல்வாக்கு வேறு யாருக்கும் இல்லை. துணை முதல்வராக இருந்த எஸ்.எம். கிருஷ்ணா தம்முடைய தொகுதியில் வோட்டுக் கேட்க போனபோது உடன் வந்தவர்கள், 'அடுத்த முதல்வர் நம்ம கௌடருதான். வோட்டுப் போடுங்கள்' என்று கேட்க, "கௌடர் முதல்வர் என்றால் தேவேகௌடர் வரட்டுமே... இவர் எதற்கு?" என்று கேட்கப் போக எஸ்.எம். கிருஷ்ணாவே அப்செட் ஆகிப் போனார். சொந்தத் தொகுதியிலேயே தோற்றும் போய்விட்டார்.

தேவேகௌடா முதல்வராக வரப் போகிறார் என்றவுடன் ஜே.எச். பட்டேல் - "முதல்வர் பதவிக்கு நானும் போட்டியிடுகிறேன்" என்றார்.

ஹெக்டே மந்திரிசபையில் பெயர் பெற்ற அமைச்சர்களில் ஒருவர் ஜே.எச். பட்டேல். நிறைய தொண்டர் படையை வைத்திருப்பவர். தமது சொந்தப் பண்ணைகளிலிருந்து வரும் ஏராளமான உணவுப் பொருட்களை வெறுமனே வியாபாரமாக்காமல் நிறைய அனாதை ஆசிரமங்களுக்கு வழங்குவதும் - இவரே சில அனாதை ஆசிரமங்களை நடத்தி வருவதும் மக்களிடையே இவருக்கு மதிப்பையும் செல்வாக்கையும் வளர்த்திருக்கும் விஷயங்களில் ஒன்று.

இதனாலெல்லாம் தேவேகௌடாவின் ஆதரவாளர்களுக்கு அதிர்ச்சி. அவர்களின் கோபம் முழுதும் ஹெக்டே மீது திரும்பிற்று. "ஜே.எச். பட்டேல் ஹெக்டேவின் ஆள். இவர் போட்டியிடுவதாக முன்வந்தால் முதல்வர் யார் என்பதில் சிக்கல் வரும். அந்தச் சமயம் தன்னை முதல்வராகப் பதவி ஏற்குமாறு கட்சியும் எம்.எல்.ஏக்களும் கோருவார்கள். தான் முதல்வராகி விடலாம் என்பதற்காக ஹெக்டே தீட்டும் சதித்திட்டம் இது" என்பதாகக் கருதி, "இதனை விடுவதில்லை; முறியடித்தே தீருவோம்" என்று தேவேகௌடாவின் ஆட்கள் வியூகம் வகுத்தனர். அவரது சொந்த ஊரான ஹொளே நரசிபூரிலிருந்து லாரிகளில் ஆட்கள் வந்து இறங்கினர்.

• ஜே.எச். பட்டேல் : துணை முதல்வர்

...ஏக கலாட்டா



பத்து நிமிடம் செலவழித்து, புத்தம்புது டயரி பெறுவோர் பட்டியல்.... (சென்ற வாரத் தொடர்ச்சி)

26. ஆர். முருகேசன், மே/பா திருமேனி செட்டியார், 2/52 ஒத்த தெரு, கபிஸ்தலம் (அஞ்). 614 203, தஞ்சை மாவட்டம்.

27. அ. இராஜேந்திரன், கதவு எண் 94 பி, பாண்டியன் நகர், 5ம் தெரு, திருத்தங்கல் - 626 130, காமராஜர் மாவட்டம்.

28. ரெ. மல்லபிள்ளை, 28, இரண்டாம் தெரு, காஞ்சிபுரம், ஆத்தூர் - 636 102, சேலம் மாவட்டம்.

29. ஜி. நாகராஜன், எல். ஏ. 3, லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை - 14.

30. சிவஞானம், 135/ஏ கச்சேரித் தெரு, காட்டுமன்னார் கோயில் - 608 301.

31. வி. எஸ். மீனலோசனி, 7/2 ஏ-2, பாரதியார் தெரு (மாடி), அய்யனார் திருமண மண்டபம் அருகில், விருதுநகர் - 626 001.

32. பி. சண்முகம், 83, 3வது தெரு, எஸ்.கே.பி. புரம், சென்னை - 28.

33. பி. ரெங்கசாமி, சின்னக்குப்பம் (அஞ்). அரூர் (தாலுக்கா), தருமபுரி மாவட்டம் - 636 903.

34. வெ. கந்தசாமி, "நாய்கர் தோட்டம்", படத்தை மன்குட்டை (அஞ்). சேந்தமங்கலம், நாமக்கல் தாலுக்கா.

35. மா. கார்த்திகேயன், 368, அழகேசன் ரோடு, கோவை - 641 011.

36. கே. சி. கந்தசாமி, 9ஏ, காளியம்மாள் வீதி, கே. கே. புதூர், கோவை - 38.

37. கே. ஆர். சண்முகசுந்தரி, 29, முதல் வீதி, முத்துப்பட்டணம், காரைக்குடி - 623 001.

38. வசந்தா பத்மநாபன், 31, 4வது மெயின் ரோடு, அடையாறு, சென்னை - 20.

39. பி. ரவிச்சந்திரன், 19/ஐ, எச்.ஐ.ஜி. பிளாட்ஸ், சௌத் அவென்யூ, திருவான்மியூர், சென்னை - 41.

40. ஆர். முத்து, 14ஏ, தெற்கு எடத் தெரு, புத்தூர், திருச்சி - 17.

41. N. Rajagopalan, Manager, New India Industrial & Savings Company Ltd., 24, Rajaji Nagar, Industrial suburb, Bangalore - 560 005.

42. எஸ். ஜயராம், 40, கவரைத் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 15.

43. S. Renganathan, Sriniketan, 4101/2, Extended MCC-'B' Block, PisaleThotta, Davangere - 577 004.

44. எஸ். ரங்கசாமி,பி.ஏ., மேட்டுப்பாளையம், எச்.பி.ஒ., 641301. கோயம்புத்தூர் மாவட்டம்.

45. K. Lakshminarasimhan, 49/1966, Sector Seven, CGS Qrts, Koliwada, Antop Hill, Bombay - 400 037.

46. சி.ரமேஷ், பாஸ்கர் இன்ஞ்சினியரிங் ஒர்க்ஸ், 45/ஏ, புட்டுதோப்பு ரோட், மதுரை - 625 010.

47. ஆர்.வெங்கடேஷ், ஆமூர் அக்ரஹாரம், ஆமூர் (போஸ்ட்), முசிறி (தாலுக்), திருச்சி மாவட்டம்.

48. எஸ்.ஆர். சத்யன் பாபு, 189/2, அக்ரஹாரம், துவரைமான் (போஸ்ட்), மதுரை - 625 010.

49. S.P. Sarathy, P.B. 29, Koyilandi - 673 305, Calicut Dt. (Kerala)

50. B. Venkatesan, B/2/R/2- New Municipal Building, Vikroli (W), Parksite, Bombay - 400 079.

கருத்துக் கணிப்பில் பங்கேற்று உதவிய அனைவருக்கும் நன்றி!

மறுநாள் தேவேகௌடா முதல்வராகப் பதவி ஏற்கும் வரையிலும் சட்டம் இவர்களின் கையில்தான். ஹெக்டேவை அடிக்கப் பாய்ந்தது -- அவரைப் பிடித்துத் தள்ளி, தோளிலிருந்த சால்வையை உருவி தகாத வார்த்தைகள் பேசியது, காரைக் கற்களாலும் செருப்புக்களாலும் தாக்கியது, ஜே.எச். பட்டேலைத் தாக்கியது, தேஷ்பாண்டேயைத் துரத்திக் கொண்டு ஓடி விதானசௌதாவின் லெட்ரீன் ஒன்றுக்குள் அவரைப் போட்டுப் பூட்டியது, விதானசௌதாவின் இரும்புக்கதவுகளை உடைத்துக் கொண்டு மூன்றாவது மாடி வரைக்கும் போய் கட்சி உறுப்பினர்கள் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது ஜன்னல் கதவுகளை உடைத்து தேவேகௌடாவுக்கு ஆதரவாய்க் கூச்சல் போட்டு......

கடைசியில் தேவேகௌடாவாலேயே இவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட - பதவி ஏற்பு நிகழ்ச்சிக்கு முன்னாள் முதல்வரோ, மாநில ஹைகோர்ட் நீதிபதிகளோ... இவ்வளவு ஏன் - குறைந்தபட்சம் தம்முடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ கூட கலந்து கொள்ள முடியாத ஒரு சூழலில் அவசர அவசரமாக ஐந்தே நிமிடத்தில் பதவி ஏற்பை முடித்துக் கொண்டு இறங்கிவிட வேண்டிய நிலைமை.

தேவேகௌடா என்ஜினியரிங்கில் டிப்ளமா பெற்றிருப்பவர். சட்டமன்றத்திலும் பாராளுமன்றத்திலும் சிறந்த முறையில் பணிபுரிந்திருப்பவர். பலமுறை அமைச்சராகவும் மாநிலக் கட்சித் தலைவராகவும் இருந்திருப்பவர். கட்சியைக் கட்டுக் கோப்புடன் நடத்துபவர் என்று பெயர் பெற்றவர்.

முதல்வர் பதவி என்பது தேவேகௌடாவின் நீண்ட கால கனவு; அது நனவாகிவிட்டது. இவரை நம்பியுள்ள கர்நாடக மக்களின் கனவை நனவாக்குவது தேவேகௌடாவின் கையில் உள்ளது.

பெங்களூரிலிருந்து : **அமுதவன்**



குற்றவாளிகளைக் காட்டிக் கொடுக்கும் உதடுகள்!

ஹங்கேரியில் 1961-ல் ஒரு வழக்கு விசாரணை நடந்தது. அதில், கொலை செய்த குற்றவாளி வீட்டை விட்டு வெளியேறும் போது, கதவின் தாழ்ப்பாளைத் திறப்பதற்கு, ரத்தக்கறை படிந்த தன் கைகளைப் பயன் படுத்தாமல், வாயால் திறந்தான். தாழ்ப்பாளில் பதிந்த உதட்டு ரேகை, புலன்விசாரணை செய்த போலீசின் கவனத்தைக் கவர்ந்தது. தாழ்ப்பாளில் பதிந்திருந்த உதட்டு ரேகையும், குற்றம் சாட்டப்பட்டவரின் உதட்டு ரேகையும் ஒன்றே என்று நிரூபிக்கப் பட்டு, தண்டனை பெற்றுத் தந்தது.

இந்த வழக்கு விசாரணைக்கு முன்னதாகவே கைரேகை போல, உதட்டு ரேகையும் குற்றப் புலனாய்வில் பயன்படக்கூடிய ஒரு மௌன சாட்சி என்பதை லெமோய்னே ஸ்லைடர் என்ற பிரெஞ்சு அறிஞரும், சுசுகி டாஷுகோவி என்ற ஜப்பானிய நிபுணரும் ஆராய்ந்து கூறியுள்ளனர்.

உதட்டில் உள்ள ரேகைகளைப் பற்றிய ஆராய்ச்சிக்கு கைலாஸ்கோப்பி (Cheiloscopy) என்று பெயர். உதட்டுக்குரிய கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது இப் பெயர். இது குறித்து டி.ஆர். குமாரி என்பவர், தமிழக தடய அறிவியல் துறையின் முன்னாள் டைரக்டரான பேராசிரியர் பி. சந்திரசேகரனின் ஆலோசனையின் பேரில் ஓர் ஆராய்ச்சி செய்திருக்கிறார்.

''இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள், மாவட்டங்களைச் சேர்ந்த ஆண், பெண்களின் உதடுகளை குளோஸ்அப் புகைப்படமெடுத்து ஆராய்ச்சி செய்தோம்; ஒவ்வொருவருடைய உதட்டு ரேகையும் ஒவ்வொரு மாதிரியாய் இருந்தது. ஆனாலும், கைரேகைக்கும், உதட்டு ரேகைக்கும் பெரியதொரு வித்தியாசம் உண்டு. கைரேகை விரலின் தோல் பரப்பின் மேலாக இருக்கும். ஆனால் உதட்டு ரேகையோ, உதட்டுப் பரப்பின் உள்புறமாய், வெடிப்பு போல இருக்கும்.

"கைரேகை போலவே உதட்டு ரேகையும் மாற்றமில்லாத நிரந்தரத் தன்மையுடையதா?"

"இல்லை. ஒவ்வொரு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கும் உதட்டு ரேகையில் லேசான மாற்றம் ஏற்படுகிறது. ஆனாலும், குற்றம் நிகழ்ந்து இரண்டு மூன்று ஆண்டு காலத்துக்குள் குற்றவாளியை நிருபணம் செய்ய இதனை சாட்சியாய்ப் பயன்படுத்த முடியும்.

"உதட்டு ரேகை மட்டுமின்றி, உதடுகளின் புற அமைப்பே, குற்றவாளிகளை அடையாளம் காட்டவும், கண்டுபிடிக்கவும் மிகவும் உபயோகமாய் இருக்கும் என்று கண்டறிந்திருக்கிறோம். உதடுகளின் புற அமைப்பை வைத்து, மேல் உதட்டின் மேற்புற வடிவம், இரு உதடுகளின் சேர்க்கையில் ஏற்படும் கோடு அமைப்பு, கீழ் உதட்டின் கீழ்ப்புற வடிவம் இவற்றின் அடிப்படையிலும், உதடுகளின் பக்கவாட்டுப் புறத்தோற்றத்தின் அடிப்படையிலும் பல்வேறு பிரிவுகளாய் உதட்டுப் பகுதியைப் பிரித்திருக்கிறோம். குற்றவாளிகளை அடையாளம் காட்டுவதில், உதடுகளின் அமைப்பு மிகவும் உபயோகமான ஓர் அங்கம் என்று உறுதியாய்ச் சொல்ல முடியும்!"

லோ, பஸ் பயணத்தின் போதோ அல்லது வீட்டிலேயோ கொள்ளையரைச் சந்திக்க நேர்ந்தால் கவனியுங்கள், அவர்களின் உதடுகளை!

- எஸ். சந்திரமௌலி

சென்ற வாரம்

ஓவியன் அகில் ரேடியோ போட்டி முடிந்து இரவு வீடு திரும்புகையில் லாரி அவன் காரில் வேண்டுமென்றே மோத வருகிறது. போலீஸில் புகார் செய்து விட்டு வீடு வரும் அகில், லிஃப்டுக்குள் நுழைய, அங்கே... லாரி காபினில் பார்த்த அந்த ஆண், அந்த பெண்!...

கொல்ல வல்லாயோ கிளியே...

ராஜேஷ் குமார்

2

அகிலின் முதுகுத் தண்டில் ஒரு ஐஸ் கட்டி ஸ்லோமோஷனில் வழுக்கியது. லாரி காபினில் பார்த்த அதே ஆண்; அதே பெண்தான். சந்தேகமே இல்லை.

அவர்கள் இருவரும் அகிலைப் பார்த்துப் புன்னகைத்தார்கள். ஆண் கேட்டான்.

"என்ன அகில்... போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் ரிப்போர்ட் பண்ணிட்டு வர்றியா...?"

லிஃப்ட் இப்போது இரண்டாவது மாடியைக் கடந்து கொண்டிருந்தது.

"நீ... நீங்க... யாரு...?"

"சாகப் போகிற உனக்கு... நாங்க யார்ன்னு தெரிஞ்சு என்ன பிரயோஜனம்...?" அவன் இடுப்பைத் தொட்டு, கத்தியை எடுத்துக் கொள்ள, அந்தப் பெண் மார்புப் பகுதிக்குள் கையை நுழைத்து, நவீன மோஸ்தரில் இருந்த பிஸ்டலை எடுத்துக் கொண்டாள்.

லிஃப்ட் இப்போது மூன்றாவது மாடிக்கு டாட்டா சொல்லிக் கொண்டு இருந்தது.

அகில், லிஃப்ட் மூலைக்குத் தேவையில்லாமல் ஒண்டினான். அந்த ஆண் சிரித்தான். 'நீ ஏழாவது மாடிக்குப் போறதுக்கு முந்தி ரத்தத்தைச் சிந்தி சாகணும்ங்கிறது விதி. எப்படி செத்தா உனக்குச் சந்தோஷமா இருக்கும்? கத்திக் குத்தா... இல்லே துப்பாக்கி தோட்டாவா...?"

அகிலின் விழிகள் ஸ்தம்பித்தன.

"ஏ... ஏ... எதுக்காக... ஏ... என்னை...?"

"கொலை செய்றீங்கன்னு கேக்கறியா...? நீ செத்தா ஒரு சந்தோஷம்தான்..."

இப்போது லிஃப்ட் நான்காவது மாடிக்கும் ஐந்தாவது மாடிக்கும் மத்தியில் இருந்தது.

அந்தப் பெண் ஒரு கோணல் சிரிப்பு சிரித்தாள்.

"எங்க லாரிக்கு நீ தப்பிச்சுட்டே... ஆனா இந்த கத்திக்கும் துப்பாக்கிக்கும் நீ தப்ப முடியாது. இன்னிக்கு நீ ரத்தத்தைச் சிந்த வேண்டிய நாள்..."

"வே... வேண்டாம்..." அகில் வியர்த்து சொதசொதத்தான்.

"என்ன வேண்டாம்...?"

"என்னைக் கொன்னுடாதீங்க..." அகில் அப்படியே மண்டியிட்டு உட்கார்ந்து அவர்களை சேவித்தான். கண்களில் கண்ணாடியாய் நீர்.

"ஸாரி அகில்...! நீ என்னைக் கும்பிட்டாலும் பிரயோசனம் இல்லை. இந்த கத்தியும், ரிவால்வரும் இப்ப ட்யூட்டியில் இருக்கு..."

லிஃப்ட் இப்போது ஆறாவது மாடியைக் கைவிட்டு ஏழாவது மாடியை நோக்கி உயர்ந்து கொண்டிருந்தது.

அந்த இளைஞன் கையில் இருந்த கத்தியும், அவள் கையில் இருந்த ரிவால்வரும் அகிலை நோக்கித் தாழ்ந்த விநாடி -

அகில் குபீரென்று பாய்ந்து தன் தலையால் அந்தப் பெண்ணின் வயிற்றில் மோத,

"ஹா...!"

அவள் அலறி ஒரு பக்கமாய்ச் சாய, அகிலின் மூர்க்கம் இப்

சிரிப்புச் சங்கத்தில் கேட்டது...



ஆறு மாசம் ஜெயில் தண்டனை அனுபவித்து விடுதலை ஆனவரை ஒருவர் கேட்டார், ''ஜெயிலில் இருந்தாயாமே! என்ன சார்ஜ்?'' அவர் சொன்னார், ''ஒண்ணுக்கும் சார்ஜ் பண்ணலை; எல்லாமே ஃப்ரீதான்!''

''என் முதல் பையன் ரயில்ல பிறந்தான், இப்போ எஞ்சின் டிரைவரா இருக்கான். இரண்டாவது பையன், பஸ்ல பிறந்தான், பஸ் டிரைவரா இருக்கான். மூன்றாவது பையன் ஆஸ்பத்திரியில பிறந்தான்...''

''டாக்டரா இருக்கானா?''

''இல்ல ஆம்புலன்ஸ் டிரைவரா இருக்கான்.''



போது அந்த இளைஞன் மேல் திரும்பியது.

''ர்ர்ரப்...'' அகிலின் பூட்ஸ்கால் கத்தி பிடித்திருந்த இளைஞனுடைய மணிக்கட்டை நொறுக்க, கத்தி எகிறியது.

''யார்ரா... நீ...? எதுக்காக... என்னைக் கொல்ல...'' அகில் ஆவேசமாய்க் கத்திக் கொண்டிருக்கும் போதே -

''த்தட்...''

ஏழாவது மாடியில் லிஃப்ட் நின்று, கதவுகளை விரியத் திறந்தது. அந்தப் பெண்ணும் அந்த இளைஞனும், வெளியே விருட்டென்று பாய்ந்து மாடி வராந்தாவில் தபதபவென்று ஓடினார்கள். மாடிப்படிகளில் இறங்கினார்கள்.

'இவர்களை விடக் கூடாது!'

அகில் துரத்தினான்.

''காட்ச் தெம்...'' அவன் கத்திய சத்தத்தில் மற்ற பிளாட்காரர்கள் கதவைத் திறந்து கொண்டு எட்டிப் பார்த்தார்கள்.

''என்ன மிஸ்டர் அகில்...?''

''ரெண்டு பேர்... என்னைக் கொல்ல வந்தாங்க... நான் திருப்பித் தாக்கினதும்... மாடிப்படிகள்ல இறங்கி ஓடிட்டிருக்காங்க...''

அகிலோடு மற்ற பிளாட்காரர்களும் சேர்ந்து கொண்டு மாடிப்படிகளில் இறங்க ஆரம்பித்தார்கள்.

''யார் அவங்க...?''

''தெரியலை...''

''எத்தனை பேர்...?''

''ரெண்டு பேர்... ஒரு ஆணும் பெண்ணும்...''

மற்றவர்கள் கேட்ட கேள்விகளுக்கு மூச்சிரைக்க பதில் சொல்லிக் கொண்டே, மாடிப்படிகளில் வேகமாய் இறங்கினான் அகில். மாடியின் வளைவுகளில் அந்த இளைஞனும், பெண்ணும் பார்வைக்குக் கிடைத்து உடனே மறைந்தார்கள்.

இரண்டே நிமிஷம்!

அபார்ட்மெண்டின் கீழ்த்தளத்துக்கு வந்தார்கள்.

அகிலுக்கு வியர்த்து ஊற்ற, வாயினால் சுவாசித்துக் கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தான்.

''எந்தப் பக்கமாய்ப் போனார்கள்?''

''அகில்! எங்கே... அவங்க...?'' ஓடி வந்தவர்களில் ஒருவர் கேட்டார்.

''அவங்க இந்த இடத்தை விட்டு அவ்வளவு சீக்கிரத்துல தப்ப முடியாது. ஏதாவது ஒரு பக்கம் ஒளிஞ்சிருக்கலாம். லெட் அஸ் சர்ச்.''

உடம்புகளில் ஜாக்கிரதையைத் தடவிக் கொண்டு கைகளில் டார்ச்சை ஏந்தி அபார்ட்மெண்ட்டைச் சுற்றியிருந்த பகுதிகளில் தேட ஆரம்பித்தார்கள்.

அவர்கள் தட்டுப்படவில்லை.

இன்ஸ்பெக்டர் அரவிந்தனுக்குத் தகவல் போய், அவர் துளசி அபார்ட்மெண்ட்டுக்கு வந்து சேர்ந்த போது இரவு பத்தரை மணி.

''வந்தது... அந்த லாரியில் பார்த்த அதே ஆணும் பெண்ணும்தானா... மிஸ்டர் அகில்...?''

''எஸ்... இன்ஸ்பெக்டர்...''

''இப்ப உங்களால அடையாளம் சொல்ல முடியுமா?''

''அடையாளம் சொல்றது மட்டும் இல்லை... இன்ஸ்பெக்டர்! அவர்களை என்னால் ஸ்கெட்ச் பண்ணியும் தர முடியும்...''

''மொதல்ல அடையாளம் சொல்லுங்க. பழைய குற்றவாளிகள்ல யாராவது பொருந்தி வர்றாங்களான்னு பார்க்கிறேன்...''

அகில் தன் இரண்டு கைகளாலும் முகத்தை வழித்து விட்டுக் கொண்டு, கண்களை ஒரு புள்ளியில் நிறுத்தி மெல்லிய குரலில் சொல்ல ஆரம்பித்தான்.

''அந்த இளைஞனுக்கு முப்பது வயது இருக்கலாம். நீள்வட்ட முகம். கலைந்த

தலைக்கேசம். கோபமான சின்னக் கண்கள். மோவாய்க்குக் கீழே சின்னதாய் ஒரு காயத் தழும்பு. இளஞ் சிவப்பில் உயரக் கழுத்து டீ ஷர்ட், கறுப்பு பேண்ட், அந்தப் பொண்ணுக்கு இருபத்தஞ்சு வயது இருக்கும். அழகான முகம். நல்ல நிறம். லேசாய் அலை படிந்த முடி, இலேசான கிளி மூக்கு. அதே கிளிப் பச்சை நிற சல்வார் கமீஸ் அணிந்து, காதுல பெரிய வளையம் போட்டிருந்தாள்."

"இதுக்கு முன்னாடி அந்த ரெண்டு பேரையும் எங்கேயாவது பார்த்திருக்கீங்களா...?"

"இல்லை..."

அரவிந்தன் தன் சதை பிடிப்பான தாடையை இடது கை விரல்களால் வழுவிக் கொண்டே கேட்டார்.

பிட்டாங்க. அகில் ஒரு ஃபேன்ஸி நேம். பெயர்க் குழப்பம் வர வாய்ப்பில்லை."

"ஏதாவது பழைய முன்விரோதங்கள்...?"

"இல்லவே இல்லை..."

"மோத வந்த அந்த லாரி யாரோடதுன்னு தெரிஞ்சா, இந்த கேஸ்ல ஓரளவுக்கு வெளிச்சம் கிடைக்கும். லாரியைக் கண்டுபிடிக்க தீவிரமான முயற்சிகளை எடுத்துட்டிருக்கோம்."

அகில் விரக்தியாய்ச்



"உங்களைக் கொலை பண்ண அவர்களுக்கு என்ன மோடிவ்?"

"அதையும் அவங்ககிட்டேயே கேட்டேன் இன்ஸ்பெக்டர். என்னோட கேள்விக்கு அவங்க சரியான பதில் சொல்லலை. நான் செத்தா அவங்களுக்குச் சந்தோஷமாம்... இன்னிக்கு நான் ரத்தம் சிந்த வேண்டிய நாளாம்..."

"வேற யாரையோ கொலை பண்ண திட்டம் போட்டவங்க தப்பா உங்களைக் கைகாட்டி விட்டிருக்காங்கன்னு நினைக்கிறேன்."

"எனக்கு அப்படித் தோணலை..."

"எதை வெச்சு சொல்றீங்க...?"


"வந்தவங்க என் பேரைச் சொல்லிக் கூப்

சிரித்தான். "நான் செத்துப் போவதில் அந்த ரெண்டு பேருக்கும் என்ன சந்தோஷம்னு தெரியலை."

"மிஸ்டர் அகில்! அவர்களை ஸ்கெட்ச் பண்ணித் தர்றதாச் சொன்னீங்களே... அது எப்ப கிடைக்கும்...?"


"நாளைக்குக் காலையில ஏழு மணிக்கெல்லாம் என்னோட டேபிள் மேல தயாரா யிருக்கும். ஆர்ட் காலரிக்

சி... ச... கே...



"சாகக் கிடக்கற நீங்க எதுக்காக ஹெல்மெட் கேக்கறீங்க?"

"'இறப்பைத் தவிர்க்க ஹெல்மெட் அணியுங்கள்'ன்னு எங்கேயோ படிச்ச ஞாபகம்."



"பத்து ரூபாய் நோட்டு பத்து கொடுத்தேனே! அவ்வளவையுமா ஓட்டலுக்குச் செலவழிச்சிட்டே?"

"பசி வந்திட பத்தும் பறந்து போகும்னு தெரியாதா?"

- தொகுப்பு : ஜலீ

குப் போகிற வழியில் நானே ஸ்டேஷன்ல கொண்டு வந்து தர்றேன்..."

"வேண்டாம்... அவங்க ரெண்டு பேரும் பிடிபடுகிறவரை நீங்க இந்த பிளாட்டை விட்டு வெளியே வரக் கூடாது. அந்த ஸ்கெட்ச்களை கலெக்ட் பண்ணிக்க நாளைக்குக் காலையில நானே வர்றேன்..."

"தாங்க்யூ..."

"பை... த... பை... மிஸ்டர் அகில்! உங் களைக் கொலை செய்ய முயற்சிக்கிற அந்த இரண்டு பேரும் பிடிபடற வரைக்கும் உங்க பாதுகாப்புக்காக இந்த பிளாட் வராந்தாவில் ஒரு சென்ட்ரி கான்ஸ்டபிள் இருப்பார். ஏதாவது உதவி தேவைப்பட்டா நீங்க அவர் கிட்டே சொல்லலாம்..."

"தாங்க்ஸ்... ஏ... லாட்... இன்ஸ்பெக்டர்..."

மறுநாள் காலை ஏழு மணி.

இன்ஸ்பெக்டர் அரவிந்தன் அபார்ட் மெண்டின் ஏழாவது மாடிக்கு லிஃப்ட்டில் பயணித்து வந்த போது, வராந்தாவில் காவ லுக்கு இருந்த கான்ஸ்டபிள் எதிர்கொண்டு சல்யூட் வைத்தார்.

"ராத்திரி... எந்தப் பிரச்னையும் இல் லையே?"

"இல்ல... ஸார்..."

"அகில் எந்திரிச்சுட்டாரா...?"

"தெரியலை ஸார்... ராத்திரி உள்ளே போனவர் இன்னும் வெளியே வரலை..."

அரவிந்தன் அகிலின் ப்ளாட் கதவுக்கு முன்பாய் நின்று அழைப்பு மணிக்குரிய பொத்தானை அழுத்தினார்.

அது 'டி...டிங்க்...' என்றது.

கதவு திறக்கப்பட காத்திருந்தார்.

உள்ளே நிசப்தம்.

ஒரு நிமிஷ அவகாசத்திற்குப் பிறகு, இன்ஸ்பெக்டர் மீண்டும் காலிங்பெல்லை உசுப்பினார்.

"டி...டிங்க்க்..."

கதவு திறக்கக் காத்திருந்தார். அதே பழைய நிசப்தம்.

இன்ஸ்பெக்டரின் மனசுக்குள் ஒரு பயப் பட்சி 'கீச் கீச்' என்று கத்த, குனிந்து கதவின் சாவி துவாரத்தில் கண்ணை வைத்து ஒரு அவசரப் பார்வையை உள்ளே அனுப்பி னார்.

கட்டிலிலிருந்து கீழே விழுந்திருந்தான் அகில். கைகளும் கால்களும் மடங்கித் தெரிய, மல்லாந்த நிலை.

இறந்த கண்கள்.

இறந்த வாய்.

கழுத்துப் பகுதியில் கெட்டியாய் உறைந்து போன செங்கல்நிற ரத்தம்.

(தொடரும்)

நாங்கள் சொல்வது, புதிய ஃபோர்ப்ஸ் மிக்ஸர் கிரைண்டரிலுள்ள ஹை-காப் மோட்டாரைப் பற்றிதான். அதில் சரியான அளவு காப்பர் வைண்டிங் உள்ளதால், மற்ற மிக்ஸிகளைப் போல இது அதிக சூடாவதில்லை. எனவே இதில் தயாரிக்கப்படும் இட்லி, வடை, சட்னி, கோஃப்தா, அல்வா போன்ற உணவு வகைகள் மிகவும் சுவையாக இருக்கின்றன.

தொழில்நுட்பத் துறையில் வல்லுநர்களால் ஹை-காப் மோட்டார் வடிவமைக்கப் பட்டுள்ளது. மேலும் இந்த மோட்டார் சமநிலையுடன் பொருத்தப்பட்டிருப்பதால், மிக்ஸியில் அதிர்வோ அல்லது ஆட்டமோ ஏற்படுவதில்லை... இத்தனை சிறப்பம்சங்கள், எத்தனை குறைந்த விலையில்!

எனவே இன்றே நீங்களும் புதிய ஃபோர்ப்ஸ் மிக்ஸர் கிரைண்டர் வாங்கிப் பாருங்கள்.

அசர வைக்கும் அசல் சுவை மீண்டும் பெறுங்கள் .



சிறப்பம்சங்கள்:

★ 3 ஜார்கள் ★ மாற்றுவதற்கேற்ற 4 பிளேடுகள் ★ சிறப்பான கார்ட் வைண்டர் ★ கூடுதல் பாதுகாப்பிற்கு ரீசெட் ஸ்விட்ச் கொண்ட ஓவர்லோடு மோட்டார் புரொட்டெக்டர் ★ இன்டிகேட்டர் லேம்ப்

தயாரிப்பாளர்: FAL இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
விற்பனை செய்வோர்:

LATHAM.

லேதம் இண்டியா லிமிடெட்

(ஃபோர்ப்ஸ் கோகக் குரூப்பின் கம்பெனி)
ஆர்த்தி சேம்பர்ஸ், மூன்றாம் மாடி,
189 அண்ணா சாலை, சென்னை-600 006.
போன்: 8524303, 8524222, 8524661
டெலக்ஸ்: 41-5247 ஃபேக்ஸ்: 044-8522012

விநியோகஸ்தர்கள்/டீலர்கள் விண்ணப்பிக்கவும்.

.:.போர்ப்ஸ்
மிக்ஸர் கிரைண்டர்

கனவு மெய்ப்படும் - 17

ஒரே உளர்;

சூரியனில் பயிர் விளைவதில்லை. ஆனால் சூரியனால் பயிர் விளைகிறது. அதேபோல துறவியிடம் செயல் இல்லை. ஆனால் துறவியால் செயல் நிகழ்கிறது. இதனால்தான் எல்லாச் செயல்களில் இருந்தும் விலகிவிட்ட சந்யாஸியைக் கர்மயோகியாகக் கருத முடிகிறது.

காலைக் கதிரொளி கிழக்கைக் கிழித்ததும் பறவைகள் பாடுகின்றன. பூக்கள் அழகை முணுமுணுத்தபடி உதட்டைத் திறக்கின்றன. இருட்டு என்ற போர்வையை உதறி எறிந்து விட்டு பூமி சோம்பல் முறிக்கிறது. விவசாயி வயலுக்குப் புறப்படுகிறார். இவர்களை இந்தக் கடமைகளை ஆற்றும்படி சூரியன் வேண்டுகோள் விட்டதா? இவையனைத்தையும் செய்விக்க வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டு சூரியன் உதித்ததா? இல்லை... இல்லவே இல்லை...

ஏன் என்றால் சூரியன் உண்மையில் உதிப்பதே இல்லை. தன்னுடைய அணுக்களைத் தானே எரித்துக் கொண்டு ஓயாமல் ஒளிவீசுகிறது. துறவியும் அப்படித்தான். தன்னைத்தானே சுத்திகரித்துக் கொண்டே ஞானஒளி வீசுவதே துறவியின் இயல்பு. அவரது ஞான ஒளி மக்களைத் தூய கடமையில் தூண்டுகிறது. நினைவில் வையுங்கள்... திருமணம் என்கிற பந்தத்தில் இருந்து முற்றிலும் விலகி நிற்கும் துறவியின் பெயரைப் பொறித்து, அவரது அனுக்ரஹத்துடன் திருமணம் நடைபெறுவதாகப் பத்திரிகை போடுகிறோம். இது என்ன முரண்பாடு? முரண்பாடில்லை.. அறியாமை இருட்டில் இல்லற தர்மம் தடுமாறாதபடி துறவியின் ஞான ஒளி வழிகாட்டுகிறது. அதனைப் புரிந்து கொள்வது அவசியம்.

துறவிக்கு என்று விதிக்கப்பட்ட எந்தக் கடமையும் இல்லை. அவரது கரங்கள் அக்னியைத் தீண்டுவதில்லை. அவரது தோள்கள் யக்ஞோபவீதத்தைத் தாங்குவதும் இல்லை. அவர் சமைப்பதும் இல்லை. பகிர்வதும் இல்லை. பிட்சை மட்டுமே. ஆனால் என்னே ஆச்சர்யம்! காவியாடைக்குள் ஒரு கற்பூர ஜோதியாக, ஒரு நூற்றாண்டு கால ஒளி விளக்காக விளங்கிய காஞ்சி மகா முனிவர், ஒரு குக்கிராமத்தில் பாதம் பதித்ததும் யாகயக்ஞங்கள் மட்டின்றி நடக்கும். கும்பாபிஷேகத்தைப் பல்லாண்டு பார்க்காத கோவில் குளங்களில் ஆகம அக்கினி ஆகாயம் தழுவும். எந்த மண்ணை அந்த மகான் மிதித்தாலும் அன்னதானம் அதிகம் நடக்கும். ஆக, எல்லாக் கர்மாக்களிலும் விலகி நிற்கும் துறவியின் சந்நிதானத்தில் எல்லாக் கர்மாக்களும் நன்கு நடக்கின்றன. இது கருதியே "கர்மபலனைச் சாராது, செய்ய வேண்டிய கர்மத்தைச் செய்பவனே ஸந்யாஸி. அவனே யோகி" என்கிறது கீதை... (அத்.6.சுலோ.1)

துறவியின் மனோநிலையில் செயல்களை மட்டும் விட்டு விடாத கர்ம யோகியைப் பெரிதும் பாராட்டும் பகவத் கீதை, அடுத்து செயல்களையும் விட்டு விட்ட ஞானியை- ஸந்யாஸியைச் சிறப்பிக்கிறது. உண்மைத் துறவும்-உண்மையான கர்மயோகமும் பயிற்சியாளனை (சாதகன்) ஒரே இடத்தில் கொண்டு விடும் என்பதால் "பாண்டவா.. எதை ஸந்யாஸம் என்கிறார்களோ அதையே யோகம் என்று அறிக" (அத்.6. சுலோ 2) என்கிறார்.

விவேகானந்தரும் ராமகிருஷ்ணரும் வேறு வேறு தான். செய்து முடித்ததோ ஒன்றே ஒன்று தான். ஆனால் ராமகிருஷ்ணர் ஞானயோகம் பயின்ற துறவி. விவேகானந்தர் கர்மயோகம் பயின்ற துறவி. இறைவனில் அனைத்தையும் கண்டவர் ராமகிருஷ்ணர். அனைத்திலும் இறைவனைக் கண்டவர் விவேகானந்தர். மனைவி அருகிருக்க, வெள்ளை வேட்டியுடன், சந்யாஸியாக வாழ்ந்தவர் ராமகிருஷ்ணர். மனைவியின்றி, காவியாடையுடன், உலக மக்களைக் குடும்பமாகப் பாவித்த உத்தமர் விவேகானந்தர். இதிலிருந்து நாம் அறிவது என்ன? கர்மயோகம், கர்மசந்யாஸம் இரண்டையும் பாகுபடுத்த முடியாது. காரணம், இரண்டிலும் மனத்தளவில் துறவுணர்ச்சி என்பது மையமாகிப் போனதால் இரண்டும் இறுதியில் ஒரே நிலைக்கு நம்மைச் செலுத்துகின்றன.

துறவி என்ற புற அடையாளங்களைத் தரித்துக் கொண்டு மனத்தளவில் பந்தப் படுகிறவர்களைக் கீதை கேலி செய்கிறது. ஆசார்ய வினோபா பாவே இதை அழகாகக் கேலி செய்கிறார். "இல்லறத்தான் இருபத்தி நாலு மணிநேரமும் விதவிதமான கவலைகளில் சிக்குகிறான். சில துறவிகளோ இருபத்தி நான்கு மணிநேரமும் ஒரே கவலையில் இருக்கிறார்கள். எப்படியோ, கவலையில் இருப்பது என்பதில் இருந்து இருதிறத்தாரும் விடுபடவில்லை. இல்லறத்தான் துக்கம் 8/16 என்றால் சில துறவிகளின் துக்கம் 1/2... எப்படிச் சொன்னாலும் மதிப்பு ஒன்று தான்!" என்றவர், மேலும் "இரண்டு ஞானிகள் இமாலயத்தின் குகையில் இருந்தாலும் ஒருவருக்கு

மற்றவர் புகழைக் கேட்கச் சகிப்பதில்லை... என்னே ஸந்யாஸம்...?'' என்கிறார்.

உறங்காவில்லி என்ற இல்லற நெறி நின்ற வேட்டுவ குலச் சீடர் மீது தம்முடைய துறவறச் சீடர்களை விடவும் மிகுந்த அன்பு செலுத்தினார் ராமானுஜர். இது அவருடைய ஸந்யாஸ சீடர் களுக்குப் பிடிக்கவில்லை. ஒருமுறை ஸந்நியாஸ சீடர்கள் காவியாடை கிழிந்திருந்தபோது ஒருவர் மற்றவர் மீது சந்தேகப்பட்டு, மாறி மாறி மற்றவர் களைக் குறை கூறினார்கள். உறங்காவில்லியின் பெருமையை விளக்க இதுதான் சந்தர்ப்பம் என்று ராமானுஜ முனிவர் முடிவு செய்தார்.

தம்முடைய நம்பிக்கைக்குரிய திருமண் அணிந்த வைணவர்களை அழைத்து உறங்கா வில்லியின் வீட்டுக்குச் சென்று, வில்லி இல் லாதபோது அவரது மனைவி பொன்னாயி உறங் கும் சமயம் பார்த்து, அவளது வைரத்தோடு, நகைகளைத் கழற்றி வரும்படி பணித்தார். ஒரு பக்கமாகப் படுத்திருந்த பொன்னாயி வைணவ பக்தர்கள் நகை கழற்றுவதை உணர்ந்தும் தெரியாதவள் போல்' படுத்திருந்தாள். ஒரு பக்கம் முழுவதும் கழற்றிய பிறகு, அடுத்த பக்கம் உள்ள தோடு முதலியவற்றைக் கழற்றிக் கொள் ளட்டும் என்று பக்கம் மாறிப் படுத்தாள். அவள் விழித்துக் கொண்டதாகப் பயந்து வைணவர்கள் ராமானுஜரிடம் ஓடி வந்து, கிடைத்த நகைகளைக் கொடுத்தனர்.

சிறிது நேரம் கழித்து வீடுதிரும்பிய உறங் காவில்லி நிகழ்ந்தது அறிந்து கொதித்துப் போனார். மனைவியை வைது, இனி உன்னுடன் வாழமுடியாது என்று கோபமாகப் புறப்பட்டு விட்டார். என்ன கோபம்...? அவர்களாகவே கழற்றிக் கொள்ள விடாது, திரும்பிப் படுத்ததால் வைணவர்கள் பயந்து வெளியேறிவிட்டார்களே என்கிற கோபம்! 'பாகவதர்கள் தேவைக்கு உதவாமல் பாவி விரட்டி விட்டாளே' என்று மனைவியிடம் கோபம். 'நல்லதுதானே நினைத் தேன்' என்ற பொன்னாயி சொற்கள் அவருக்கு ஏற வில்லை.

ராமானுஜரிடம் முறையிட இருவரும் வந் தார்கள். நகைகளை எடுத்து முன் வைத்த ராமா னுஜர், தமது சந்நியாஸ சீடர்களை அழைத்தார். விலை உயர்ந்த நகைகளைப் பற்றிக் கவலைப் படாது பக்தர்கட்கு உதவ முடியாமல் போன வில் லியின் துக்கம். கிழிந்து போன காவித் துணிக்காக ஒருவருடன் ஒருவர் சண்டையிட்ட சந்நியாஸி களின் துக்கம்.. இரண்டையும் ஒப்பிட்டு, வில்லியின் சந்நியாஸமும் அவன் மனைவியின் சந்நியாஸமும் சந்நியாஸிகளின் சந்யாஸத்தைவிட மேலானது என்று விளக்கினார். காவிநிறம் தியாகத்தின் அடையாளம்... சந்நியாஸம் மனசில்தான் இருக்க வேண்டும். துணியில் மட்டும் அல்ல!



இரண்டு பாதைகள்!

சுகி சிவம்



போட்டிக் கதை — 17

மரம் வைத்தவர்கள்

சிவப்புத் தோலில் ஆங்காங்கே கருப்புப் புள்ளிகள். இந்திய வரை படம் போன்று முகம் முழுகும் சுருக்கங்கள். கூனிக் குறுகிப் போயிருந்தாள். வெளுத்துப் போன எட்டு கஜப் புடைவை. பார்த்தவுடன் சொல்லி விடலாம். உழைத்து உழைத்து ஓடாய்ப் போயிருக்கிறாள் என்று. கையில் ஒரு பிடி அறுந்து போய், மற்றொரு பிடியுடன் கட்டப்படிருந்த மஞ்சள் பை. வாசல்படி அருகே நின்று கொண்டே கூப்பிட்டாள்.

"குழந்தே... குழந்தே...!"

கண்களில் ஒரு எதிர்பார்ப்பு. நம்பிக்கை.

குரல் கேட்டு விமலா வெளியே வந்தாள்.

"என்ன வேணும்?"

"அம்மாடி குழந்தே.. பேத்திக்குக் கல்யணம் நிச்சயம் ஆயி ருக்கு.. ஆண்டவன் புண்ணியத்துல. நம்மள மாதிரி பெரிய மனசுக்காரா உதவி பண்ணுவான்ற தைரியத்துல ஏற்பாடு பண்ணிட்டேன். குழந்தே... என்னோட பொண்ணு மாதிரியே இருக்கே. முடிஞ்சதைக் கொடுத்தா ஆண்டவன் புண்ணியத்துல ஏதோ முடிச்சிடு வேன்..."

விமலா முகம் சுளித்தாள்.

"ஹூம், கௌரவப் பிச்சை! பிரிண்ட் பண்ணி இத்தனூண்டு காகிதத்தை வெச்சுண்டு டொனேஷன், நன்கொடைன்னு ஒரு குரூப்.. இப்படி ஒரு குரூப்..."

"அப்படிச் சொல்லாத குழந்தே..! என் பேத்தி கல்யாணத்துக்காகத்தாம்மா கேட்கறேன்...."

"அதெல்லாம் ஒண்ணும் தர முடியாது. போயிட்டு வாங்கோ...."

பாட்டியின் முகத்தில் பயங்கர ஏமாற்றம்.

தயக்கமாய்த் திரும்பிய போது சோமநாதன் உள்ளிருந்து எட்டிப் பார்த்தான்.

"என்ன சத்தம்... யார் இந்தப் பாட்டி?"

விமலாவுக்கு முன் பாட்டி முந்திக் கொண்டாள்.

"பேத்திக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்கேன்பா. வறுமைடா குழந்தே இப்படி தெருத் தெருவா அலைய வைக்கிறது.."

"நல்ல விஷயத்துக்காகத்தானே அலையறேள் பாட்டி... நாட்டுல நல்லவா இல்லாமலா போயிடுவா? இருங்க வரேன்..." அவன் சொல்லி வாயை மூடும் முன் விமலா அவசரமாய் உள்ளே ஓடினாள்.

"என்ன மறுபடியும் பாரிவள்ளல் ஆகப் போறீங்களா?"

"எதுக்கு சண்டை?"

"என்னை விட வாசல்ல வர்ற அல்பங்கள், பரதேசிகள் உங்களுக்கு முக்கியம், அப்படித்தானே...?"

"நம்ப பேச்சை அப்புறம் வெச்சுக்கலாம். வாசல்ல அந்தப் பாட்டி காத்திட்டிருக்கா. உள்ளாரக் கூப்பிட்டுப் பேசி அனுப்பணும்..."

"என்னை மீறிச் செய்யணும்னே செய்யறேள். ஒருநாள் நானும் இதே மாதிரி வீடு வீடா என் ஆம்படையானுக்கு 'அண்டர்வேர்' வாங்கணும்னு நிற்கப் போறேன்..."



"ஆண்டவன் செயல் இருந்ததுன்னா யாருக்கு வேணா எதுவும் வரலாம். நினைச்சுக்கூட பார்க்காதே. நினைப்பே பிழைப்பை உண்டுபண்ணும்!"

சோமநாதன் பாட்டியிடம், "பாட்டி... என்னால முடிஞ்சது 50 ரூபாய்தான். நிறைய செய்யணும்னு ஆசையிருக்கு. ஆனா வசதி இல்ல..." என்றான்.

பாட்டி கண்களில் நீர் எட்டிப் பார்த்தது.

அவள் போனதும் விமலா வெடித்தாள்.

"அந்தக் கிழம் உண்மையா சொல்றது...? அப்பட்டமாய்ப் பொய். பேத்திக்குக் கல்யாணம்ன்னு ஊரை ஏமாத்திண்டிருக்கு. கண்ட பரதேசிகிட்டே நல்ல பேர் வாங்கினாப் போறாது. கட்டின பொண்டாட்டி கிட்ட நல்ல பேர் வாங்கணும். ஓரளவு தானம் தர்மம் தேவைதான். இப்படி இருக்கக் கூடாது தெரிஞ்சுக்கோங்கோ. கல்யாணம் ஆகி இத்தனை வருஷத்துல ஒரு ஹனிமூன் கிடையாது, சினிமா கிடையாது."

"ஏன் குழந்தையையும் சேர்த்துகோயேன்...!"

"என்னை மலடின்னு சொல்லாம சொல்றீங்க!"


"சேச்சே... விமலா... அப்படியெல்லாம் இல்லை. அதெல்லாம் இயற்கையோட வரம்மா. நம்ம கையில் என்ன இருக்கு...!"

விமலா எழுந்து அவன் தோளில் கை போட்டுக் கொண்டாள்.

"என்னங்க... நான் என்ன தப்பா சொல்றேன். வீணா ஏமாந்து பணம் கொடுக்கறது வேண்டாம்னு தானே சொல்றேன். அந்தப் பாட்டி பக்கா பிராடுன்னு பார்த்தாலே தெரியுதுங்கன்னு சொன்னேன்...."

சோமநாதன் சிரித்தான்.

சோம சேகர பாகிமான்



பார்வையாளர் : என்னங்க? ராக்கெட் விடாம ராக்கெட் வெடி விடுறாங்க!

அதிகாரி : வித்தது போக மீதி இருக்கும் ரகசியத்திற்கு இதைத்தான் விட முடியும்!

- பர்வதவர்த்தினி



கான்ஸ்டபிள் - 1 : என்ன தப்பு செய்தார்னு நம்ம எஸ்.ஐயை சஸ்பெண்ட் பண்ணியிருக்காங்க?

கான்ஸ்டபிள் - 2: காட்டுக்குள்ள வீரப்பனைப் பார்த்ததும் பாய்ஞ்சு பிடிக்காம ரொம்ப உணர்ச்சிவசப்பட்டு ஆட்டோகிராப் மட்டும் வாங்கிட்டு வந்துட்டாராம்!

- அரிசி ஸ்ரீராம்

"விமலா... அது எனக்கு மட்டும் தெரியாதுன்னு நினைக்கிறியா... வேற எதுக்கு பாட்டி கேக்கப் போறா... வயிறு! வயிறுன்னு ஒண்ணு இருக்கே. தெரிஞ்சே தாம்மா கொடுத்தேன். நாம அந்த ஐம்பது ரூபாயை வேறு ரூபத்துல சம்பாதிச்சிடலாம்... ஆனா அந்தப் பாட்டியை நினைச்சுப் பாரு. அவள மட்டும் இல்லை; அவளோட பின்னணியைக் கொஞ்சம் நினைச்சுப் பாரு. அவ இந்த நிலைமைக்கு வந்த காரணம் கொஞ்சம் 'திங்க்' பண்ணிப் பாரு.

"பையன் சரியில்லையோ, மருமகள் அடிச்சுத் துரத்திட்டாளோ... குழந்தையே இல்லையோ... யோசிம்மா யோசி...! யாரையும் நேரிடையாப் பார்த்து அவா அப்படி, இப்படின்னு எடை போட்டுடக் கூடாது. ஏன் உண்மையான காரணத்தைச் சொல்லியும் உதவி கேட்டு வரலாமில்லையா...?"

"உங்களோட பேசி ஜெயிக்க முடியாது!"

"விமலா... 'மரம் வெச்சவன் தண்ணி ஊத்துவான்'னு ஒரு பழமொழி இருக்கு தெரியுமா...! நான் தராட்டி உலகில் யாருமே இல்லேங்கிறியா...!"

"போதுமே உங்க லெக்சர்!"

இரண்டு நாள் கழித்து விமலாவின் அப்பா வந்திருந்தார். விமலா முகத்தில் அதி பயங்கர சந்தோஷம். ரொம்ப நாள் கழித்து அப்பா வந்திருக்கிறார்.

"வாங்கப்பா, அம்மா சவுக்கியமா?"

"எல்லாம் நல்லாயிருக்கா. நீ எப்படிம்மா இருக்கே...?"

"நல்லாருக்கேன்! எப்படி வந்தீங்க? பஸ் வசதியெல்லாம் எப்படி? ஒழுங்கா கிடைச்சதாப்பா...?"

கேட்ட விமலாவை, சாமிநாதன் பரிதாபமாகப் பார்த்தார்.

"அதையேன் கேட்கிறே... பிழைத்து வந்ததே பெரும் புண்ணியமாப் போச்சும்மா...!"

விமலா திடுக்கிட்டாள்.

"என்னப்பா சொல்றீங்க...!"

"ஊருக்கு ஸ்ட்ரெய்ட் பஸ் கிடைக்கலம்மா. சரி வேலூரர் வந்து போயிடலாம்னு கிளம்பினேன். நல்ல வேளை வேலூருக்கு டிக்கெட் வாங்கிட்டேன்! வேலூர்ல இறங்கிப் பையைத் தொட்டுப் பார்க்கிறேன். ஒரு பைசா கூடக் காணோம். பர்ஸை எவனோ அடிச்சிட்டானோ இல்லை நான்தான் தொலைச்சிட்டேனோ! பிச்சைக்காரனை விட கேவலமான நிலைமையில் பஸ்-ஸ்டாண்டில் நிக்கிறேன். தெரியாத ஊரு. எவன்கிட்ட போய் உதவி கேட்கறது. ஒண்ணுமே புரியலைம்மா..."

"என்னப்பா இவ்வளவு அஜாக்கிரதையாவா பயணம் செய்யறது! பணத்தை எப்படி விட்டீங்க...? எப்படி நம் வீட்டுக்கு வந்தீங்க...?"

"எப்படி வந்தேன்? பணம் காணும்னு நான் சொன்னதை ஒரு பயலும் நம்பவேயில்லை தெரியுமாம்மா. என்ன இப்படியும் மாடர்னா பிச்சை எடுக்க வந்திட்டீங்களான்னு அடிச்சு விரட்டாத குறையா எல்லாரும் துரத்தறானுங்க. ஆனா நல்லவங்களும் நம் நாட்டில இருக்காங்கம்மா..! ஒரு பஸ் டிரைவர்கிட்ட எதேச்சையா என் நிலைமையைச் சொல்ல, அவர் மெட்ராசுக்கு ஒரு பஸ் டிக்கெட் வாங்கியே கொடுத்து, கைச் செலவுக்கு இருபது ரூபாயும் கொடுத்தார்.

"அவர் மட்டும் உதவி செய்யலேன்னா என் நிலைமை என்னவாயிருக்கும்னே சொல்லியிருக்க முடியாது. போலீஸ்கிட்டேயும் போய்ச் சொன்னேன். 'என்னையே ஏமாத்த ஆரம்பிச்சிட்டியா'ன்றான். அந்த டிரைவர் அட்ரஸ் வாங்கி வந்திருக்கேன். தயவுசெய்து அவருக்கு ஒரு நன்றிக் கடிதத்தோட பணத்தையும் மாப்பிள்ளையை அனுப்பிடச் சொல்லிடும்மா...!"

சாமிநாதன் சொல்வதைக் கேட்க கேட்க விமலாவுக்கு என்னவோ போலிருந்தது.

கடவுளே, நாட்டில் எல்லோரும் ஏமாற்றியே பிழைக்கிறான்னு நினைச்சது தப்போ! ஒரு வேளை நம் அப்பாவையும் அப்படி நினைத்து யாரும் உதவி செய்யாமல் போயிருந்தால்?

விமலாவுக்குச் சட்டென்று ஏதோ தெளிந்த மாதிரி இருந்தது.

பார்த்திபன் கனவு

9. தந்தையும் மகளும்!

குந்தவி தாயில்லாப் பெண். அவளுடைய அன்னையும் பாண்டிய ராஜகுமாரியும் நரசிம்மவர்மரின் பட்ட மகிஷியுமான வானமாதேவி, குந்தவி ஏழு வயதுக் குழந்தையாயிருந்தபோதே சுவர்க்கமடைந்தாள்.

இந்தத் துக்கத்தை அவள் அதிகமாக அறியாதவண்ணம் சில காலம் சிவகாமி அம்மை அவளைச் செல்லமாய் வளர்த்து வந்தாள். இந்தச் சிவகாமி தேவி பிரசித்தி பெற்ற ஆயனச் சிற்பியின் மகள். நரசிம்மவர்மரால் வாதாபியிலிருந்து சிறை மீட்டு வரப்பட்டவள். பட்டமகிஷியின் மரணத்துக்குப் பிறகு நரசிம்மவர்மர் சிவகாமியை மணம் புரிந்து கொள்வாரென்று சில காலம் பேச்சாயிருந்தது. ஆனால் அவ்விதம் ஒன்றும் நடக்கவில்லை. சில வருஷ காலத்துக்கெல்லாம் சிவகாமிதேவியும் சுவர்க்கம் புகுந்து விட்டாள்.

பிறகு, சக்கரவர்த்தியே குந்தவிக்குத் தாயும் தகப்பனுமாயிருந்து அவளை வளர்க்க வேண்டியதாயிற்று. அந்தப்புரத்தில் குந்தவிக்கு பாட்டிமார்கள் - மகேந்திரவர்மருடைய பத்தினிகள் சிலர் இருந்தனர். ஆனால் அவர்களுக்கும் குந்தவிக்கும் அவ்வளவாக மனப் பொருத்தம் ஏற்படவில்லை. குந்தவியின் தாயாரைக் குறித்து, "தெற்கத்தியாள்" என்று அவர்கள் குறைகூறியதையும், சிவகாமி தேவியைப் பலவிதமாக நிந்தை செய்ததையும் குந்தவி குழந்தைப் பருவத்தில் கேட்டிருந்தாள். இதனாலேயே பாட்டிமார்களிடத்தில் அவளுக்குப் பற்றுதல் உண்டாகவில்லை. குந்தவியின் நடை உடை பாவனைகளும், அவள் எதேச்சையாகச் செய்த காரியங்களும் அந்தப் பாட்டிமார்களுக்குப் பிடிக்கவில்லை. நரசிம்மவர்மர் இந்தப் பெண்ணுக்கு ரொம்பவும் இடங்கொடுத்துக் கெடுத்து வருகிறார் என்ற குறையும் அவர்களுக்கு உண்டு.

இக்காரணங்களினால் குந்தவிக்குத் தன் தந்தையிடமுள்ள இயற்கையான பாசம் பன்மடங்கு வளர்ந்திருந்தது. அப்பாவுடன் இருக்கும்போதுதான் அவளுக்குக் குதூகலம்; அவருடன் வார்த்தையாடுவதில்தான் அவளுக்கு உற்சாகம். அவருடன் சண்டை பிடிப்பதில்தான் அவளுக்கு ஆனந்தம். அவர் தன்னை உடன் அழைத்துப் போகாமல் ராஜரீகக் காரியங்களுக்காக வெளியூர்களுக்குப் போயிருந்தால், அவளுக்கு ஒருநாள் போவது ஒரு யுகம் போவது போலிருக்கும்.

சக்கரவர்த்திக்கோ என்றால், ஏன்? அவருடைய பிராணனே குந்தவியாக உருக்கொண்டு வெளியில் நடமாடுகிறது என்று கருதும்படி இருந்தது. அவருடைய விசால இருதயமானது ஓராணொரு காரணத்தினால் பல ஆண்டுக் காலம் வறண்டு பசையற்றுப் பாலைவனமாயிருந்தது. அப்படிப்பட்ட இருதயத்தில் குந்தவியின் காரணமாக மீண்டும் அன்பு தளிர்த்து ஆனந்தம் பொங்கத் தொடங்கியது. குந்தவியின் ஒவ்வொரு சொல்லும், செயலும், நோக்கும், சமிக்ஞையும் சக்கரவர்த்திக்குப் புளகாங்கிதம் உண்டாக்கின.

தந்தையின் வரவை எதிர்நோக்கிக் குந்தவி தேவி அரண்மனை உப்பரிகையின் நிலா மாடத்தில் உட்கார்ந்திருந்தாள். பௌர்ணமிக்குப் பிறகு மூன்று நாள் ஆகியிருக்கலாம், கிழக்கு அடி வானத்தில் வரிசையாக உயர்ந்திருந்த பனை மரங்களுக்கு நடுவில், சிறிது குறைந்த சந்திரன், இரத்தச் சிவப்பு ஒளியுடன் உதயமாகிக் கொண்டிருந்தான். மற்ற நாட்களாயிருந்தால் அழகு மிகுந்த இந்த வானக் காட்சியின் வனப்பில் ஈடுபட்டு மெய்ம் மறந்திருப்பாள். ஆனால், இன்று இரவு அவளுக்கு எதிலுமே மனம் செல்லவில்லை. வீதியில் குதிரை மீது வைத்துச் சங்கிலியால் பிணைத்துக் கொண்டு போகப்பட்ட இராஜகுமாரனுடைய ஞாபகமாகவே அவள் இருந்தாள். அவனைப் பற்றி விசாரிப்பதற்காகவே தந்தையின் வருகையை வழக்கத்தை விட அதிக ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

கடைசியாக, நரசிம்மவர்மரும் வந்து சேர்ந்தார். குந்தவி அவரை ஓடி வரவேற்று,

அமரர் கல்கி

அவருடைய விசாலமான இரும்புத் தோள்களைத் தன் இளங் கரங்களினால் கட்டிக் கொண்டு தொங்கினாள். "ஏன் அப்பா, இன்றைக்கு இத்தனை நேரம்?" என்று கேட்டாள். என்றுமில்லாத அவளுடைய பரபரப்பையும் ஆர்வத்தையும் பார்த்து நரசிம்மவர்மர் ஆச்சரியப்பட்டுப் போனார். "அப்படியொன்றும் நேரமாகி விடவில்லை. அம்மா! தினம் போலத்தானே வந்திருக்கிறேன். ஏதாவது விசேஷம் உண்டா?" என்று கேட்டார்.

குந்தவி ஏதோ சொல்ல ஆரம்பித்தவள் சட்டென்று நிறுத்திக் கொண்டாள். "ஒரு விசேஷம் இருக்கிறது அப்பா! ஆனால் இப்போது சொல்ல மாட்டேன். நீங்கள் முதலில் சொல்லுங்கள். சபையில் ஏதாவது விசேஷம் உண்டா?" என்று கேட்டாள்.

"ஆமாம்; உண்டு. இலங்கையிலிருந்து இன்றைக்குச் செய்தி வந்தது. அங்கே நடந்த பெரும் போரில் நமது சைன்யங்கள் மகத்தான வெற்றியடைந்தனவாம். 'இலங்கை மன்னன் சமாதானத்தைக் கோருகிறான்; என்ன செய்யட்டும்?' என்று உன் தமையன் ஓலை அனுப்பியிருக்கிறான்."

"ரொம்ப சந்தோஷம், அப்பா! அப்படியானால் அண்ணா சீக்கிரம் திரும்பி வந்து விடுவானோ இல்லையோ?"

"கொஞ்ச காலம் கழித்துத்தான் வருவான். மதுரையில் உன் மாமாவுக்குக் கொஞ்ச நாளாகத் தேக அசௌகர்மாயிருக்கிறதாம்; அங்கே போய்க் கொஞ்ச காலம் இருந்து விட்டு வரச் சொல்லியிருக்கிறேன். நீயும் வேணுமானால் மதுரைக்குப் போய் வருகிறாயா, குழந்தாய்! உன் மாமா உன்னைப் பார்க்க வேணுமென்று எவ்வளவோ ஆசைப்படுகிறாராம்."

"அதெல்லாம் முடியாது. நான் உங்களை விட்டுப் போக மாட்டேன். இருக்கட்டும்; இன்னும் ஏதாவது விசேஷம் உண்டா, அப்பா!"

"உண்டு; சோழ நாட்டில்...."

"சோழ நாட்டில்" என்றதும் குந்தவியின் உடம்பில் படபடப்பு உண்டாயிற்று. இதைப் பார்த்த சக்கரவர்த்தி மிகவும் வியப்படைந்தவராய், "என்ன! குந்தவி! உனக்கு என்ன உடம்பு?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை. அப்பா! சோழ நாட்டில் என்ன விசேஷம்? சொல்லுங்கள்" என்றாள் குந்தவி.

"சோழ நாட்டில் காழி என்னும் ஊரில் ஒரு இளம்பிள்ளை தெய்வ சாந்நித்யம் பெற்று மகா ஞானியாய் விளங்குகிறாராம். சிவபெருமான் பேரில் தீந்தமிழ்ப் பாடல்களைத் தேனிசையாய்ப் பொழிகிறாராம். தீராத வியாதிகள் எல்லாம் அவர் கையினால் திருநீறு வாங்கி இட்டுக் கொண்டால் தீர்ந்து விடுகிறதாம். ஞான சம்பந்தர் என்று பெயராம்!"

"நன்றாயிருக்கிறது, போங்கள். யமனுக்கு அப்படி ஒரு விரோதி கிளம்பியிருக்கிறாரா? அந்தப் பிள்ளை திருநீறு கொடுத்து வியாதிகள் எல்லாவற்றையும் தீர்த்துக் கொண்டு போனால், யமலோகமல்லவா சூனியமாய்ப் போய் விடும்? நீங்களுந்தான் இப்போதெல்லாம் யுத்தம் செய்வதையே நிறுத்தி விட்டீர்கள்!" என்றாள் குந்தவி.

"எல்லாம் உன்னாலேதான்! நீ என் கழுத்தைக் கட்டிக் கொண்டு விட மாட்டேனென்றால், நான் யுத்தத்துக்குப் போவது எப்படி? உன்னை வேறொருவன் கழுத்தில் கட்டி விட்டால், அப்புறம்..."

"அப்புறம் அவன் பாடு அதோகதிதான்! அது கிடக்கட்டும், அப்பா! இன்றைக்கு வேறு விசேஷம் ஒன்றுமில்லையா!" என்றாள் குந்தவி.

"ஆமாம், இன்னும் ஒரே ஒரு விசேஷம் இருக்கிறது. கடல் மல்லைக்கு நாம் போயிருந்த போது உறையூரிலிருந்து ஒரு தூதன் வந்தானே, ஞாபகம் இருக்கிறதா? நீ கூட விஷயத்தைக் கேட்டு விட்டு, 'அந்தச் சோழ ராஜகுமாரனை நன்றாய்த் தண்டிக்க வேண்டும்' என்று சொன்னாயே? அவனைச் சிறை பிடித்து இன்றைக்கே கொண்டு வந்து சேர்த்தார்கள்...."

"அப்பா! அவனைச் சங்கிலிகளால் கட்டிக் குதிரை மேல் வைத்துக் கொண்டு வந்தார்களா?" என்று குந்தவி கேட்டாள்.

"ஆமாம்; உனக்கு எப்படித் தெரிந்தது" என்றார் சக்கரவர்த்தி.

"மத்தியானம் நான் கோயிலுக்குப் போய்க் கொண்டிருந்த போது வீதியில் பார்த்தேன்."

குந்தவியிடம் வழக்கமில்லாத படபடப்பு அன்று ஏற்பட்டிருந்ததின் கார

அருள்வாக்கு

"**சு**க்லாம்பரதரம்" ச்லோகம் எதற்கும் ஆரம்பத்தில் சொல்கிறோமே, அதிலே ஒரு பெரிய வேடிக்கை! என்னவென்றால், அதில் பிள்ளையாருடைய பெயர் எதுவுமே வரவில்லை! சொல்லிப் பாருங்கள்.

சுக்லாம்பரதரம், விஷ்ணும்,
சசிவர்ணம், சதுர்புஜம்
ப்ரஸந்ந வதநம் த்யாயேத்
ஸர்வ விக்நோபசாந்தயே

சுக்லாம்பரதரம், விஷ்ணும், சசிவர்ணம், சதுர்புஜம், ப்ரஸந்ந வதநம் என்று வருகிற ஐந்து வார்த்தைகளில் எதுவுமே பிள்ளையாரொருவரை மட்டுந்தான் குறிக்கிறது என்று சொல்வதற்கு இடமில்லாமலிருக்கிறது.

(இந்த ஐந்து வார்த்தைகளில் ஒவ்வொன்றுக்கும் ஒரு குட்டாக ஐந்து தரம் நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ள வேண்டும்.)

அப்புறம், 'த்யாயேத்' என்பதற்கு 'த்யானிக்க வேண்டும்' என்று அர்த்தம்.

எதற்காக த்யானிக்க வேண்டும்? "ஸர்வ விக்ந உப சாந்தயே" - எல்லா விக்னங்களும், அதாவது, தடைகளும் இடையூறுகளும் அடங்கி மறைந்து போவதற்காகவே. இங்கேதான், ஒரு நாமாவாகச் சொல்லாவிட்டாலும், பிள்ளையாருக்கென்றே ஏற்பட்ட விசேஷ லக்ஷணம் தெரிகிறது. எடுத்த கார்யம் விக்னமில்லாமல் நடக்க வேண்டுமென்றால் அதற்கென்று பிரார்த்திக்கப்பட வேண்டிய ஸ்வாமி பிள்ளையார்தான். அதனால்தான் எந்தக் கார்யத்தையும் ஆரம்பிக்கிறபோதே அவருக்குப் பூஜை பண்ணி விடுவது; இந்த ஒரு ச்லோகமாவது சொல்லி நெற்றியில் குட்டிக் கொண்டு விடுவது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



ணத்தை நரசிம்மவர்மர் அப்போது அறிந்து கொண்டார்.

"ஒருவேளை அவனாய்த்தானிருக்கும். அது போகட்டும், குழந்தாய்! நமது அப்பர் பெருமானின் பதிகம் ஒன்றைப் பாடு பார்க்கலாம்" என்றார் சக்கரவர்த்தி.

"அப்பா அந்த இராஜ குமாரனை இராத்திரி எங்கே வைத்திருப்பார்கள்?" என்று குந்தவி கேட்டாள்.

"வேறு எங்கே வைத்திருப்பார்கள்? காராக்கிரகத்தில் வைத்திருப்பார்கள்!"

"ஐயையோ!"

"என்ன குழந்தாய்? எதைக் கண்டு பயப்படுகிறாய்!" என்று நரசிம்மவர்மர் தூக்கி வாரிப் போட்டாற்போல் எழுந்து நாலுபுறமும் பார்த்தார்.

குந்தவி அவரைக் கீழே அமர்த்தி, "ஒன்றுமில்லை, அப்பா! காராக்கிரகத்திலிருந்து அந்த ராஜகுமாரன் தப்பித்துக் கொண்டு போய் விட்டால் என்ன செய்கிறது என்று பயந்தேன்!" என்றாள்.

"இவ்வளவுதானே!" என்று சக்கரவர்த்தி புன்னகை செய்து, "அந்த மாதிரியெல்லாம் பயப்படாதே! பல்லவராஜ்யாதிகாரம் இன்னும் அவ்வளவு கேவலமாய்ப் போய் விடவில்லை. விக்கிரமன் தப்ப முயன்றானானால் அந்த க்ஷணமே பல்லவ வீரர்களின் பன்னிரண்டு ஈட்டி முனைகள் அவன் மீது ஏக காலத்தில் பாய்ந்துவிடும்!" என்று சொன்னார்.

இந்தக் கடூரமான வார்த்தைகளைக் கேட்டு, குந்தவியின் உடம்பு இன்னும் அதிகமாகப் பதறிற்று.

"அப்பா! நான் ஒன்று சொல்கிறேன், கேட்கிறீர்களா?" என்றாள் குந்தவி.

"நான் கேட்காவிட்டால் நீ என்னை விடத்தான் போகிறாயா?" என்றார் சக்கரவர்த்தி.

"அந்த இராஜ குமாரனுடைய முகத்தைப் பார்த்தால் அப்படியொன்றும் பொல்லாதவனாகத் தோன்றவில்லை அப்பா! யாரோ துஷ்ட மனிதர்கள் அவனுக்குத் துர்ப்போதனை செய்து இப்படி அவனை உங்களுக்கு விரோதமாய்க் கிளப்பி விட்டிருக்க வேண்டும்."

"நீ சொல்வது ரொம்ப வாஸ்தவம். நான் கூட அவ்வாறுதான் கேள்விப்பட்டேன். யாரோ ஒரு சிவனடியார் அடிக்கடி இந்த விக்கிரமனையும் அவனுடைய தாயாரையும் போய்ப் பார்ப்பதுண்டாம். அந்த வேஷதாரிதான் விக்கிரமனை இப்படிக் கெடுத்திருக்க வேண்டுமென்று தகவல் கிடைத்திருக்கிறது."

"பார்த்தீர்களா? நான் எண்ணியது சரியாய்ப் போயிற்றே! உறையூரில் என்னதான் நடந்ததாம்? பெரிய சண்டை நடந்ததோ? ரொம்பப் பேர் செத்துப் போனார்களோ?"

"பெரிய சண்டையுமில்லை. சின்னச் சண்டையுமில்லை; இந்த அசட்டுப் பிள்ளை ஏமாந்து அகப்பட்டுக் கொண்டதுதான் லாபம். மாரப்ப பூபதி என்று இவனுக்கு ஒரு சித்தப்பன் இருக்கிறான். அவன் பெரிய படைகளைத் திரட்டிக் கொண்டு வருகிறேன் என்று இந்தப் பிள்ளையிடம் ஆசை காட்டியிருக்கிறான். அவன் அன்றைக்குக் கிட்டவே வரவில்லை. அதோடு, நமது தளபதி அச்சுதவர்மரிடம் சமாசாரத்தையும் தெரியப்படுத்தி விட்டான். அன்று பல்லவ வீரர்கள் ஆயத்தமாய் இருந்தார்கள். வெளியூர்களிலிருந்து வந்த சில ஜனங்களை ஊருக்கு வெளியிலேயே வளைத்துக் கொண்டு விரட்டி விட்டார்கள். விக்கிரமனோடு கடைசியில் சேர்ந்தவர்கள் ஒரு கிழக் கொல்லனும், ஒரு படகோட்டியும், இன்னும் நாலைந்து பேருந்தான். கிழவன் அங்கேயே செத்து விழுந்து விட்டான். மற்றவர்களையெல்லாம் சிறைப்படுத்தி விக்கிரமனை மட்டும் என் கட்டளைப்படி இங்கே அனுப்பினார்கள்...."

"ஐயோ, பாவம்!" என்றாள் குந்தவி.

"எதற்காகப் பரிதாபப்படுகிறாய், அம்மா! இராஜத் துரோகம் ஜயிக்கவில்லையே என்று

பரிதாபப்படுகிறாயா?"

"இல்லை, இல்லை, இந்த இராஜகுமாரன் இப்படி ஏமாந்து போய் விட்டானே என்றுதான். ஆமாம் அப்பா! இந்த மாதிரி நடக்கப் போகிறதென்று உங்களுக்கு முன்னாலேயே தெரிந்திருந்ததே, அது எப்படி?"

"என்னிடந்தான் மந்திர சக்தி இருக்கிறது என்று உனக்குத் தெரியுமே?.... ஆமாம், அப்பர் பெருமானின் பதிகம் பாடப் போகிறாயா இல்லையா?" என்று மீண்டும் சக்கரவர்த்தி கேட்டுப் பேச்சை மாற்ற முயன்றார்.

"அப்பா எனக்கு ஒன்று தோன்றுகிறது. இந்தத் தடவை மட்டும் அந்த இராஜகுமாரனை நீங்கள் மன்னித்து விட்டால்..."

"என்ன சொன்னாய் குந்தவி! பெண்புத்தி என்பது கடைசியில் சரியாய்ப் போய் விட்டதே? அன்றைக்கு அவனைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்றாயே! அதனால்தான் பெண்களுக்கு இராஜ்ய உரிமை கிடையாதென்று பெரியவர்கள் வைத்திருக்கிறார்கள்..."

"சுத்தப் பிசகு! பெண்களுக்கு இராஜ்ய உரிமை இருந்தால் உலகத்தில் சண்டையேயிராது. அந்த இராஜகுமாரனை மட்டும் நான் சந்தித்துப் பேசினேனானால் அவனுடைய மனத்தை மாற்றிவிடுவேன். முடியுமா, முடியாதா என்று பார்க்கலாமா, அப்பா?"

"முடியலாம்! குழந்தாய், முடியலாம். அவனுடைய மனத்தை மாற்றுவது உன்னால் முடியாத காரியம் என்று நான் சொல்லவில்லை. உனக்கு முன்னால் எத்தனையோ ஸ்திரீகள் புத்திசாலிகளை அசடுகளாக்கியிருக்கிறார்கள் வைராக்ய சீலர்களைப் பைத்தியமாக்கியிருக்கிறார்கள் வீரர்களைக் கோழைகளாக்கியிருக்கிறார்கள். இதற்கு மாறாக சாதாரண மனுஷ்யர்களைப் புத்திசாலிகளாகவும் வைராக்கிய புருஷர்களாகவும், வீரர்களாகவும் செய்த ஸ்திரீகளும் இருந்திருக்கிறார்கள். பெண் குலத்துக்கு இந்தச் சக்தி உண்டு. உண்மைதான்; நீ நினைத்தாயானால், விக்கிரமனைச் சுதந்திரம் என்ற பேச்சையே மறந்து விடும்படி செய்து விடலாம். ஆனால், உன்னுடைய சாமர்த்தியத்தை நீ கொஞ்சம் முன்னாலேயே காட்டியிருக்க வேண்டும். அவன் குற்றம் செய்வதற்கு முன் உன் பிரயத்தனத்தைச் செய்திருக்க வேண்டும். இனிமேல் பிரயோஜனமில்லை, அம்மா! குற்றவாளியைத் தண்டித்தேயாக வேண்டும். இன்று விக்கிரமனை சும்மா விட்டு விட்டால் நாளைக்கு ஒவ்வொரு ஊரிலும் ஒருவன் கலகம் செய்யக் கிளம்புவான். அப்புறம் இராஜ்யம் போகிற வழி என்ன?"

இந்த வார்த்தைப் புயலில் அகப்பட்ட குந்தவி பதில் சொல்லத் தெரியாமல் திகைத்து நின்றாள். சற்று நேரம் பொறுத்து, "அப்பா! அவனுக்கு என்ன தண்டனை விதிப்பீர்கள்?" என்று கேட்டாள்.

"இப்போது சொல்ல முடியாது குந்தவி! நாளைக்குத் தர்மாசனத்தில் உட்கார்ந்து விசாரணை செய்யும் போது என்ன தண்டனை நியாயமென்று தோன்றுகிறதோ, அதைத்தான் அளிப்பேன். நியாயத்திலிருந்து ஒரு அணுவளவேனும் தவறினார்கள் என்ற அவச்சொல் இதுவரையில் பல்லவ வம்சத்துக்கு ஏற்பட்டதில்லை; இனிமேலும் ஏற்படாது" என்றார் சக்கரவர்த்தி.

10. துறைமுகத்தில்

அன்றிரவு குந்தவி சரியாகத் தூங்கவில்லை. சோழ ராஜகுமாரனுடைய சோகமும் கம்பீரமும் பொருந்திய முகம் அவள் மனக்கண்ணின் முன்னால் இடைவிடாமல் தோன்றி அவளுக்குத் தூக்கம் வராமல் செய்தது. நள்ளிரவுக்குப் பிறகு சற்றுக் கண்ணயர்ந்த போது, என்னவெல்லாமோ பயங்கரமான கனவுகள் தோன்றியதால் அவள் அடிக்கடி திடுக்கிட்டு கண்விழிக்க வேண்டியதாயிற்று.

சோழ ராஜகுமாரனைக்



கழுத்து வரையில் பூமியில் புதைத்திருக்கிறது. அவனை நோக்கி ஒரு மதயானை அதி வேகமாக ஓடி வருகிறது. அடுத்த நிமிஷம், ஐயோ! யானையின் கால்கள், - தூணை யொத்த கால்கள், அந்தக் குமாரனுடைய தலையை இடறி விடப் போகின்றன! குந்தவி பதைபதைப்புடன் ஓடி வந்து யானை வரும் வழியில் நிற்கிறாள். யானை தன் துதிக்கையினால் அவளை லாவகமாகத் தூக்கித் தன் முதுகின் மேல் வைத்துக் கொண்டு மேலும் ஓடுகிறது. குந்தவி பயங்கரத்துடன் எதிரே பூமியில் புதைந்து நிற்கும் ராஜகுமாரனுடைய முகத்தைப் பார்க்கிறாள்! அந்தச் சமயத்திலும் அந்த முகத்தில் அலட்சியமும் அவமதிப்பும் கலந்த புன்னகை குடிகொண்டிருப்பதைக் காண்கிறாள். "ஐயோ!" என்று கதறிக் கொண்டு கண் விழிக்கிறாள். கண்டதெல்லாம் கனவென்று தெரிகிறது. ஆனாலும் அவள் உடம்பு வெகுநேரம் நடுங்கிக் கொண்டிருக்கிறது.



சற்று நேரத்துக்கெல்லாம் மறுபடியும் கண்ணயர்ந்து வருகிறது. அரைத் தூக்கத்தில் மீண்டும் பயங்கரமான கனவு. கழு மரங்கள் வரிசையாக நட்டிருக்கின்றன. சோழ ராஜகுமாரனைக் கழுவேற்றுவதற்காகக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள். குந்தவி அவ்விடத்துக்கு ஓடோடியும் வருகிறாள். துர்க்கை அம்மனை மனத்தில் தியானித்துக் கொண்டு அந்தக் கழுமரங்கள் பற்றி எரிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறாள். அவையெல்லாம் தீப்பற்றி எரிகின்றன. குந்தவி அளவில்லாத மகிழ்ச்சியுடன் இராஜகுமாரன் நின்ற இடத்தை நோக்குகிறாள். அந்தோ! அவனைச் சுற்றிலும் பன்னிரண்டு பல்லவ வீரர்கள் நின்று பன்னிரண்டு ஈட்டிகளை அவன் மீது செலுத்தச் சித்தமாயிருக்கிறார்கள். அடுத்த கணத்தில் ஈட்டிகள் அந்த அரசிளங்குமாரனுடைய மிருதுவான தேகத்தில் பாயப் போகின்றன. குந்தவி "ஐயோ!" என்று கதறிக் கொண்டு கீழே விழுகிறாள். கண் விழித்துப் பார்த்தால், மஞ்சத்திலிருந்து கீழே விழுந்திருப்பதாகத் தெரிகிறது.

இதன் பிறகு குந்தவி தூங்குவதற்குப் பிரயத்தனம் செய்யவில்லை. யானையின் காலில் வைத்து இடறுதல், கழுவேற்றுதல் முதலிய கொடூரமான தண்டனைகளெல்லாம் தன் தகப்பனாரின் தர்ம ராஜ்யத்தில் இல்லையென்பதை ஞாபகப்படுத்திக் கொண்டு தைரியமடைந்தாள்.

ஒருவாறு இரவு கழிந்து பொழுது விடிந்தது. சக்கரவர்த்தி சபைக்குப் புறப்படும் நேரமும் வந்தது. அவரிடம் மறுபடியும் சோழ ராஜகுமாரனைப் பற்றிப் பேச வேண்டும் என்று குந்தவி துடிதுடித்தாள். ஆனால் சக்கரவர்த்தியைப் பரிவாரங்கள் சூழ்ந்திருந்தபடியால் அது சாத்தியமாயில்லை. அவர் விடை பெற்றுக் கொண்டு கொஞ்ச தூரம் சென்று விட்டார். ஏதாவது சொல்லாவிட்டால் குந்தவிக்கு நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. "அப்பா! நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும்" என்றாள். நரசிம்மவர்மர் அவளைத் திரும்பிப் பார்த்து, "எதைச் சொல்கிறாய், குந்தவி! ஓகோ! சோழ ராஜகுமாரனைக் கடுமையாய்த் தண்டிக்க வேண்டுமென்று சொன்னாயே. அதுதானே? ஞாபகம் இருக்கிறது!" என்று சொல்லி விட்டுப் பின்னர் திரும்பிப் பார்க்காமலே சென்று விட்டார்.

குந்தவிக்குச் சொல்ல முடியாத ஆத்திரமும் துக்கமும் பொங்கிக் கொண்டு வந்தன. விரைந்து பள்ளியறைக்குச் சென்று மஞ்சத்தில் குப்புறப்படுத்துக் கொண்டு, கொஞ்ச

நேரம் விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். தன்னாலேதான் சோழ ராஜகுமாரன் கடுந்தண்டனை அடையப் போகிறான் என்ற எண்ணம் அவள் மனத்தில் வேரூன்றி விட்டது. இது அவனுக்குத் தெரியும் போது எவ்வளவு தூரம் தன்னை வெறுப்பானென்ற எண்ணம் அவளைப் பெருவேதனைக்கு உள்ளாக்கியது.

தான் ஏதாவது செய்துதான் ஆக வேண்டுமென்று அவள் பதைபதைத்தாள். சற்று நேரத்துக்கெல்லாம் அரண்மனை அதிகாரியை அழைத்து வரச் செய்து, "உதயவர்மரே! இன்று சக்கரவர்த்தியின் சபையில் சோழ ராஜகுமாரனுடைய விசாரணை முடிந்ததும் அதன் விவரத்தை உடனே எனக்கு வந்து தெரியப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு கண நேரங்கூட இதில் தாமதம் கூடாது" என்றான். அரண்மனை அதிகாரி, "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லிச் சபைக்கு ஆளையும் அனுப்பி வைத்தார்.

குந்தவி அன்று வழக்கமான காரியங்கள் ஒன்றும் செய்யவில்லை. நந்தவனம் சென்று மலர் எடுக்கவில்லை. ஆலயங்களுக்கும் போகவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு இராஜசபையிலிருந்து எப்போது ஆள் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். கடைசியாக அந்த ஆளும் வந்து சேர்ந்தான். விசாரணையையும் முடிவையும் பற்றி விவரமாகக் கூறினான் :

சக்கரவர்த்தி ரொம்பவும் கருணை காட்டினாராம். 'இப்போதாவது பல்லவ சாம்ராஜ்யத்துக்குப் பணிந்து கப்பம் செலுத்துவதாக ஒப்புக் கொண்டாயானால் உன்னுடைய குற்றத்தை மன்னித்துச் சோழ ராஜ்யத்துக்கும் முடிசூட்டி வைக்கிறேன்' என்றாராம். அதைச் சோழ ராஜகுமாரன் ஒரே பிடிவாதமாக மறுத்து விட்டானாம். அதோடு நில்லாமல், சக்கரவர்த்தியைத் தன்னுடன் வாட்போர் செய்யும்படி அழைத்தானாம்! அதன் மேல் சக்கரவர்த்தி தீர்ப்பு கூறினாராம்! அவனுடைய இளம்பிராயத்தை முன்னிட்டு அவனுக்கு மரண தண்டனை விதிக்காமல் தேசப்பிரஷ்ட தண்டனை விதிப்பதாகவும் மறுபடியும் சோழ நாட்டிற்குள் அவன் பிரவேசித்தால் சிரசாக்கினைக்குள்ளாக வேண்டுமென்றும் சொல்லி உடனே அவனைக் கப்பலேற்றித் தீவாந்திரத்துக்கு அனுப்பி விடும்படி கட்டளையிட்டாராம். அதன்படி அவனை உடனே மாமல்லபுரம் துறைமுகத்துக்குக் கொண்டு போய் விட்டார்கள் என்பதையும் இராஜ சபையிலிருந்து வந்த ஆள் தெரிவித்தான்.

விக்கிரமனுக்கு மரண தண்டனை விதிக்கப்படவில்லை என்ற செய்தி குந்தவிக்குச் சிறிது ஆறுதல் அளித்தது. ஆனால் அவனைக் கப்பல் ஏற்றி அனுப்பப் போகிறார்கள்; இனிமேல் என்றென்றைக்கும் அவனைத் தான் பார்க்க முடியாமற் போகலாம் என்ற எண்ணம் மிகுந்த துன்பத்தை உண்டாக்கியது. அந்த அரசிளங்குமரன் கப்பலேறிப் போவதற்கு முன் ஒரு தடவை அவனைப் பார்த்து விட வேண்டுமென்ற ஆவல் பொங்கி எழுந்தது. அவளுடைய உடம்பையும், மனத்தையும், ஆத்மாவையுமே இந்த ஆவல் கவர்ந்து கொண்டது. அந்த இராஜகுமாரனை உடனே பார்க்க வேண்டுமென்று அவளுடைய தேகத்தின் ஒவ்வொரு அணுவும் துடித்தது. அவனைத் தான் நேரில் பார்த்துப் பேசினால் அவனுடைய மனத்தை ஒரு வேளை மாற்றித் தன் தந்தையின் கீழ் சிற்றரசனாயிருக்கச் சம்மதிக்கும்படி செய்யலாம் என்ற ஆசை உள்ளத்தின் ஒரு மூலையில் கிடந்தது.

குந்தவி அக்கணமே தன் தந்தையைப் பார்க்க விரும்பினாள். விக்கிரமனுடைய விசாரணை முடிந்ததும் சக்கரவர்த்தி குதிரை மீதேறி எங்கேயோ போய் விட்டார் என்றும்,

போன இடந்தெரியாது என்றும் தெரியவந்த போது அவளுக்குப் பெரிதும் ஏமாற்ற முண்டாயிற்று. சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். பிறகு அரண்மனை அதிகாரியை அழைத்து, "உதயவர்மரே, மல்லைத் துறைமுகத்துக்கு நான் உடனே போக வேண்டும்! என் தாயாரின் நவரத்தின மாலையைக் காணவில்லை. மாமல்லபுரத்து அரண்மனையில் போட்டு விட்டு வந்துவிட்டேன் போலிருக்கிறது. நானே போய்தான் தேடி எடுக்க வேண்டும்" என்றாள்.

உதயவர்மர் சிறிது தயங்கி, "சக்கரவர்த்தி வந்தவுடன் போகலாமே!" என்றதும் குந்தவிக்கு வந்த கடுங்கோபத்தைக் கண்டு அவர் மிரண்டு விட்டார். குந்தவி தேவியின் கட்டளைக்கு மாறு சொல்லும் வழக்கம் இதுவரை இல்லையாதலால், மாமல்லபுரத்துக்கு அவ்வளவு அவசரமாகவும் தனியாகவும் அவள் போகும் யோசனை ஆச்சரியம் அளித்தாலும் அரண்மனை அதிகாரி உடனே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். சற்று நேரத்துக்கெல்லாம் குந்தவி பரிவாரங்களுடன் பல்லக்கில் மாமல்லபுரத்துக்குப் பிரயாணமானாள். இதுவரையும் இல்லாத வழக்கமாக வழியில் பல்லக்குச் சுமப்பவர்களை அவள் அடிக்கடி விரைந்து செல்லுமாறு ஆக்ஞாபித்தாள். கடைசியாக மாமல்லபுரத்தை அடைந்ததும், விக்கிரமனை ஏற்றிக் கொண்ட கப்பலானது துறைமுகத்திலிருந்து அப்போதுதான் பாய் விரித்துக் கிளம்பிக் கொண்டிருக்கிறது என்று தெரியவந்தது.

குந்தவியின் பல்லக்கு கடற்கரையை அடைந்த போது அவளுடைய கண்முன்னால் தோன்றிய காட்சி இருதயத்தைப் பிளப்பதாயிருந்தது. சிங்கக் கொடி பறந்த பாய்விரித்த கப்பல் கிளம்பிக் கடலோரமாகப் போய்க் கொண்டிருந்தது. அதில் நேற்று அவள் வீதியில் பார்த்த இராஜகுமாரன் கயிற்றால் பிணிப்புண்ட கைகளைக் கூப்பியவண்ணம் நின்று கொண்டிருந்தான். அச்சமயம் அவனுடைய பார்வை கரை மீதுதான் இருந்தது. அவ்வளவு பக்தி விசுவாசத்துடன் அவன் யாரைப் பார்க்கிறான் என்று குந்தவி தெரிந்து கொள்ள விரும்பி, கரையில் அவனுடைய பார்வை சென்ற திசையை நோக்கினாள். ஜடாமுடி தரித்த கம்பீரத் தோற்றமுடைய சிவனடியார் ஒருவர் அங்கே நின்று கொண்டிருந்தார். அவர் தமது வலது கரத்தைத் தூக்கி விக்கிரமனை ஆசீர்வதிக்கும் நிலையில் காணப்பட்டார்.

மறுபடியும் குந்தவி விக்கிரமனை நோக்கினாள். ஒருகண நேரம் அவனுடைய பார்வை



அன்னை தெரசாவின் காலை நேரப் பிரார்த்தனை!

இறைவா!
என்னை அமைதியின் வடிவாய் ஆக்கியருளும்;
பகையுள்ள இடத்தில் அன்பையும்
தவறுள்ள இடத்தில் மன்னிப்பையும்
பிளவுள்ள இடத்தில் ஒற்றுமையையும்
பிழையுள்ள இடத்தில் உண்மையையும்
ஐயமுள்ள இடத்தில் உறுதியையும்
விரக்தியுள்ள இடத்தில் நம்பிக்கையையும்
இருளுள்ள இடத்தில் ஒளியையும்
மருளுள்ள இடத்தில் மகிழ்ச்சியையும்
தருவாய் இறைவா!

- 'கவின்மிகு கல்கத்தா' நூலிலிருந்து
- த. க. பரமசிவம்

இவன் பக்கம் திரும்புவது போலிருந்தது. "இது நிஜந்தானா? அல்லது பிரமையா?" என்று நிச்சயமாய்த் தெரிவதற்குள்ளே, விக்கிரமன் முகத்தைத் திருப்பிக் கொண்டு மீண்டும் சிவனடியார் இருந்த திசையை நோக்கினான்.

குந்தவிக்கு அப்போது சட்டென்று ஒரு ஞாபகம் வந்தது. சோழ ராஜகுமாரனுக்கு துர்ப்போதனை செய்து அவன் புத்தியைக் கெடுத்தவர் ஒரு சிவனடியார் என்பதாக நேற்று அப்பா சொல்லவில்லையா? அந்தப் பொல்லாத சாமியார் இவராய்த்தான் இருக்க வேண்டும்! சந்தேகமே இல்லை!

அந்தச் சாமியாரைக் கையும் மெய்யுமாய்ப் பிடித்துவிட வேண்டுமென்னும் எண்ணத்துடன், குந்தவி பல்லக்கை அவரிருந்த திசையை நோக்கி விரைந்து போகும்படி கட்டளையிட்டாள். ஆனால் அடுத்த கணத்திலேயே சிவனடியார் துறைமுகத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஆட்களுக்குப் பின்னால் மறைந்து மாயமாய்ப் போய் விட்டார்! குந்தவி எவ்வளவோ தேடியும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதற்குள்ளாக விக்கிரமன் இருந்த கப்பலும் கடலில் வெகுதூரம் போய் விட்டது.

(தொடரும்)

தமிழ் நிலையம் வழங்கும் பன்னிரு திருமுறைகள்

(மூலமும் உரையும்)

பன்னிரு திருமுறைகளும் இருபத்து நான்கு தொகுதிகளாக அமைகின்றன.
(கீழே உள்ள அட்டவணையைக் காண்க)

தேவாரம்

இரு திரு முறைகள் (முதலாவதும் ஏழாவதும்) மூன்று தொகுதிகளாக வெளி வந்துள்ளன. இவற்றிற்குரிய சலுகை விலையைச் செலுத்திக் குறிப்பிட்ட தேதிக்குள் வாங்குவோர் 'திருமுறை சந்தாதாரர்' எனக் கருதப்படுவர். அவர்களுக்கு அடுத்தடுத்து வர இருக்கும் திருமுறைத் தொகுதிகளின் விலை, சலுகை, தேதி முதலான தகவல்கள் முன்கூட்டியே தபால் மூலம் தெரிவிக்கப்படும். தயாராக இருக்கும் பின்வரும் நூல்களைச் சலுகை விலையில் வாங்கிச் சந்தாதாரராக ஆகுங்கள்.

திருஞான சம்பந்தர் தேவாரம் (மூலமும் உரையும்)		
முதல் திருமுறை – இரு தொகுதிகள்	விலை	ரூ. 175.00
சுந்தரர் தேவாரம் (மூலமும் உரையும்)		
ஏழாம் திருமுறை	விலை	ரூ. 100.00
		ரூ. 275.00
சலுகை 27%	விலை	ரூ. 75.00
கழிவு போக சலுகை	விலை	ரூ. 200.00

ஆக ரூ. 200/– MO (அ) DD மூலம் அனுப்புக. இம்மூன்று தொகுதிகளும் உடனே VPPயில் அனுப்பி வைக்கப்படும். வழக்கம்போல் தபால் செலவினை மட்டும் தபால்காரரிடம் செலுத்தி நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம். பணம் அனுப்ப வேண்டிய முகவரி:

தமிழ் நிலையம்,
ஏ.ஆர்.ஆர். காம்ப்ளக்ஸ், 141, உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை – 17.
(பனகல் பார்க் அருகில்)

திருமுறை – நூல்கள் – ஆசிரியர்கள் – பாடல்கள் – தொகுதிகள் அட்டவணை

திருமுறை எண்	நூல்கள்	ஆசிரியர்கள்	பாடல்கள்	தொகுதிகள்
முதலாம் திருமுறை	தேவாரம்	திருஞானசம்பந்தர்	1469	2
இரண்டாம் திருமுறை	தேவாரம்	திருஞானசம்பந்தர்	1331	2
மூன்றாம் திருமுறை	தேவாரம்	திருஞானசம்பந்தர்	1346	2
நான்காம் திருமுறை	தேவாரம்	திருநாவுக்கரசர்	1069	1
ஐந்தாம் திருமுறை	தேவாரம்	திருநாவுக்கரசர்	1015	1
ஆறாம் திருமுறை	தேவாரம்	திருநாவுக்கரசர்	980	1
ஏழாம் திருமுறை	தேவாரம்	சுந்தரர்	1026	1
எட்டாம் திருமுறை	திருவாசகம், திருக்கோவையார்	மாணிக்கவாசகர்	656 + 400 = 1056	2
ஒன்பதாம் திருமுறை	திருவிசைப்பாக்கள்	திருமாளிகைத்தேவர், சேந்தனார் முதலான பத்துப்பேர் பாடியவை	301	1
பத்தாம் திருமுறை	திருமந்திரம்	திருமூலர்	3047	3
பதினொன்றாம் திருமுறை	தொகுப்பு	காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமாள் நாயனார் முதலான பன்னிரண்டு பேர் பாடிய பாடல்கள்	1400	2
பன்னிரண்டாம் திருமுறை	திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்)	சேக்கிழார்	4286	6

ஆக திருமுறை ஆசிரியர்கள் 27; நூல்கள் 76; திருப்பாட்டு 18326.

வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டுகிறோம்

விலைவாசிக்கு வெவ்வெவ்வே!

அள்ளி அள்ளி அள்ளபத்தந்தேன் வேஷமில்லிங்க - மனைவி
ஆசைப்பட்டப் பொருளை வாங்கக் காசமில்லிங்க
தள்ளித்தள்ளிப் போட்டுப்பார்த்தேன் இரங்கவில்லிங்க - விலை
தாவித்தாவி ஏறிப்போகும் கருணையில்லிங்க

காஞ்சிபுரப் பட்டுக்காக நச்சரிக்கிறா - தெனம்
காரங்கூட்டி உப்பில்லாம சதிசமைக்கிறா
மாய்ஞ்சி மாய்ஞ்சி சேலை கேட்டுக் கொட்டுதட்டுறா - பல
பொன்மொழியால் புருசனுக்குச் சேலைகட்டுறா

வாரத்துக்குள் சேலைவிலை வானம் தொடுதுங்க - நான்
வாங்கிவரும் சம்பளமோ கையைச் சுடுதுங்க
காரத்துக்குள் நித்திப்பையப்போல் வாழ்க்கை இருக்குங்க - குதி
கண்டுகொள்ளும் நம்நிறமை நாக்கில் இருக்குங்க

"மிக்ஸி வாங்கச் சொல்லிரொம்ப நாளாய்விட்டதே - ஒரு
மாசத்துல மிக்ஸிவிலை தேளாய்க்கொட்டுதே
முக்திகூட கிட்டிடலாம்....மிக்ஸிகிட்டுமா?- ஒரு
பொம்பளைக்கு வாய்ப்பதென்ன தாலிமட்டுமா?"

இப்படித்தான் என்மனைவி பழிச்சிக்காட்டுறா - அவ
இரண்டிரண்டாய்ப் பாத்திரத்தை ஒடைச்சிக் கூட்டுறா
துப்பில்லையாம் இதயத்தையே போட்டுடைக்கிறா - அதைத்
தூளாயாக்கி அம்மியிலே போட்டரைக்கிறா

"பக்கத்துல கலர்கலரா டீவி போகுதாம் - அதைப்
பாத்துநிக்கும் எம்புள்ளைங்க மானம் போகுதாம்"
எக்குதப்பா டீவிகேட்டு டைக்கு பண்ணுறா - வந்த
'இன்ஸ்டால்மெண்ட்' தவணை முறைக்குக் கணக்கு பண்ணுறா

மாதசம்பளம் வாங்குகின்ற மாடசாமிநான் - எனக்கு
மளிகைக் கடையில் பட்டப்பெயர் 'மாதசாமி'தான்
மாதந்தோறும் வரவைமிஞ்சும் செலவிருந்தாலும் - என்
மனக்கணக்கில் பாலைவார்க்கும் தேதி "ஒண்ணு"தான்.

- நா.வே.அருள்







புற்றுநோயை வெற்றி கண்ட இளைஞர்!

நம்பிக்கை நட்சத்திரம் - இதுதான் சுமன்த்குமாரின் மறுபெயர். பம்பாயில் சட்டம் பயின்று கொண்டிருக்கும் இந்த இளைஞர், விதியின் உடும்புப் பிடியினைச் சட்டை செய்யாமல், அதனுடன் மார்கண்டேயத்தனமாய்ப் போரிட்டு வெற்றி வீரனாய் வலம் வருகிறார். சர்ச்கேட்டிலுள்ள இவரது இல்லம், அழகும் அமைதியுமாகத் தான் இருக்கிறது. ஆனால் இது புயலுக்குப் பின் வந்த அமைதி!

புயலின் அறிகுறிகள் முதன் முதலில் 87'ல் தோன்றின.

"அப்போது சென்னையிலிருந்தோம்" என ஆரம்பிக்கிறார் சுமன்த். "அக்குள் பாகத்தில் சிறு வீக்கம் தெரிந்தது. அது பரிசோதிக்கப்பட்டு, ஒன்றும் விபரீதமில்லை என்று சொல்லப்பட்டது. அதன் பிறகு அவ்வப்போது, ஜுரம் வரும். பி.எஸ்ஸி., இறுதியாண்டுத் தேர்வுக்குப் படிக்கும் போது, மிக உக்கிரமாக, உடல் நடுக்கங்களுடன் ஜுரம் வந்து, மலேரியாவுக்கான சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆயினும் இரத்தப் பரிசோதனைகளில் அது மலேரியாதானா என்பது தெரியவில்லை. மலேரியா மாத்திரைகளால் உடல் மிகவும் சோர்ந்து மெலிந்து விட, படிப்பது கஷ்டமானது; அதனால் ஜுரம் வரும் போது, ஒரு 'குரோஸினை'ப் போட்டுக் கொண்டு படுத்து விடுவேன். அரைமணியில் தெப்பலாக வியர்த்து, ஜுரம் இறங்கி விடும். அடுத்த நான்கு மணி நேரத்துக்கு இது தாக்குப்பிடிக்கும்; பரீட்சை எழுதி விட்டு வருவேன். இப்படியே செய்து, கடைசி பரீட்சையின் போது, மிகவும் வாடித் தளர்ந்து, நடக்கவே வலுவில்லாமல் போய் விட்டது.


"90'ல் அப்பாவுக்கு வேலை மாற்றல். பம்பாய்க்கு வந்தோம். இங்கே டாக்டர் அகர்வால் என்னைப் பரிசோதித்து விட்டு Lymphoma வாக இருக்கலாம் என்று சந்தேகித்தார். நிணநீர்ச் சுரப்பிகளை முதலில் தாக்கும் இந் நோய், இரத்தப் புற்றுநோயைப் போன்ற

"நம்ம தலைவருக்கு அபார ஞாபகசக்தி...!"

"எப்படி?"

"ஊருக்கு வந்ததுமே 'நம்ம தொகுதி போலிருக்கே!'ன்னு கரெக்ட்டா கேட்டுட்டாரே!"

- கே. சோமசேகர்



ஒரு தீவிரமான கான்சர் என்று சொல்லப்பட்டது. பரிசோதனைகளில் என் கல்லீரல், மண்ணீரல் எல்லாவற்றிலும் நோய் பரவி, கான்சரின் இறுதிக்கட்டத்தில் நான் இருந்தது தெளிவானது. டாக்டர் என்னிடம், 'இது ஹாட்கின்ஸ் டிஸீஸ் என்னும் நோய். (பெட்டிச் செய்தி பார்க்க); நீ தைரியமாகப் போராடினால் வென்று விடலாம். ட்ரீட்மெண்டின் போது தலைமுடி கொட்டும், பரவாயில்லையா?'' என்றார். நான் சரி என்றேன். உடனே அவர் கீமோதெரபியை ஆரம்பித்து விட்டார். பதினைந்து நாட்களுக்கொரு முறை என்று ஒரு வருடத்துக்கு அந்த இன்ஜெக்ஷன்களை எடுத்துக் கொண்டேன். அப்போது வாயெல்லாம் புண் வந்து விடும்; ஜாண்டிஸ், நிமோனியா என்ற பயமுறுத்தல்கள் வேறு! டாக்டர் அகர்வாலோ, 'நீ நிறையச் சாப்பிடு... என்ன வேணுமானாலும் சாப்பிடு... உன் எடை கூட வேண்டும்' என்ற மந்திரத்தை ஓதிக் கொண்டேயிருந்தார். அப்புறம் இரண்டு வருடங்களுக்கு, எந்த விதத் தொந்தரவுமில்லை; சட்டக் கல்லூரியிலும் சேர்ந்து விட்டேன். அவ்வப்போது செக்கப்புக்கு மட்டும் போய் வருவேன்.

''அப்போதுதான் டாக்டர், திடீரென்று, மறுபடியும் நோய் தலைதூக்கியிருப்பதாகச் சந்தேகப்பட்டார். என்னால் நம்பவே முடியவில்லை! ஏனென்றால் நோய்க்கான ஒரு அறிகுறியும் எனக்குத் தெரியவில்லை. நான் ஆரோக்கியமாகத்தானிருந்தேன்! டாக்டரோ இம்முறை கீமோதெரபியால் உபயோகமிருக்காது; Bone-marrow transplant செய்துதான் ஆக வேண்டும்; அதுவும் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற இடங்களில் செய்வது நலமென்றும், செலவு 25 லட்சங்கள் பிடிக்குமென்றும் சொன்னார்.

''நாங்கள் செய்வதறியாது தவித்தோம். வேலூரில் செய்வதாகக் கேள்விப்பட்டு விசாரித்ததில், சரியான பதிலில்லை. தவித்துத் தண்ணீராகி, தெய்வம் ஒன்றையே நம்பிய கட்டத்தில், இந்தியாவிலேயே, இந்த நோயைக் குணப்படுத்த புதிய முறை ஒன்று வந்திருப்பதாகவும், அதற்கான உபகரணங்களெல்லாம் இறக்குமதி செய்யப்பட்டு அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சையளிப்பதற்கான தயார் நிலையிலிருப்பதாகவும், சில லட்சங்களில் (3-5) செலவு அடங்கி விடுமென்றும் டாக்டர் அகர்வால் தெரிவித்தார். உடனே சென்னைக்குப் புறப்பட்டோம்.''

''அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் டைரக்டர் சாந்தா மற்றும் டாக்டர் மைத்ரேயன் குழுவினர் மிகவும் அக்கறையோடும், பரிவோடும் என்னைக் கவனித்தனர். தேவையான பரிசோதனைகளைச் செய்து, இது ஹாட்கின்ஸ் டிஸீஸ் தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டனர். ட்ரீட்மெண்டுக்கு இரண்டு நாட்கள் முன்பு யாரோ ஒரு நபர், ரொம்பவும் சாதாரணமாக ''நீதான் சரித்திர நாயகனா?'' என்று தமாஷாகக் கேட்கவேதான், எனக்கு ஒரு விஷயம் தெரியவந்தது. அதாவது, அந்தப் புதிய உபகரணங்களை உபயோகப்படுத்துகிற முதல் பேஷண்டே நான்தான் என்கிற விஷயம்தான் அது. ஆனால் இது முதல் முயற்சி என்ற நினைவே எழாத வண்ணம்,

புற்றுநோய் - ஒரு சிறு விளக்கம்!

'கேன்சர்' என்பது புற்றுநோயின் பொதுவான பெயர்தான். அதில் ஏராளமான வகைகள் உள்ளன. அவற்றில் ஒருவகைதான் Hodgkin's Disease என்பது. நிணநீர்ச் சுரப்பிகளைத் தாக்கும் வகைப் புற்றுநோய்க்கு இந்தப் பெயர்.

சாதாரணமாக, புற்றுநோய்களுக்கான சிகிச்சைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். முதலாவது அறுவைச் சிகிச்சை. இரண்டாவது கதிரியக்கச் சிகிச்சை. மூன்றாவது மருந்து - மாத்திரைகள், ஊசிகள் மூலம் குணப்படுத்துவது. நோயின் தன்மைகளைப் பொறுத்து, சிகிச்சைக்கான முறையை டாக்டர் தீர்மானிப்பார்.

மருந்து, மாத்திரைகள், ஊசிகள் மூலம் குணப்படுத்தும் சிகிச்சை முறைக்குத்தான் Chemotherapy என்று பெயர். பொதுவாகவே மருந்து - மாத்திரைகள் சாப்பிடுவதால் பக்கவிளைவுகள் இருக்கும். அதுவும் புற்றுநோயின் தன்மைக்கேற்ப, கொடுக்கப்படும் மருந்து மாத்திரைகளின் வீரியமும் அதிகரிக்கப்படுவதால், பக்க விளைவுகளும் அதிகமாக இருக்கும்.

இந்தப் பக்கவிளைவுகளில் தலைமுடி உதிர்வது ஒருபுறமிருக்க, இரத்தத்திலுள்ள அணுக்களும் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்படும். சாதாரணமாக நமது ரத்

தத்தில் ஒரு கியூபிக் மில்லி மீட்டர் பரப்பில் எட்டாயிரத்திலிருந்து பத்தாயிரம் வெள்ளணுக்களும் நான்கரை லட்சம் மில்லியனிலிருந்து ஐந்து லட்சம் சிவப்பு அணுக்களும் இருக்கும். இந்த எண்ணிக்கையைத்தான் Blood Count என்கிறோம். கீமோதெரபியின் பக்கவிளைவுகளால் இரத்த அணுக்கள் அழிக்கப்பட்டுக் கொண்டே வந்து, கடைசியில் எல்லாமாக அழிந்து போன நிலையிலுள்ள இரத்தத்தைத்தான் ஜீரோகவுண்ட் என்கிறார்கள்.

இப்படி இரத்த அணுக்கள் அழிக்கப்படுவதால் என்ன பாதிப்பு? நோய்



• அடையாறு மருத்துவமனையில் கமல்த்

எதிர்ப்பு சக்தி குறைந்து கொண்டே வரும். ஜீரோ கவுண்டில் - சம்பந்தப்பட்ட நோயாளிக்கு, நோய் எதிர்ப்பு சக்தி என்பது துளியும் இருக்காது. சாதாரணமாக நாம் உள்ளிழுக்கிற காற்றில் இருக்கும் நோய்க் கிருமிகள் கூட சம்பந்தப்பட்ட நோயாளிக்குப் பெரும் ஆபத்தை விளைவித்து விடும். அதனால்தான் ஜீரோ கவுண்டில் உள்ள நோயாளிகளை எந்தவிதமான சிறு பாதிப்பும் இல்லாத ஜீரோ பாக்டீரியா அறையில் வைத்துப் பாதுகாக்கிறார்கள். இதன் காரணமாகவே அப்படிப்பட்ட நோயாளிகளை அடுத்த அறையிலிருப்பவர்கள் கூட போய்ப் பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை.

இந்தப் பக்கவிளைவு, இரத்தத்தோடு மட்டும் நின்று விடுவதில்லை; இரத்தத்தை உற்பத்தி செய்கிற Bone-marrow (எலும்புகளின் நடுவிலுள்ள மஜ்ஜை)யையும் தாக்கி அழித்து விடும். ஆகவேதான், தீவிரமான - அதிதீவிரமான கீமோதெரபியின் போது, இரத்தத்தை உற்பத்தி செய்கிற Bone-marrowவைப் பாதுகாப்பது மிகவும் அவசியமாகிறது. ஆதலால், அதிதீவிர கீமோதெரபியின் போது Bone-marrowவை வெளியில் எடுத்து வைத்து விட்டு, சிகிச்சை முடிந்ததும் மீண்டும் அதை உள்ளே பொருத்துகிறார்கள். இதற்குத்தான் Bone-marrow transplantation என்று பெயர்.

இந்த எலும்பு மஜ்ஜையை சகோதரர் அல்லது சகோதரியிடமிருந்து (இரத்தம் போல்) பெற்றும் பொருத்த முடியும். ஆனால், அது கூட பொருந்தி வருவது அரிதுதான்! எனவேதான், கீமோதெரபியின் போது, நோயாளியின் சொந்த மஜ்ஜையையே வெளியே எடுத்துப் பாதுகாத்து, சிகிச்சை முடிந்ததும் பொருத்து வதைக் கையாள்கிறார்கள்.

முன்பெல்லாம் இந்த மஜ்ஜையை நோயாளியின் எலும்பிலிருந்து காலையில் எடுத்து, மீண்டும் மாலையில் பொருத்துகிற வசதி மட்டும்தான் இருந்தது. அதாவது வெளியில் எடுத்த மஜ்ஜையை ஒருசில மணி நேரம் மட்டுமே பாதுகாக்க முடியும். இப்போது ஒரு சில வாரங்கள் வரை பாதுகாக்கும் கருவி அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு வந்து விட்டது. இந்த நவீன கருவி, முதன் முதல் கமன்த்குமாரின் மஜ்ஜையைப் பாதுகாக்கப் பயன்பட்டது என்பதுதான் முக்கியமான விஷயம்!

டாக்டர்களும், நர்ஸுகளும் நம்பிக்கையோடும் திறமையோடும் சிகிச்சையை ஆரம்பித்தனர். நோயின் கடுமையைப் பற்றி மறைக்காமல் என்னிடம் கூறினர். இருப்பினும் குணமாக்கி விடலாம் என்று டாக்டர் உறுதியளித்தார். என் சந்தேகங்களையெல்லாம் ஒன்று விடாமல் தெளிவாக்கினார். 'ப்ளட் கவுண்ட் ஜீரோவுக்கு வந்து விட்டால் எப்படி இருக்கும்?' என்று நான் பயத்துடன் கேட்டேன். என்னை அழைத்துச் சென்று, அருகிலிருந்த அறையில் படுத்திருந்த சில நோயாளிகளைக் காட்டி, இவர்களெல்லாம் ஜீரோ கவுண்ட் உள்ளவர்கள்தாம். நார்மலாக இருக்கிறார்கள் பார்', என்று ஊக்கமளித்தார். அவர்கள் ஜாலியாகப் பேசி, சிரித்துக் கொண்டு என்னையும் கலகலப்பாக்கினார்கள். டாக்டர்களின் இந்த அன்பு எனக்குப் புதிய நம்பிக்கையைக் கொடுத்ததால், சிகிச்சையின்போதே, நான் புதிய தெம்பைப் பெற ஆரம்பித்து விட்டேன்."

"Bone marrow transplantation செய்யும் அன்று, முதலில் எனக்கு அனஸ்தீஷியா கொடுத்து, உடம்பில் பல இடங்களிலிருந்து bone-marrow நீக்கப்பட்டது. அவை பத்திரமாகப் புதிய உபகரணங்களில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. அன்றிரவிலிருந்தே



''மானேஜர் காலையிலே வந்ததும் முதல் வேலையா, கொஞ்ச நேரம் டைப்பிஸ்ட் பத்மாவோட வீட்ல உட்கார்ந்திருந்துட்டு, அப்புறமா ஆபீசுக்குப் போறாரே, ஏன்?''

''தினமும் காலையிலே கொஞ்ச நேரம், 'பத்மாசனத்திலே' அமர்ந்திருந்தா நல்லதுன்னு யாரோ சொன்னாங்களாம்!''

— இரா. சம்பத்குமார்

''கடைசி நேரத்துல அந்த சர்வர் என் மானத்தை வாங்கிட்டார்!''

''ஏன், மசால் தோசை இல்லேன்னு சொல்லிட்டானா?''

''ஊஹூம். மாவாட்ட வசதி இல்லேன்னு சொல்லிட்டான்!''

— எஸ். மூகம்மது யூசுப்

''என்னதான் பெண்ணைப் பிடிக்கப் போயிருந்தாலும் உன் பையன் சொன்னது எனக்குக் கேவலமாப் போச்சுக!''

''அப்படி என்னங்க சொன்னான்?''

''நான் ரெண்டு நாள் தங்கிட்டு வர்றேன், நீங்களும் அம்மாவும் போங்கப்பான்னான்!''

— சீர்காழி. வி. ரேவதி

''பையனை ஏன் அடிச்சீங்க?''

''சலூனுக்குப் போய் முடிவெட்டிக்கணும்ன்னு அடம் பிடிச்சான்...''

''கூட்டிகிட்டுப் போக வேண்டியது தானே?''

''நீங்க ஒண்ணு. நேத்து தான் அவனுக்குத் திருப்பதில முடி இறக்கினோம்...''

— ராதா வாசுதேவன்

தொடர்ந்து நான்கு நாட்களுக்குப் படுதீவிரமாகக் கீமோதெரபி கொடுக்கப்பட்டது. வாய்ப்புண், கால், வயிறு வீக்கம் எல்லாம் வந்தன. ப்ளட் கவுண்ட் 'ஜீரோ'வுக்கு வந்து விட்டது. அது மீண்டும் உயர்ந்தபின்தான் என் எலும்பிலிருந்து எடுக்கப்பட்ட bone-marrow மீண்டும் பொருத்தப்படும். இதற்குக் குறைந்தபட்சம் ஒரு மாத காலமாகலாம் என எதிர்பார்த்தார்கள். ஆனால் என் அதிர்ஷ்டம், என் பெற்றோரின் பிரார்த்தனையும் இறையருளும் சேர்ந்து, 15 நாட்களிலேயே B.C. தேவையான அளவு உயர்ந்து விட்டது. டாக்டர் ஓடி வந்து, தூங்கிக் கொண்டிருந்த என்னை எழுப்பி இந்த நற்செய்தியைச் சொன்னார்."

"தனியறையில் கழித்த அந்த 15 நாட்களை நான் மறக்கவே முடியாது! முகமூடி மனிதர்களை மட்டுமே பார்த்தேன். குஷியாக, கவலையில்லாமல், நர்ஸுடன் செஸ் விளையாடிக் கொண்டிருந்தேன். வேறு அறையிலிருந்த என் அம்மாவுக்கு (யாரும் உள்ளே வரக் கூடாது என்பதால்) லெட்டர் எழுதினேன். உடல்நலமில்லாமல் ஒரு நாள் டாக்டர் வரவில்லை; அவருக்கும் ஒரு லெட்டர் எழுதினேன். அவர் சந்தோஷப்பட்டார்" என சுமன்த்குமார் முடித்ததும் அவருடைய தாய் தொடர்ந்து,

"ஜீரோபாக்டீரியா அறையிலிருந்து இவன் எனக்கு எழுதிய கடிதங்களில், இன்ன தேதியில் பம்பாயில் இருப்பேன், இன்ன தேதியில் பரீட்சை எழுதுவேன் என்றெல்லாம் அட்டவணை போட்டிருக்கும், 'இறைவா இவையனைத்தையும் நிறைவேற்றி வை!' என்று நான் மௌனக் கண்ணீர் வடிப்பேன். இவனுக்கு உடம்புக்கு வருவதற்கும், இந்தியாவுக்கு இந்த டெக்னிக் வருவதற்கும் சரியாக இருந்ததற்கு இறைவனருள் தவிர வேறு என்ன காரணமிருக்க முடியும் சொல்லுங்கள்?" என்கிறார் நெகிழ்ச்சியுடன்.

"ஆம்! இந்தச் சமயங்களில் இறையுணர்வு அதிகமாகப் பெருகுகிறது" என்கிறார் சுமன்த். 'இன்ன தேதியில் உடல் தேறிவிடும் என்று உள்குரல் ஒன்று ஒலித்துக் கொண்டே தைரியப்படுத்தியது. அதே போல் நிகழ்ந்தும் விட்டது! மோசமான நிலைக்குப் போயிருக்கக்கூடும் என்பதை நினைக்கும் போது, இன்று கிடைத்த புனர்வாழ்வுக்கு ஆண்டவனுக்கு நன்றி தெரிவிக்கிறேன்!" என்கிற சுமன்த் இன்னொரு சாதனையையும் செய்திருக்கிறார். சட்டத் தேர்வை எழுதி வெற்றி பெற்றது மட்டுமல்ல; சில பாடங்களில் முதல் மதிப்பெண் பெற்றுத் தேறினார் என்பதுதான் அந்த இன்னொரு சாதனை!

— ஜெயஸ்ரீ ராஜ்

என் காதல் தடியா!

கடற்கரையே ரம்யமாகி விட்டிருந்தது. ரம்யாவுக்கு அப்படித் தான் தோன்றியது. காரணம் நரேஷ். பக்கத்தில் உட்கார்ந்து இவளையே பார்த்துக் கொண்டிருந்த நரேஷ். காதலுக்கு வயசு இரண்டு.

"என்னடா அப்பிடிப் பார்க்கறே?" கிரக்கமாய்க் கண்களைத் தழைத்துக் கேட்டாள். அப்படி அவன் பார்க்கும்போதெல்லாம் உடம்புக்குள் சிலிர்த்துப் போகும். 'என் காதல் தடியா...' என்று செல்லமாய் மனசு கோபிக்கும்.

''ஒருநாள் இல்லைன்னா ஒருநாள் உன்னை அப்படிக் கூப்பிடத்தான் போறேன் பாரு..."

கண் முழுக்கக் காதலுடன் அவளைப் பார்த்துச் சிரித்தான். கிளம்பிக் கொண்டிருந்த நிலா, சூழ்நிலையை அலங்கரித்தது.

"எப்பிடி? எப்பிடி? நீயும் ஆயிரத்தி ரெண்டாவது தடவையாய் என் கிட்டே இப்படிச் சொல்லிட்டே. ஆனால் எப்படிக் கூப்பிடுவேன்னு தான் சொல்லவே மாட்டேங்கறே..." அவளின் சுண்டு விரலின் நுனியை மென்மையாய்ப் பிடித்துக் கொண்டு கேட்டான்.

விறுக்கென்று விலகினாள்.

''ஆரம்பிச்சாச்சா... இனி மெல்ல மெல்ல கை நகருமே..." கன்னம் சூடியச் சிரித்தான்.

"ப்ச்... கிட்டே வந்து உட்காரேன்."


"எதுக்காம்?'' மெல்லிய ராகமாய்க் கேட்டாள்.

"ஒரு சின்ன குட்நியூஸ் சொல்லப் போறேனாக்கும்..."

தெரியும். அந்த நல்ல செய்தி என்னவென்று அவளுக்கு நன்றாகவே தெரியும். இருந்தும் தெரியாததாய் நடித்தாள். இரண்டு காரணங்கள். ஒன்று... அவனுக்கு வேலை கிடைத்து விட்ட செய்தியை அவனாய்ச் சொன்னால், புதிதாய்க் கேட்டு மகிழ்வதாய் அவள் நடித்தால் அதில் இருக்கும் 'த்ரில்'. இரண்டாம் காரணம் இந்தக் 'காதல் தடியன்' தன்மானமிக்கவன். தன்னுடைய திறமைக்காய் எவனோ வேலையைத் தூக்கிக் கொடுத்து விட்டதாய் நினைத்துக் கொண்டிருப்பவன். காதலியின் அப்பாவின் நண்பர்தான் அந்தக் கம்பெனியின் மேனேஜர் என்பதும் இவள் கெஞ்சியதன் பேரில்தான் இந்த வேலை கிடைத்ததாய்த் தெரிந்தால்...?

ஐயோடா! நடுங்கியது. வேலையைத் தூக்கி எறிவான். அதுவாவது பரவாயில்லை. இவளையே...

''என்ன நியூஸ்னு கேட்க மாட்டியாடா?''



வேதா கோபாலன்

இருட்டு அதிகரித்த தைரியத்தில் அவன் ரம்யா வுக்கு ரொம்பவும் பக்கத்தில் அமர்ந்திருந்தான். அவன் குழந்தை போல் கேட்ட விதத்துக்குச் சிலிர்த்தாள். சிரித்தாள். தன்னிடம் ஆண் கெஞ்சுவது எந்தப் பெண்ணுக்கும் மகிழ்ச்சி தான்.

"என்ன பெரிய குட்நியூஸ். உங்களுக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கா?"

"ஷட் அப்.. கல்யாணப் பெண்ணுக்குத் தெரியாமலா..?"

"பின்னே?"

"அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் வந்திருக் குடீ..." அவன் பொதுவாய் அவளை 'டீ' போட்டு அழைப்பதில்லை. அப்படி அழைப் பின், பின்னணியில் பிரத்யேக, அதீத சந் தோஷம் இருப்பதாய்ப் பதவுரை!

"ஐயோ! நிஜமாவா! ரியலி? கிரேட்.. கிரேட்..!" நிஜமாகவே புதுச் சந்தோஷம் அனுபவிக்கிறதாய்க் காட்டிக் கொள்ள, சட் டென்று இருட்டு தந்த தைரியத்தில் அவன் கைக்குப் பரிசளித்தான்.

இதோ. இப்போது நினைத்துக் கொண் டாலும் அந்தச் சந்தோஷம் இனித்தது. நரேஷ் எதிர்பார்த்திருக்க மாட்டான். கிட்டே உட்காரச் சொன்னால் கூட நழுவி ஓடும் ரம்யா. 'நீயெல்லாம் ஒரு காலத்தில் காலேஜில் படித்தவளா?' என்று அவன் திட்டத் திட்ட அவனை விலக்கும் ரம்யா, யாராவது பார்ப்பார்களோ என்ற பயத் திலேயே கடற்கரைச் சந்திப்பை அர்த்தமற்ற தாக்கிக் கொண்டிருக்கும் ரம்யா.. அவளா..!

தங்கள் காதல் விஷயத்தைக் கூடத் தன் அப்பாவிடம் ஒரு அவசரக் கணத்தில் போட்டு உடைக்க வேண்டி வரும் என்று ரம்யா சற்றும் நினைத்துப் பார்க்கவில்லை. அப்பா சதாசிவத்தின் நண்பர் வந்திருந்த போது, அப்பாவிடம் அவர் ஒரு காலத்தில் உதவிகள் பெற்றவர் என்று நெஞ்சு நிறைய நன்றிகளுடன் சொன்ன போது, அவர் எந்தக் கம்பெனியின் மேனேஜர் என்று தெரிய வந்த வுடன் அதிர்ந்தாள். சந்தோஷ அதிர்ச்சி. இதில் நரேஷ் அப்ளிகேஷன் போட்டிருக் கிறானே?

"வந்து.. அப்பா.. எனக்கு.. எனக்கு வேண் டிய ஒருத்தருக்கு.. ஒரு வேலை வாங்கித் தரணும். ப்ளீஸ்ப்பா..." சின்ன போனி டெய் லைச் சுருட்டியவாறு தரை பார்த்து அவள் சொன்ன போது சதாசிவத் துக்குப் பாதி புரிந்தது. விளக்கி னாள். மீதியும்!

"அதற்கென்னம்மா, பேஷாய்ச் செய்துட்டா போச்சு..." என்று சர்வ கலபமாய் அந்த நண்பர் சொல்லி விட்டுப் போனார். செய்தும் விட்டதாய் இப்போது தெரிந்தது.

அப்பாவுக்குப் பரந்த மனசு. அம்மா இல்லா ரம்யாவிடம் கொட்டிக் கிடந்த பாசம், அவளின் விருப்பம் எதற்கும் தடை சொல்லாததாய் அமைந்தது.


நாளைக்கு பீச் ஸ்டேஷனில் சந்திப்பதாய் ஏற்பாடு. அப்படிச் சந்திக்கும் போது சொல்ல வேண்டும். "என் காதல் தடியா... கங்கிராஜுலேஷன்ஸ்டா.."

அன்றைக்கு ராத்திரி முழுக்கத் தூங் காமல் காதலனுக்கு வேலை கிடைத்து விட்ட சந்தோஷத்தை அசைபோட்டுக் கொண்டிருந்தாள். அந்த சந்தோஷத்தில் முதல் சந்திப்பில் தொடங்கி எல்லா முறை யும் சந்தித்துக் கொண்ட நிகழ்ச்சிகள் நினை வுக்கு வந்தன. ரம்யாவின் கன்னத்தைக் கலர் மாற்றின. ஒவ்வொரு முறையும் அவனை உசுப்பேற்றுவாள். 'ஒருநாள் உன்னை அப் படிக் கூப்பிடப் போறேன் பாரு.' அவனுக்கு சஸ்பென்ஸ் தாங்கவில்லை. எப்படி என்று கேட்டுக் கொண்டே இருக்கிறான்.

இப்போதெல்லாம் இல்லை. முதல் முதலில்.. 'தனியறையில்' கூப்பிட வேண்டும்.

"என் காதல் தடிய்யா.. தாங்க்யூடா" என்று சொல்ல வேண்டும். கல்யாணம் பண்ணிக் கொண்டதற்கு யாராவது நன்றி சொல்வார் களா? அதுவும் இரண்டு வருஷம் பழகிய காதலனுக்கு? இவள் சொல்வாள். சொல்வ தாய்த் தீர்மானித்திருக் கிறாள்.

மறுநாள் நரேஷைக்



"அரசியலில் மீண்டும் 'அதிர்ஷ்டக் காற்று' வீசணும்னா ஓர் ஐடியா தலைவா!"

"என்ன, என்ன?"

"உடனே இன்னொரு கல்யாணம் பண்ணிக்குங்க!"

— கே.என். பாலகிருஷ்ணன்

காணக் கிளம்பிய போது அன்றைய தினத்தின் முடிவு எப்படி இருக்கப் போகிறது என்று அவளுக்குத் தெரியாமல் போய் விட்டது.

சந்தோஷமாய் அவளின் கைபிடித்து நடக்க வேண்டியவன் எதையோ இழந்தவன் போல் தள்ளி நடந்தான். அதிசயமாய் இவள் தான் ஒட்டி நடந்தாள்.

"என்னய்யா... மூஞ்சி முழுக்க சோகம்? காதல்ல தோல்வியா?" விளையாட்டாய்க் கேட்டாள்.

அவன் வேகமாய்த் திரும்பினான்.

"தாங்குவியா? உண்மை சகிப்பியா?"

கலக்கமாய் இருந்தது. எதற்காய் இன்று இப்படியெல்லாம்? "என்ன நரேஷ்?"

"அப்படி வா... உட்கார்ந்து பேசலாம்." களேபரமாய் ரயில்கள் கிளம்பிக் கொண்டும் வந்து கொண்டும் இருக்க, அவன் சின்னக் குரலில் பேசினான். "எனக்கு... எனக்கு... அப்பா வேறு பெண் பார்த்திருக்கார்..."

"ப்பூ... இவ்வளோதானே? எதிர்பார்த்த சமாசாரம்தானே?" நிம்மதியாய் மூச்சு விட்டாள். "விஷயம் உடைச்சுடு."

"இல்லை ரம்யா... இந்த வாட்டி வேற வழியில்லை..."

"ஏன்?" குரல் முழுக்கத் திகைப்பாய்க் கேட்டாள்.

"வந்து... எனக்கு... எனக்கு வேலை கிடைக்க அப்பா ஒருத்தரிடம் சிபாரிசு கேட்டிருந்தாராம். தெரிஞ்சிருந்தால் மறுத்திருப்பேன். அவரோட பொண்ணுக்கு... என்னை..."

ஆண்டவா...! இவளின் தந்தையும் யாரையோ சிபாரிசு பிடித்திருக்கிறாரா? இல்லை. தன் வார்த்தைக்குக் கிடைத்த மதிப்பில்தான் இந்த வேலை கிடைத்தது என்று நிஜத்தை இவனிடம் சொல்லி விடலாமா?

சட்டென்று எழுந்தாள். வேண்டாம். அப்படிச் சொல்லித்தான் அவன் மனசு மாற வேண்டுமெனில் அது தேவையில்லை. அப்புறம் இரண்டு வருஷக் காதலுக்கு அர்த்தமேயில்லை.


"நான்... நான் போயிட்டு வரேன்..." 'போயிட்டு வரேண்டா காதல் தடியா' என்று சொல்ல நினைத்த மனசைக் கண்டித்து, எழுந்து விரைந்து நடந்தாள்.

சட்டென்று அவன் கைகள் தோளில் அழுந்தின.

"யேய். பண்டாரம்..! நம்பிட்டியா? அவ்வளோதானா உனக்கு என் மேல் நம்பிக்கை?" என்ற போது கண்கள் பளபள.

"ச்சீ... ஏமாத்திட்டியேடா... என் காதல் தடியா..." என்றைக்கோ சொல்ல நினைத்திருந்ததை இன்றைக்கே சொன்ன போது சந்தோஷம் இரட்டிப்பானதாய்த் தோன்றியது!




நம்ம தலைவர் பேத்திக்கு ரெண்டாவது பிறந்தநாளாம்!
கசாப்புக் கடை முனியாண்டியின் 36 வது பிறந்த நாள் விழா!
இன்னிக்கு என்ன ப்ரோக்ராம்?
இன்னிக்கு பத்து தலைவர்கள் பிறந்த நாள்; எட்டு தலைவர்கள் இறந்தநாள்; மொத்தம் 18 சமாதிக்கு மலர் வளையம் வெக்கணும். இடையில் டைம் கிடைச்சா ஆபிஸ் போய் ஃபைலைப் பார்க்கறீங்க...
39 வது
பிறந்த நாள்
காணும்
தலைவியே, வருக! வருக!
தலைவரே, தொண்டர்களுக்கு உங்க மேல பக்தி முத்திப்போச்சு! உங்க பிறந்த நாளைக்குப் பத்து பேர் தீக்குளிக்கப் போறதா அறிக்கை விட்டிருக்காங்க!
P.M.

உங்கள் முதலீட்டிற்கு அதிக பாதுகாப்பு மற்றும் கவர்ச்சி கரமான வட்டி வழங்குகிறோம்.

24% PA மாத வட்டி	**27% PA** வருட வட்டி

★ முன் தேதியிட்ட காசோலை வழங்கப்படும்

★ வங்கி கமிஷனை நாங்கள் ஏற்கிறோம்.

அஷ்டலெட்சுமி

ரூ.3,000/- = ரூ. 1,08,190/-

15 ஆண்டுகளில்

ரூ.1,000/- = ரூ. 2,050/-

3 ஆண்டுகளில் இரட்டிப்பு

பணத்திற்கு பாதுகாப்பு எப்படி?

- ★ 20 வருட திட்டமாகிய தேக்கு மரத் திட்டத்தை இயக்கி வருகிறோம்.
- ★ பல நூறு ஏக்கர் நிலம் பக்க பலமாக உள்ளது.
- ★ வங்கிகள் மற்றும் அனைத்து நிறுவனங்களை விட எங்களுடைய நிர்வாக செலவு மிகவும் குறைவு
- ★ அதிகமான பலன்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்க முடிகிறது.
- ★ முதலீட்டின் போது கவர்ச்சிகரமான பரிசுகள்

அபிராமி HIGH இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

(ஒரு அபிராமி குரூப் கம்பெனியின் அங்கம்)

ரிஜிஸ்டர்டு ஆபிஸ் : சித்ரா காம்ப்ளக்ஸ், சிந்தாமணி திருச்சி. 620 002. போன் : 25963

கார்பரேட் ஆபிஸ் : 49/21, பிருந்தாவன் தெரு, முருகன் காம்ப்ளக்ஸ், மேற்கு மாம்பலம், சென்னை. 600 033.

கிளை : 55/B சின்னையா காம்ப்ளக்ஸ், கௌரி தியேட்டர் அருகில், ஐந்துரோடு. சேலம் 4

நினைவலைகள்

HE WHO TEACHES ME EVEN FOR A DAY IS MY FATHER FOR A LIFE TIME

— சீனப் பழமொழி

கே. பாலசந்தர்

கற்பனையும் கனவுகளும் துள்ளி வரும் பள்ளிப் பிராயம்!

மீண்டும் வருமா என்று நினையாதார் யார்? எழுத்துத் துறையாகட்டும், கலைத்துறையாகட்டும் - அதில் புகழ் பெற்றிருப்பவர்கள் எல்லோருடைய பள்ளிப் பிராயத்தையும் ஆராய்ந்து பார்க்கும் போது சின்ன வயதிலே கையெழுத்துப் பத்திரிகை நடத்தி அந்த சுகானுபவத்தை உணராதவர்களே இருந்திருக்க முடியாது என்று தான் தோன்றுகிறது.

அந்த வகையில்தான் நானும் எனது பள்ளிப் பிராயத்தில் கையெழுத்துப் பத்திரிகை நடத்தியிருக்கிறேன். இரண்டு மூன்று மாதங்களுக்கொருமுறை 'ஜெய பாரதி' என்கிற இதழ்.

எப்பொழுதாவது 'காந்தி மலர்' என்கிற இதழ். பாரதி என்கிற பெயரிலே எனக்கு அந்தச் சின்ன வயதிலே ஒரு மயக்கம்.

எதிர் வீட்டு நாகராஜன் காதல் கதைகள் எழுதுவான்; காதல் என்றால் அவனுக்கு மிகவும் பிடிக்கும். எங்களது பத்திரிகைக்கு விஷயதானம் செய்யும் இன்னொரு முக்கியப் புள்ளி வ.சா. நாகராஜன். எனக்கு ஒரு வகுப்பு சீனியர். இவர்தான் பிற்காலத்தில் ரெயில்வேயில் பணிபுரிந்து கொண்டே பிரபல வார, மாதப் பத்திரிகைகளில் அதே பெயரில் நல்ல நல்ல சிறுகதைகள் எழுதிப் பிரபலமடைந்தவர்.

நான் கதைகளுக்குப் படம் போடுவேன். பிரபல வாரப் பத்திரிகைகளில் கோபுலு போன்ற ஓவியர்கள் போடுகின்ற படங்களை அங்குமிங்கும் சற்று மாற்றியமைத்து கறுப்பு இந்தியன் மை கொண்டு படங்கள் வரைவேன். சித்திரமும் கைப் பழக்கமல்லவா? பிற்காலத்தில் கொண்ட முழு நேர நாடக ஈடுபாடு இந்த சித்திரப் பழக்கத்திற்கு எதிரியாக வந்தமைந்தது.

கதைகள் எழுதிய பிறகு அரைப் பக்கம், முக்கால் பக்கம் துண்டு விழுந்தால் துணுக்குகள் போட்டு பக்கத்தை நிரப்புவோம். இன்னமும் துண்டு விழுந்தால் "ஜெயபாரதி இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்" என்று இடத்தை நிரப்புவோம். கையெழுத்துப் பிரதி ஒன்றே ஒன்றுதான்; அதுதான் எல்லா நண்பர்களுக்கும், தெரு வீடுகளுக்கும் சர்குலேஷனுக்குப் போகும்.

சின்னச் சின்ன நம்பிக்கைகள் தான் உன்னை உனது இலட்சியம் நோக்கி அழைத்துச் செல்லும்! உனது விடா முயற்சிகள்தான் அந்த இலட்சியத்தை உன்னிடம் அழைத்து வரும். இதுவே வாழ்க்கை சித்தாந்தமாக எனக்குப் படுகிறது.

அண்ணாமலை சர்வகலாசாலை எனக்கு ஆண்டு தோறும் இரண்டு மூன்று வாய்ப்புகள் தந்து என் கலை ஆர்வத்திற்கு வடிகால் அமைத்துக் கொடுத்தது.



Founder's Day; Annual Day; Hostel Day. இந்த விழா நாட்களில் நடக்கும் கலை நிகழ்ச்சிகளில் நான் பங்கேற்கும் கால்மணி, அரைமணி நேர ஓரங்க நாடகங்களோ அல்லது mono acting நிகழ்ச்சிகளோ நிச்சயம் இருக்கும்.

குமுறல்

இளம் பெண்மையைச் சூறையாடும் முதுமை!

●● தரிசாகக் கிடக்கிறதே என்று வயலில் யூகலிப்டஸ் மரங்களை வளர்க்கிறார்கள். இவை மா, வேம்பு, புளி மாதிரி பயன் தருவன அல்ல. ஒரு யூகலிப்டஸ் மரம் ஒரு நாளைக்கு 300 லிட்டர் நிலத்தடி நீரை உறிஞ்சுகிறது! இதன் பாதகங்களை விவசாயிகள் உணர்ந்து இதனை வளர்ப்பதைத் தவிர்க்க வேண்டும். வேளாண்துறை விழிப் படையட்டும்.

கோவை, க. மாரியப்பன்.

●● நெய்வேலியிலிருந்து கும்பகோணத்துக்கு சோழன் பஸ்ஸில் பயணம் செய்தேன். இரவு 8:30க்கு டயர் பஞ்சராகி விட, கும்மிருட்டில் 25 பயணிகள், பெண்கள் குழந்தைகள் உட்பட காத்திருந்தோம். ஒரு மணி நேரம் கழித்து கும்பகோணம் செல்லும் தந்தை பெரியார் ஏறக்குறைய காலியாக வந்தது. அதன் நடத்துனர் எங்களை ஏற்றிக் கொள்ளச் சம்மதித்தபோதிலும் ஓட்டுனர் மறுத்து விட்டார்! மேலும் ஒரு மணி நேரம் காத்திருக்க நேர்ந்தது. மனிதநேயம் எப்படி செயல்படுகிறது பார்த்தீர்களா? போக்குவரத்துத் துறை, இதுபோன்ற சமயங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு ஓட்டுனர், நடத்துனர்களுக்கு விதிமுறைகள் வகுக்கக் கூடாதா?

திருவையாறு, டி. எஸ். வேங்கடராமன்.

●● சென்னை, சைதாப்பேட்டை ஜெயராஜ் திரையரங்கம் அருகே ஒரு வீட்டின் பின்புறம் ஒரு புளியமரமும் வேப்பமரமும் நாற்புறமும் கிளை விட்டுப் படர்ந்துள்ளன. இவற்றில் சில அயல்நாட்டுப் பறவைகள் (சுமார் நூறு) வாசம் புரிகின்றன. வேடந்தாங்கல் செல்ல வேண் டியவை திசை தப்பி வந்தனவா, அல்லது இந்தச் சூழல் பிடித்துப் போயிற்றா? எப்படியாயினும் இவற்றைக் குறவர்களின் நாட்டுத் துப்பாக்கி யிலிருந்தும் சிறார்களின் உண்டி வில்லிலிருந்தும் காப்பாற்றியாக வேண்டும். அரசு இரண்டு காவலர்களை நியமிக்கக் கூடாதா?

சென்னை, எஸ். சங்கரப்ரியா.

●● "அறுபத்தி ஒன்பது வயது முதியவருக்குப் பெண் தேவை; மாதம் ரூ 3000/-" "எழுபது வயதுடையவருக்குப் பெண் தேவை. மாதம் ரூ 2000/-" வேலை வாய்ப்பு விளம்பரம் இல்லை! தங்கத் தமிழ்நாட்டில் இம்மாதிரி விளம்பரங்கள் அடிக்கடி திருமணப் பத்தியில்தான் பத்திரி கைகளில் வெளிவருகின்றன! என்ன நெஞ்சழுத் தம்! பெண்களின் நிலை எந்த அளவுக்கு உயர்ந் திருக்கிறது, பாருங்கள்! வரதட்சிணை கொடுத்து திருமணம் செய்து கொள்ள முடியாத இளம் பெண்மையை முதுமை சூறையாடத் துடிக்கிறது. இளைஞர்கள் சிந்திப்பார்களா? பெண்கள் நல அமைப்புக்கள் பொங்கி எழ வேண்டாமா?

தஞ்சாவூர். ஆர். எஸ். ராஸ்.

சி.ஆர். மயிலேறு என்கிற ஆங்கிலப் பேராசிரியர் அவர்களுடைய ஓரங்க ஹாஸ்ய நாடகங்களில் நடிக்கின்ற வாய்ப்புகளும் எனக்குக் கிட்டின.

நிகழ்ச்சிக்கு மறுநாள் ஹாஸ்டல் 'மெஸ்' ஸுக்குப் போய்ச் சாப்பிட உட்காரும் போது அங்கே சாப்பாட்டுப் பந்திகளில் அமர்ந் திருக்கும் மற்ற மாணவர்களின் கண்கள் - நூற்றுக்கணக்கான கண்கள் - என் மீதே பதிந்து இருப்பதையும் என்னைப் பற்றி அவர்கள் ரகசியமாகப் பேசிக் கொள்வதை யும் பார்க்கும் போது ஏற்படுகின்ற அந்தப் பரவசம், மெய் சிலிர்ப்பு இவற் றையெல் லாம் வர்ணித்து எழுத வார்த்தைகளே இல்லை.

இதுதான் புகழ் போதை எனப்படுவதோ?

இந்த போதை ஒருமுறை அனுபவிக்கப் பட்டுவிட்டால் அது மேலும் மேலும் கொழுந்து விட்டுப் பெருந்தீயாக எரிந்து கொண்டே போகிறது; அணைக்கப்படவே முடிவதில்லை! ஆனால் ஒன்று! இந்த 'போதை' மட்டும் இல்லாமலிருந்தால் சிறந்த கலைஞர்கள் உருவாக முடியுமா என்பது சந்தேகம்தான்.

கல்லூரிப் படிப்பு முடிந்து அக்கவுண் டண்ட் ஜெனரல் அலுவலகத்தில் மேல் டிவிஷன் கிளார்க்காக நான் வேலையை ஒப் புக் கொண்ட பிறகு எனது நாடக தாகத் திற்கு வடிகால்களை நான் தேடித் தேடி அலைந்தேன். அமெச்சூர் நாடகக் குழுக்கள், நாடக ஒத்திகை நடத்துகின்ற இடங்களிலெல் லாம் சென்று ஒதுக்குப்புறமான இடத்தில் மணிக்கணக்காக நின்று கொண்டு ஒத்திகை களைப் பார்த்துக் கொண்டே இருப்பேன். யாராவது என்னைக் கூப்பிட்டு "உனக் கென்ன வேண்டும்? நீயும் நாடகத்தில் நடிக் கிறாயா?" என்று அவர்களாகவே கேட்க மாட்டார்களா, என்கிற ஒரு நப்பாசை.


திருவல்லிக்கேணி ஃபைன் ஆர்ட்ஸ் கிளப் நாடகக் குழுவினர் நடத்தும் நாடக ஒத்திகைகளை சாம்பு என்.எஸ். நடராஜய்யர் அவர்கள் இயக்கிக் கொண்டிருப்பார்கள். அன்னாரது கண் பார்வை என் மீது படாதா என்று ஆர்வ வெறியுடன் ஆணி அறைந்தாற் போல் அதே இடத்தில் நின்று கொண் டிருப்பேன்.

அக்கவுண்டண்ட் ஜெனரல் அலுவலகத் தில், அலுவலர்களின் சங்கம் புதிய அக்க வுண்டண்ட் ஜெனரலின் வருகைக்காக ஒரு வரவேற்பு விழா ஏற்பாடு செய்திருந்தது அண்ணாமலை மன்றத்தில்.

சங்கக் காரியதரிசி சுப்பைய்யா நான் மட்டுமே பங்கேற்கும் ஒரு பதினைந்து நிமிட mono acting நிகழ்ச்சி ஒன்றுக்குச் சந்தர்ப் பமளித்தார். அந்த நிகழ்ச்சிதான் Cinema Fanatic. மிகப்பெரிய அளவில் இந்த நிகழ்ச்சி

ஸ்ரீ கந்தசுவாமி
பர்மனெண்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1990
பதிவு அலுவலகம்: 60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை- 600 002.
கிளை அலுவலகம்: 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-600 015. போன்: 459569



பிக்சட் டிபாசிட்

46நாள்	3மாதம்	6மாதம்	ஆண்டு	2ஆண்டு	3ஆண்டு	4ஆண்டு	5ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21%

5 வருடங்கள்
ரூ.50,000/-
அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும் தொகை
ரூ. 25,000	60 மாதம்	ரூ. 70,000

சொத்துக்கள் மீது கடன்

- ❑ வீடு / ஃப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும்.
- ❑ மாத வட்டி ரூ.1.85 மட்டுமே
- ❑ விரைந்த சேவை.
- ❑ சென்னை மாநகராட்சி இருக்க வேண்டும்.



நகைக்கடன்

- ❑ குறைந்த வட்டிக்கு கிடைக்கும்
- ❑ 10 கிராமுக்கு ரூ.3000 வழங்கப்படும்.
- ❑ R.D. கட்டத் தேவையில்லை
- ❑ எந்த சார்ஜும் வசூலிப்பதில்லை



பென்ஷனர் நலத்திட்டம்

20%P.a ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும் காலம் 1 ஆண்டு வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.



சேர்மன்:
P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
முதன்மை அறங்காவலர்,
ஸ்ரீகந்தக்கோட்டம்,
சென்னை-600 003.
ஆலோசகர்
பார்க் டவுன் பெனிபிட்
பண்டு லிட்.

இயக்குநர்கள் குழு
R.விவேகானந்தன் B.Com.,
(Chairman : Park Town Benefit Fund Ltd.)
A.சுப்பிரமணியன்
V.சண்முகவடிவு B.A.,
V.விஜயகோபால் B.Com., D.C.P.
M.ராஜேந்திரன்
P.ஏகாம்பரம்

H.O. Friday Holiday — பங்குதாரர்களுக்கு மட்டும் — B.O. Tuesday Holiday

பாராட்டுப் பெற்றது. புதிய அக்கவுண் டண்ட் ஜெனரல் பேசும் போது எனது நடிப் புத்திறனைப் பாராட்டி ஒரு மெடல் பரி சளித்தார். இதுதான் சென்னையில் எனக்குக் கிடைத்த முதல் பாராட்டு மெடல்.

கிட்டத்தட்ட 1500 பேர் பணி புரிகின்ற எனது அலுவலகத்தினுள் மறுநாள் நான் நுழைந்த போது எனக்குக் கிடைத்த பாராட் டுக்களும், மரியாதைகளும், வரவேற்பும் என்னை பிரமிக்க வைத்தன.

Suddenly I found myself famous.

Thackeray என்கிற ஆங்கில எழுத்தாள ரைப் பற்றி ஒருவர் குறிப்பிட்டார்.

"ஒருநாள் தூங்கி எழுந்து பார்க்கும் போது தாம் புகழின் உச்சத்தில் இருப்பதாக தாக்கரே உணர்ந்தார்."

அதற்கு மறு மொழியாக இன்னொருவர் கூறினார்.

"தம்மைப் புகழின் உச்சத்தில் ஒருநாள் கண்ட தாக்கரே பல ஆண்டுகளாகத் தூங் கியவரேயல்ல; இரவு பகலாகப் பதினைந்து ஆண்டுகள் எழுதிக் கொண்டிருந்தார்."

ஏழெட்டு வருட இரவு பகல் பார்க்காத அந்தக் கலைத்தாகம்தான் 1500 பேர் பணி புரிகின்ற அந்த அலுவலகத்தில் என்னை திடீரென்று உலகத்திற்கு அடையாளம் காட் டியது. இந்த நாடகம்தான் போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் அலுவலகத்தில் பணி புரிந்து கொண்டிருந்த ராகினி கோபால கிருஷ்ணன் என்கிற அமெச்சூர் நாடக ஆசிரியருக்கு என்னை அறிமுகப்படுத்தியது. பின்பு PMG அலுவலகத்தில் நடக்கும் அவரது நாடகங் களில் நடிக்கத் தொடங்கினேன். பின்னால் நிறுவப்பட்ட ராகினி ரெக்ரியேஷன்ஸ் குழுவைச் சேர்ந்த முக்கியமான நண்பர்கள் கோவிந்தராஜன், ஹரிகிருஷ்ணன், ராமன் (நாயர்) போன்றவர்களின் பரிச்சயமும் நட்பும் கிடைக்கப் பெற்றேன்.

ராகினி ரெக்ரியேஷன்ஸ் குழுவின் ஹாஸ்ய ஓரங்க நடகங்கள் சென்னையில் மிகவும் பிரபலமடைந்து மாநாட்டு மேடை களிலும், ஏன் கல்யாண வீடுகளிலும் கூட நடிக்கப்பட்டது. இதில் மிகவும் பிரபல மடைந்த 'புஷ்பலதா' என்கிற நாடகத்தின் பெயரைத்தான் எனது மகளுக்குச் சூட் டினேன்.

இதற்கு அடுத்த கட்டம்தான் நான் வி.எஸ். ராகவன் அவர்களைச் சந்தித்தது. மாலி, வாதிராஜ் இவர்களுடன் இணைந்து 'இண்டியன் நேஷனல் ஆர்டிஸ்ட்ஸ்' என்கிற நாடகக் குழுவை நிறுவி அதன் முதல் முயற் சியாக 'மனோரதம்' என்கிற நாடகத்தை அரங்கேற்றவிருந்தார்கள். ராகவன் அவர் களின் விருப்பத்திற்கிணங்க நான் என்னை அந்தக் குழுவுடனும் ஐக்கியப்படுத்திக் கொண்டேன்.


மோட்டார் சைக்கிள் பரிசுப் போட்டி – 17

1994 இல் நடந்த முக்கியமான நிகழ்ச்சிகள் தொடர்பானது இந்தப் போட்டி. எண் தரப்பட்டுள்ள குறிப்புகளின் உதவியுடன், உரிய கட்டங்களை நிரப்பி, கூப்பனைக் கத்தரித்து வைத்துக் கொள்ள வேண்டும். 26 போட்டிகளும் பிரசுரமான பின் அனைத்து கூப்பன்களையும் ஒன்று சேர்த்து எங்களுக்கு அனுப்புங்கள். அதிகப் போட்டிகளில் பங்கேற்று, அதிகச் சரியான விடைகள் எழுதும் ஒருவருக்கு மோட்டார் சைக்கிள் பரிசு. ஆறுதல் பரிசுகளும் உண்டு. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

1↓ மிக இனிப்பான சோகம்
1→ முதல்வரின் வலது கரம்?
2→ எலிகளின் காணிக்கை
2↓ தமிழகத்தையே கலக்கியவர்
3→ நம்மவர்!
4↓ உதய சூரியனில் விழுந்த நிழல்
5↓ முதல் குறிப்புக்கு விடை தெரிந்தால் இவர் பெயரைக் கண்டுபிடிக்கலாம்.

என் பெயர் :...

விலாசம் :...







பத்து அவதாரங்களில் பயமுறுத்தாத அவதாரம்!

திருப்பாவையில் உள்ள முப்பது பாடல்களில் திருமாலின் வாமன அவதாரத்தைக் குறித்துத்தான் மிக அதிகமாக பதினாலு இடங்களில் வருகிறது. யாரையும், அழித்து ஒழித்துப் பயமுறுத்தாத அவதாரம் வாமன அவதாரம்தான். சிரிக்கவைக்கும் தோற்றம்; சாமர்த்தியமான நடத்தை; சாதனை புரியும் ஆற்றல். மூவுலகையும் ஈரடியால் அளந்து, 'மூன்றாவது அடி எங்கே?' எனக்கேட்டு மகாபலியின் சிரஸில் காலை வைத்து அவனுக்கு முக்தி கொடுத்தான் நாராயணன். சிறிய மனிதன் – அடக்கமான பண்புடையவன் – பெரிய சாதனை செய்ய முடியுமென்பதற்கு வாமன அவதாரம் ஓர் எடுத்துக் காட்டு. 'மகாபலிக்குக் காலை வைத்து அருளிய கேசவன் என் கைத்தலம் பற்றுவது போல் கனாக் கண்டேன் தோழி' என்கிறாள் கோதை. கனவு பலித்து விடுகிறது.



தன்னம்பிக்கை, வைராக்கியத்துக்கு ஆண்டாள் ஓர் எடுத்துக் காட்டு. திருப்பாவை முப்பதையும் சொல்லுபவர்களுக்கு மன உறுதியும் திட நம்பிக்கையும் நிச்சயம் வரும்!

(இந்தியன் வங்கி நடத்திய 'திருப்பாவை' விழாவில் 'ஆண்டாள் மகிமை' பற்றி குமரிஅனந்தன் பேசியதிலிருந்து ஒரு ரசத்துளி.)

-ப்ரியன்.

வி.எஸ். ராகவன் அவர்கள் ஒரு நல்ல நாடகப் பிரியர். சிறந்த நாடகங்களைத் தயாரிக்க வேண்டுமென்கிற ஆர்வமும் வெறியும், தொழில் பக்தியும் அவரிடம் உண்டு. அவரது இயக்கத்தில் மா.ரா. அவர்கள் எழுதிய "எங்கிருந்தோ வந்தான்" நாடகம் சூப்பர் ஹிட் நாடகமாயிற்று. இதில் கதாநாயகியாக நடித்தவர் இப்பொழுது பிரபல நடன இயக்குநராக இருக்கும் புலியூர் சரோஜா அவர்கள். நான், வாதிராஜ் தந்தையாக நடித்தேன். "இவர்கள் எங்கிருந்து வந்தார்கள்?" என்கிற தலைப்பில் கல்கியில் வெளி வந்த விமர்சனக் கட்டுரை இந்த நாடகத்திற்குப் பெரும் புகழையும், நாடக உலகில் ஒரு தனி அந்தஸ்தையும் பெற்றுத் தந்தது.

பூவாளூர் சுந்தரராமன் அவர்கள் எழுதி ஒரு வாரப்பத்திரிகையில் வெளிவந்த ஒரு சிறுகதையை "நீங்களே நாடகமாக்கம் செய்து பாருங்களேன்" என்று வி.எஸ். ராகவன் அவர்கள் என்னிடம் கொடுத்தார். பல நாட்கள் ராகவனும் நானும் உட்கார்ந்து சிறுகதையை இரண்டு மணி நேர மேடை நாடகமாக்கி அதன் பின் வசனங்களை நான் எழுதினேன். அதுவே கௌரி கல்யாணம் என்கிற தலைப்பில் நாடகமாக நடத்தப்பட்டு சபாக்களின் அபிமானத்தைப் பெற்றது. அதில் 'பட்டாமணியம்' என்கிற வில்லன் பாத்திரத்தை நான் ஏற்று நடித்தேன்.

இதற்கடுத்து தயாரிக்கப்பட்ட நாடகம் தான் தமிழ் நாடக மேடைகளில் அதுவரை கண்டிராத பெரும் புரட்சியையும் புதுமையையும் தோற்றுவித்தது. 'சதுரங்கம்' என்கிற ஒரு செட் நாடகம். ஆங்கில ஒரு செட் நாடகத்தின் தமிழாக்கம்தான் இது. இயக்கியவர் வி.எஸ். ராகவன். வசனம் எழுதியது நான்.

அதுவரை நான் எழுதிய அல்லது எழுதி இயக்கி நடித்த நாடகங்கள் அனைத்தும் ஹாஸ்யத்தை மட்டுமே பெருமளவில் அடிப்படையாகக் கொண்டவை.

'இந்தியன் நேஷனல் ஆர்டிஸ்ட்' குழுவினருடன் நான் பணி புரிந்த அந்த நாட்களும், வி.எஸ். ராகவன் அவர்களுடன் தொடர்ந்து நாடக discussion களில் கலந்து கொண்டு நான் பயனடைந்த அந்த அனுபவங்களும்தான் என்னை ஒரு சீரியஸ் நாடக ஆசிரியனாக metamorphosis (உருமாற்றம்) செய்தது என்று சொன்னால் அது மிகையில்லை.

பின்னால் சிறப்புப் பெற்ற எனது சீரியஸ் நாடகங்களின் முயற்சிகளுக்கும் சிந்தனைகளுக்கும் ஒரு வகையில் விதையூன்றியவர் வி.எஸ். ராகவன் அவர்கள்தான்.

கட்டுரை ஆரம்பத்தில் சொன்ன அந்த சீனப் பழமொழி என் கவனத்திற்கு வருகிறது.

(தொடரும்)

பட்ஜெட்-1995!

சத்யா

(ரகு ஆபீஸிலிருந்து வருகிறான். மாலா எதையோ எழுதிக் கொண்டிருக்கிறாள்.)

ரகு : என்ன மாலா? என்னவோ மும்முரமா எழுதிக்கிட்டிருக்கியே, கதை எழுதறியா?

மாலா : கதை எழுதலைங்க. பட்ஜெட் போடறேன். 1995-ஆம் வருஷத்திலே நமக்கு என்னென்ன செலவுன்னு லிஸ்ட் போட்டுக்கிட்டிருக்கேன்.

(ரகு, மாலாவின் பட்ஜெட்டைப் பார்க்கிறான்)

ரகு : ரேஷன் செலவு சரி. ரேஷனில் விலைஉயர்வு மற்றும் எடை குறைவால் ஏற்படும் கூடுதல் செலவு சரி. இதென்ன வேண்டாத பொருட்களை வாங்குவதால் ஏற்படும் செலவுன்னு போட்டிருக்கே?

மாலா : ஆமாங்க. கொள்ளு வாங்கினாத்தான் கோதுமை கொடுப்பேன். எள்ளு வாங்கினாத்தான் எண்ணெய் கொடுப்பேன்னு அடம்பிடிக்கிறான். இதையெல்லாம் நான் எந்தக் கணக்கிலே சேர்க்கிறது?

ரகு : கரெக்ட். அவன் என்ன பண்ணுவான், பாவம்! ரூல்ஸ்படி நடக்கிறான். பஸ் கிடைக்காததால் ஆட்டோ செலவு. ஓகே! ஆட்டோ டிரைவருக்கு மீட்டருக்கு மேல் கொடுக்க வேண்டிய தொகை ஐந்நூறு ரூபாயா? அநியாயமா இருக்கே!

மாலா : அநியாயம்னு என்கிட்டே ஏன் சொல்றீங்க? 'நானா ஆட்டோ ஓட்டறேன்? வருஷத்துக்கு ஐந்நூறு ரூபா ஆகாதா? இந்தக் காலத்திலே ஏதோ சில பேர்தான் மீட்டருக்கு மேலே கேக்கறாங்க. மத்தவங்க எல்லாம் மீட்டரே போடறதில்லை. தெரியுமா?

ரகு : சரி சரி! பந்த் சமயத்திலே ஆட்டோக்காரனுக்கு நூறு, நூத்தி ஐம்பதுன்னு அழ வேண்டியிருக்கே. அதைப் போட்டியா?

மாலா : ஐயையோ. அதை மறந்தே போயிட்டேங்க. சரி சேத்துக்கறேன்.

ரகு : காய்கறிச் செலவு சரி. இதென்ன, அதுக்குக் கீழே என்னவோ எழுதியிருக்கே?

மாலா : லாரி ஸ்டிரைக் வந்தா காய்கறி விலை ஏறுமே? அதைப் போட்டிருக்கேன். வருஷத்துக்கு நாலு தடவை ஸ்டிரைக்குன்னா கூட, ஒவ்வொரு தடவையும் பேச்சு வார்த்தை முடியறதுக்குப் பத்து நாளாவது ஆகாதா?

ரகு : ஆகும்... ஆகும்! பரவாயில்லையே. பொது அறிவு நிறைய இருக்கே உன்கிட்டே. ஆனா, லாரி ஸ்டிரைக்காலே மட்டும்தான் விலை ஏறுமா? திடீர்னு எந்த ரெண்டு நாட்டுக்காவது சண்டை வந்தாக்கூட காய்கறி விலை ஏறுமே...

மாலா : எதுக்கு கெட்டதையே நினைக்கறீங்க? சண்டை வராம கூட இருக்கலாமே.

ரகு : அதுக்கும் சான்ஸ் இருக்கு. ஆமா... டாக்டர் செலவு ஆறாயிரம் எப்படி ஆகும்? அப்படி யாருக்கு இங்கே தீராத வியாதி இருக்கு?

மாலா : என்ன நீங்க? குடும்பத்திலே தலைவலி, காய்ச்சல், ஜலதோஷம் வராதா?

ரகு : அதுக்கு இவ்வளவு செலவா ஆகும்?

மாலா : நீங்க எந்த காலத்திலே இருக்கீங்க? இப்ப எல்லாம் ஜுரம்னு டாக்டர் கிட்டே போனா வெறும் மருந்து மட்டும் கொடுத்தனுப்பிடறாங்கன்னு நினைச்சீங்களா?

ரகு : பின்னே?

மாலா : ப்ளட் டெஸ்ட், ஈ.ஸி.ஜி. எக்ஸ்ரே, ஸ்கேன், ஸோனோகிராம் இதெல்லாம் செய்யாம தப்பிச்சுட்டு வந்துட முடியுமா? அவங்களுக்கும் வருமானம் வேண்டாமா?

ரகு : சரி சரி. இப்பவே ப்ரஷர் ஏறுற மாதிரி இருக்கு. சொல்லாதே. பெட்ரோல் விலை உயர்வு வருஷத்துக்கு ரெண்டு தடவைதானா இருக்கும்?





மாலா : தாராளமா போட்டேன்.

ரகு : ஸ்கூட்டர்லே போகும் போது ட்ராஃபிக் கான்ஸ்டபிள் வழி மறிச்சா அவருக்குக் கொடுக்க வேண்டிய தொகையைப் போடலையே...

மாலா : எதிர்பாராத செலவுன்னு போட்டிருக்கேனே.

ரகு : இது வழக்கமா நடக்கிறதுதானே. இது எதிர்பாராத செலவில்லை. எதிர்பார்க்கக் கூடியதுதான். இதென்ன கெரசின் செலவு எக்கச்சக்கமா போட்டிருக்கே நீ? வாங்கி விக்கப் போறியா?

மாலா : இல்லைங்க. கெரசின் கிடைக்கலைன்னா ப்ளாக்கிலே வாங்க வேண்டாமா? அதான். திடீர்னு தட்டுப்பாடு வரும். இதெல்லாம் உங்களுக்குத் தெரியாது.

ரகு : கிட்டுவுக்கு எல்.கே.ஜி. அட்மிஷனுக்குன்னு போட்டிருக்கியே. அவனுக்கு ரெண்டு வயசு கூட ஆகலையே...

மாலா : நீங்க பாட்டுக்கும் ஆபீஸுக்குப் போயிடறீங்க. அவனைப் பாத்துக்கறது எவ்வளவு கஷ்டமாயிருக்கு தெரியுமா? ஒரு டி.வி. ப்ரோக்ராம் கூட பாக்க விட மாட்டேங்கறான்.

ரகு : குழந்தைக்கு இன்னும் தமிழே வரலை. அதுக்குள்ளே அதை எல்.கே.ஜியிலே சேர்த்து இங்கிலீஷ்லே பேச வெச்சா எப்படி?

மாலா : அதைப் பத்தி நீங்க கவலைப்படாதீங்க. நான் பாத்துக்கறேன். நீங்க டொனேஷனுக்கு ஏற்பாடு பண்ணுங்க. அதான் ஹைலைட் நம்ம பட்ஜெட்டிலே.

ரகு : ஐயோ..! மொத்தச் செலவு ஒரு லட்சத்து நாப்பத்தெட்டாயிரமா? எனக்கு வருஷ வருமானமே நாப்பதாயிரம்தானே? மீதிக்கு எங்கே போறது...?

மாலா : கடன் வாங்க வேண்டியதுதான்.

ரகு : கடன் வாங்கினா திருப்பித் தர வேண்டாமா?

மாலா : நம்ம புள்ளைங்க பெரிசாகி சம்பாதிக்க ஆரம்பிச்சா திருப்பிக் குடுத்துடப் போறோம்.

ரகு : அது சரி! இப்படிச் சொல்லிக் கடன் கேட்டா நம்மள நம்பி எவன் கடன் குடுப்பான்?

மாலா : நம்ம மத்திய, மாநில அரசுகள் போடற திட்டங்களை நம்பி உலகமே கடன் குடுக்கறப்ப இந்த மாலாவோட திட்டத்துக்கா கடன் கிடைக்காம போயிடும்!

தாட்பூட் தஞ்சாவூர்!

''உலகத் தமிழ் மகா நாட்டுக்கு வரப்போகும் பிரதிநிதிகளுக்கு எல்லா வகையான சிற்றுண்டிகள் வழங்கினாலும், ஒண்ணு மாத்திரம் கிடையாதுங்கிறாயே அது எது?''

''சென்னா மசாலா!''

தமிழுக்காகக் கலைச் சேவை செய்ய நீங்க

நிருபர்: தமிழுக்காகக் கலைச் சேவை செய்ய நீங்க தஞ்சாவூர் போகலியா?

தமிழ் நடிகை: ரொம்ப அக்கிரமுங்கோ! ஒங்க தமில் நாட்டிலே அய்க்கான தமிளுலே நான் சொல்பொலிவு செயக் கூடாதுன்னுட்டாங்கோ!

''தமிழ்தந்த அகஸ்தியர் தஞ்சாவூர் ஏற்பாடுகளைச் செஞ்சிருந்தா சிறப்பா இருந்திருக்கும்னு ஏன் சொல்றே?''

''கட் அவுட்டெல்லாம் ஒண்ணே முக்கால் அடிக்கு மேல இருந்திருக்காது!''

''கவிதை எழுதும் பழக்கம் உள்ள கணக்கு ஆசிரியர் கேட்ட கேள்வியிலே கவிஞர்கள் குழம்பிப் போயிருக்காங்களாமே, அது என்ன கேள்வி?''

''ஒரு அட்சரம் லட்சம் பெறும் என்றால் ஒரு மகாநாடு எவ்வளவு கோடி பெறும்!''

''கவியரங்கத்திலே அமைச்சர் பழைய செய்யுளைத் தப்பாகச் சொல்லிவிட்டு எசகு பிசகாக நெளிந்தார்னு சொல்றீங்களே அப்படி அவர் சொன்னது என்ன?''

''ஊழலுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியாக ஓடி மக்களுக்கும் சற்றே பாயுமாம்!''

- "ராமபிரான்"

நீங்கள் கேட்டவை - தராசு

● வி. பரமசிவம், மதுரை.

? 'நேரு குடும்பத்தால் மட்டுமே கட்சிக்குப் புத்துணர்வு ஊட்ட முடியும்' என்று சில காங்கிரஸார் கூறுவது சரியா?

! ஒரு தனி நபரின் பிராபல்யத்தை மட்டுமே நம்பியிருக்கும் கட்சி, அவர் காலத்துக்குப் பிறகு பலவீனப்படுவது இயற்கை. எனவே அமைப்பு ரீதியாக காங்கிரஸ் பலமடைவதே நல்லது. அடி மட்டத்திலிருந்து உட்கட்சி தேர்தல் நடப்பதும் மக்களுக்குப் பணியாற்றும் நோக்கில் கிராமந் தோறும் அவர்களுடன் பழகுவதும்தான் வழி.

● கனகராஜ், திருச்சி.

? தட்டிக் கொடுப்பது தவறா? தட்டிக் கேட்பது தவறா?

! தட்டிக் கேட்க வேண்டிய நேரத்தில் கேட்காமல் இருப்பதும், தட்டிக் கொடுக்க வேண்டிய நேரத்தில் கொடுக்காமல் இருப்பதும் தவறு.

● சாந்தி குமார், காட்பாடி.

? தமிழகம், ஆந்திரம் இரண்டிலும் திரை உலகைச் சேர்ந்தவர்கள் முதல்வர்களாக அமைந்து விட்டது பற்றி?

! திரை உலகைச் சேர்ந்தவர்களாயினும் ஆட்சித் திறமைமிக்கவர்களாக இருந்து விட்டால் ஆட்சேபணை இல்லை. ஆனால் திறமை மிக்கவர்கள் போல் நடிப்பதில் அபாரத் திறமை உள்ளவர்களாக இருப்பதுதான் ஆபத்து!

● மேலை பழ. நாகப்பன், சென்னை.

? சென்னா ரெட்டியின் தில்லி விஜயத்தால் ஏதும் நடக்குமா?

! ரெட்டிகாரு இஞ்சி மொரப்பா பேட்டி தந்தாலும் ராவ் காரு கோதுமை அல்வாவாக 'ஜவ்'வடிக்கும் போது என்ன பிரமாதமாக நடந்து விடப் போகிறது?

● மு. வெ. ஆனந்தன், வந்தவாசி.

? "நான் தர்மப் போர் செய்கிறேன்" என்கிறானே சந்தன வீரப்பன்?

! குருக்ஷேத்திரத்தில் நடந்த தர்மயுத்தத்தில் பங்கேற்றவர் தருமர் மட்டுமா? துரியோதனனும் துச்சாதனனும் கூடத்தான்! தர்மயுத்தத்தில் எந்தப் பக்கம் நின்று போரிடுகிறோம் என்பதல்லவா முக்கியம்!

● அரிச்சந்திரன், சென்னை.

? "நான் பெண்களிடையே அச்சம் நீங்கி மறு மலர்ச்சி ஏற்பட வேண்டும் என்று எதிர் பார்க்கிறேன்" - பெண் வக்கீல் அஞ்சலி கபூரின் அதிரடி ஸ்டேட்மெண்டைக் கவனித்தீரா?

! ஆடைக் குறைப்பு என்பது மறுமலர்ச்சியா? ஆபாசம் என்றல்லவோ எண்ணினோம்? பெண் விடுதலை இயக்கத்துக்குப் பரம எதிரிகள் அஞ்சலி கபூர் போன்ற கருங்காலிகள்தாம். அறிவாற்றலைப் பயன்படுத்தி, சமத்துவம் கோரி, தலைநிமிர்ந்து நிற்க மாதர் சமுதாயம் முயற்சி செய்யும் போது, இவர்கள் குறுக்கு வழியில் பிரபலமடையவும் பணம் பண்ணவும் முயன்று, தலைகுனிவை ஏற்படுத்துகிறார்கள். நொண்டிச் சமாதானங்களைச் சொல்லித் திரிகிறார்கள்.

● த. குணசேகரன், கவுந்தப்பாடி.

? "94-ம் ஆண்டின் தமாஷ் பேர்வழி" என்று யாரைச் சொல்வீர்கள்?


! சந்தேகமில்லாமல் ஸ்ரீமான் பொது ஜனத்தைத்தான்! அவருக்கு மட்டும் நகைச்சுவை உணர்வு இல்லையென்றால் நாடு இன்றிருக்கும் அவல நிலையில் பைத்தியம் பிடித்துப் பாயைப் பிராண்டிக் கொண்டிருப்பார்!

ஆளுனரின் அறிக்கை காரணமாக தமிழக அரசு டிஸ்மிஸ் ஆகுமா?

• மூக்கை நகர்த்தாததால்...



• திரை உலக முதல்வர்கள்...



• மும்மொழித் திட்டம்





• தோல்வியை அலசினார்!

● ம. மாரிமுத்து, மதுரை - 3.

? "மத்திய அரசுக்குத் துணிவிருந்தால் நான் கொடுத்துள்ள அறிக்கைகளின் அடிப்படையில் அ.தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்யட்டும்" என்று தமிழக ஆளுனர் கூறியிருப்பது குறித்து...?

! கண்ணாடி வீட்டுக்குள்ளிருந்தபடி கல்லெறிய யாருக்குத் துணிச்சல் வரும்? மாநில அரசின் மா ஊழல்களை விட மத்திய அரசின் ஊழல்கள் பிரும்மாண்டமாக இருக்கும் போது, அந்தத் துணிவு வருவது ரொம்பக் கஷ்டம். ஆந்திரா, கர்நாடகா தேர்தல்களில் ஜெயித்திருந்தாலாவது கொஞ்சம் வீரதீரத்தை எதிர்பார்க்கலாம். அதுவும் இல்லையென்று ஆன பிறகு ஆளுனர் பதவிக்கே ஆபத்து அதிகம்! 'ஜெ'யின் 'சென்னாரெட்டியைத் திரும்ப அழையுங்கள்' கோரிக்கை நிறைவேற்றப்படவே வாய்ப்பு மிகுதி!

● கே. ஆர். சைமன், குலசேகரன்பட்டிணம்.

? மூன்றாவது டெஸ்ட்டில் இந்தியா தோற்றதற்குக் காரணம் நமது மோசமான போலிங்கா, பேட்டிங்கா?

! ஏன், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் 'வெற்றி பெற வேண்டும்' என்ற சங்கல்பத்துடன் கூடிய அபாரமான ஆட்டமாக இருக்கக் கூடாதா, என்ன!

● ஆர். ஜேஸ்மின் ரமேஷ், கம்பம்.

? "நான் சட்டம் படித்து வழக்கறிஞராக விரும்பினேன்" என்று பள்ளி விழாவில் ஜெயலலிதா பேசியுள்ளாரே?

! நீதித் துறையின் லாபம்; தமிழகத்தின் நஷ்டம்!

● எஸ். மகேஷ், கர்நால். ❑

? கர்நாடகத்தில் பி.ஜே.பி. காலூன்றுகிறதே?

! வேரூன்ற நினைத்தவர்கள் காலூன்றியிருக்கிறார்கள். "நமது தீவிர ஹிந்துத்வக் கொள்கை, முஸ்லிம்களை நமக்கு எதிராக வோட்டளிக்கச் செய்திருக்கிறது" என்று வாஜ்பாயி கட்சிக் கூட்டத்தில் அலசியிருக்கிறார். முஸ்லிம்களை மட்டுமல்ல, ஹிந்துக்களையும் எதிராக வாக்களிக்கச் செய்துள்ளது என்பதுதான் உண்மை. கிராமமோ, பட்டணமோ, இன்று ஹிந்துக்களும், முஸ்லிம்களும் அருகருகே வாழ வேண்டிய நிர்ப்பந்தச் சூழலில், பிளவுகளை வளர்க்கும் கொள்கையை மக்கள் ஆதரிக்கவே மாட்டார்கள். அமைதியாகக் காலம் ஓட்டுவதையே விரும்புவார்கள்.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
எஸ். மகேஷ்,
1723, செக்டார் 13,
அர்பன் எஸ்டேட், கர்நால்,
132 001, ஹரியானா.

● ச. ஜான் ரவி, கோவில்பட்டி.

? போட்டிப் பந்தயங்களைப் பத்திரிகைகள் வெளியிடுவதால் பெருகும் தீமைகளைக் குறித்து அன்றே கவலைப்பட்ட "கல்கி", இன்றைய கல்கி சஞ்சிகையைப் பார்த்தால் என்ன நினைப்பார்?

! சந்தோஷப்படுவார். காரணம், அவர் எதிர்த்தது கூப்பனுக்குக் கட்டணம் வசூலித்து பகுத்தறிவுப் போட்டி என்ற பெயரில் பணம் பண்ணும் போக்கைத்தான். இன்று அதைவிடக் கேவலமாக, குலுக்கல் முறை போட்டிகள் ஏகமாக நடக்கின்றன. கல்கி கட்டணம் வசூலிப்பதும் இல்லை; லாட்டரி முறையில் பெரும் தொகைகளை, பரிசுகளை வழங்குவதும் இல்லை. கல்கி நடத்தும் போட்டிகள், பொது அறிவைத் தூண்டுவன; மூளைக்கு வேலை கொடுப்பன.

● இரா. கல்யாணசுந்தரம், மதுரை.

? மேற்கிந்திய ஆட்டக்காரர்கள் முறையற்ற வகையில் பந்தெறிந்து நமது வீரர்களைக் காயப்படுத்தியது எந்த வகையில் நியாயம்?

! வேகப் பந்து வீச்சும் பவுன்ஸர்களும் இன்று கிரிக்கெட்டில் ஒப்புக் கொள்ளப்பட்டவை ஆகிவிட்டன. இதற்காக விசேஷ பாதுகாப்பு உபகரணங்களும் பயன்படுத்தப்படுகின்றன. "குறிப்பிட்ட பந்தைத் தொடாமலிருக்க பாட்டை நகர்த்தி விட்டேன்; ஆனால் மூக்கை நகர்த்திக் கொள்ளத் தவறி விட்டேன்" என்று பிரபாகரே கூறியுள்ளார்.

● அய்யார், சென்னை.

? முத்தமிழ்க் காவலரின் மும்மொழித் திட்டத்தை வரவேற்கிறீர்களா?

! 'தமிழ்நாட்டில் தமிழ், பள்ளிகளில் கட்டாயப் பாடமாக வேண்டும்' என்ற அவர் திட்டத்தை நிச்சயம் வரவேற்கிறேன். மறைந்த மேதைக்குப் பாராட்டுக்களை அடுக்கி அஞ்சலி செலுத்தும் அரசியல்வாதிகள், இந்த ஒரு விஷயத்திலாவது ஒற்றுமையாகச் செயல்பட்டு நிறைவேற்றி வைக்கலாம். அல்லாத பட்சத்தில் உதட்டளவில் உருகுவதாகவே இருக்கும்; மனத்தால் அல்ல.



• ...சோதனை அல்ல!




• இஞ்சி மொரப்பா...



• எந்தப் பக்கம்?



• லாபமும் நஷ்டமும்!



மஞ்சு விரட்டு

மனத்தில் நிற்பது திரைக்கதை மட்டுமே.



அத்தைமக ரத்தினமே

மரத்தைச் சுற்றிப் பாடுவதையும் கரகாட்டத்தையும் இன்னும் எத்தனை படத்தில்தான் பார்ப்பது?



தி ஜென்டில்மேன்

தமிழிலிருந்த மண் வாசனையை ஹிந்தியில் சுத்தமாக வழித்தெறிந்து விட்டார்கள்.



10 மணி

கதவைப் பிடித்த படி பவித்திரா கேட்டாள்.

"அப்ப நாளைக்குப் பார்க்கலாமா?"

"உம். இன்னிக்கு உன்னோட வாழ்க்கையில ரொம்ப ரொம்ப சந்தோஷமான நாள், இல்லே?"

"ஆமா. என்னை விட என் பெற்றோருக்குத்தான் இன்னும் அதிக சந்தோஷமா இருந்திருக்கும்."

"உண்மைதான். அப்ப நான் வரட்டுமா?"

"சரி."

கதவைச் சாத்திக் கொண்டு பவித்திரா உள்ளே வந்தாள். வரும்போதே, "பெரிம்மா, தாத்தா ஒரு கதை சொன்னார்; இப்ப நீ சொல்ல வேணும். கொஞ்ச நாளுக்கு முந்தி பூனாவில பரோடா மகாராணி தலைமையில நடந்த அகில இந்திய மாதர் மகாநாட்டில கலந்துண்டியே, என்ன நடந்தது அதுல?"

"இன்னும் கொஞ்ச நாள் கழிச்சுக் கேளுடி!" என்றாள் அமராவதி இடக்காக.

"பொதுவா இந்தியாவில பெண்கள் கொஞ்சங் கூட முன்னேறவே இல்லைங்கிறதைப் பத்தித்தான் எல்லாருமே பேசினோம். ஆனாலும் இருபது இருபத்தஞ்சு வருஷத்துக்கு முந்தி இருந்ததுக்கு இப்ப எவ்வளவோ பரவாயில்லைன்னு நான் பேசினேன். ஆண்களுடைய ஆதிக்கம் யுகம் யுகமா இருந்து வர்ற ஒரு நாட்டிலே அவ்வளவு சீக்கிரமால்லாம் பெண்கள் முன்னேற்றத்தை எதிர்பார்த்துட முடியாதுன்னு சொன்னேன். ஆண்கள் கொஞ்சங் கொஞ்சமாத்தான் மாறுவான்னும் பேசினேன்."

"சரியாத்தான் பேசி இருக்கே..."

"பெண்களுக்குப் பரிஞ்சு காந்தி எழுதற கட்டுரைகள்ளாம் பிரமாதமா இருக்கும்மா, பவித்திரா. நீ அவசியம் படிக்கணும்" என்றாள் அஞ்சனா.

"அவர் வெறும் விடுதலைப் போராட்ட வீரர் மட்டும் இல்லியேம்மா? சமூக சீர்திருத்தவாதியும் ஆச்சே. தீண்டாமை, பெண்ணுரிமை, வரதட்சிணை, பாலிய மணம், கைம்பெண் மறுமணம், கல்வி, மதுவிலக்கு, பர்தாமுறை, பகவதை, தனி மனித உரிமை, பிரும்மசரியம், ஆரோக்கிய வாழ்க்கைமுறை, வேதங்கள், மதங்கள், இந்து - முஸ்லிம் ஒற்றுமை, மாணவர்கள், போர், பிராமணர் - பிராமணர் அல்லாதாரிடையிலான சண்டை, விஞ்ஞானம், கலை, இலக்கியம், தேவதாசிகள், தொழுநோய், இன்னும் எத்தனையோ தலைப்புக்கள்லே யங் இண்டியாங்கிற பத்திரிகையில தொடர்ந்து கட்டுரைகள் எழுதியிருக்கார்ம்மா. இன்னும் எழுதறார். அந்தக் கட்டுரைகள்ளாம் அவர் பேச்சுக்கு மறு பேச்சே இல்லைங்கிற மாதிரி படிக்கிறவாளுக்குத் தோணக்கூடிய வகையில எழுதப்பட்ட கட்டுரைகள். அவருக்கு இருக்கிற சிந்தனைகளையும் எழுத்து வேகத்தையும் பார்க்கிறப்ப இந்த நாடு அவரால விமோசனம் அடையல் லேன்னா வேற யாரால அடையப் போறதுங்கிற கேள்விதான் மனசுல எழறது... ஆனா அவரோட இந்த அகிம்சை ஒண்ணுதான் உதைக்கிறது. அதுவும் கூடப் போகப் போக என்னை மாதிரியான வயசானவாளுக்குப் புரிஞ்சு போகும்னு தோண

கொடி

ரது. உன்னை மாதிரி இளசுகளுக்குத்தான் புரியப் போறதில்லே..." என்று ஒரு ஆவேசத்தோடு பேசினார் ராஜாராமன்.

"அவருக்கு மகாத்மான்னு யாருப்பா பட்டம் குடுத்தா?"

"கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் தான் கொடுத்தார். தென்னாப்பிரிக்காவில இருக்கிற இந்தியர்களுக்காக வெள்ளைக் காரங்களோட போராடி ஓரளவுக்கு அவர் வெற்றியும் பெற்றதால இந்தியாவிலேயும் அவரால பிரச்னையைத் தீர்க்க முடியும்கிற நம்பிக்கை பரவலா இருந்தது - இப்பவும் இருக்கு. இதனால 1915லேயே தாகூர் அவரை மகாத்மான்னு அழைச்சுட்டார். அது அவரோட பேரோட ஒட்டிண்டுடுத்து... காந்திக்கு அது பிடிக்கல்லேன்னாலும்."

"ரவீந்திரநாத் தாகூருக்கும் காந்திஜிக்கும் சில விஷயங்கள்ல ஒத்துப் போகல்லே, இல்லேப்பா?" என்றாள் அஞ்சனா.

"ஆமாம்மா. முக்கியமா மகாத்மா காந்தி 1921-லே அயல் நாட்டுத் துணிகளையெல்லாம் கொளுத்திடணும்கிற யோசனை சொன்னாரே, அது தாகூருக்குப் பிடிக்கல்லே. இந்தியாவிலே பாதிப் பேருக்கு மேல அரை குறை ஆடை உடுத்தக் கூட முடியாத வறுமையில இருக்கிறப்ப கோடிக்கணக்கான விலை மதிப்புள்ள துணிகளைத் தீயில போட்டுப் பொசுக்கிறது முட்டாள்தனம்னு அவர் பகிரங்கமா அறிவிச்சார்."

"அதுக்கு காந்திஜி ஒண்ணும் சொல்லல்லையா?"

"கதையாயிருக்கே? சொல்

ஜோதிர்லதா கிரிஜா



வாம இருப்பாரா? கன்னத்துல அடிக்கிற மாதிரி யங் இந்தியா பத்திரிகையில ஒரே வாக்கியத்துல தாகூருக்குப் பதில் சொல்லிட்டார் - அந்நியத் துணிகளை எரிக்கிற யோசனைக்கு எதிரா சொல்லப்பட்ட அத்தனை கருத்துக்களையும் பரிசீலனை செய்ததுக்கு அப்புறமும், வெள்ளைக்காரன் இங்கே வித்திருக்கிற துணிகளை எரிக்கிறதுதான் நாம இனி அவன் துணிகளை வாங்கப் போறதில்லைங்கிறதை அவனுக்கு உணர்த்தறதுக்குச் சரியான வழி அப்படின்னு..."

"ரெண்டு பேர் சொல்றதும் சரி மாதிரி இருக்குப்பா."

"ரெண்டு பெரிய மனுஷா மோதிக்கிறப்ப அப்படித்தாம்மா இருக்கும்" என்றார் ராஜாராமன்.

38

செருப்புகளை அவசரமாய் உதறிவிட்டு உள்ளே சென்ற கங்காதரன், "அப்பா, அப்பா" என்று பரபரப்பாய்க் கூவியபடி ராமசாமியின் அறைக்குள் நுழைந்தான்.

ரமணிக்குக் கணக்கு கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்த ராமசாமி, "என்னடா, கங்கா, என்னமோ கொள்ளை போயிட்ட மாதிரி கத்திண்டு வரே?" என்றார் தலை உயர்த்தி.

"கொள்ளை போனது கிடைச்ச மாதிரின்னு சொல்லுங்கோப்பா," என்றவாறு அவன் அவர் எதிரே வந்து நின்றான்.

"உக்காந்து சொல்லு, என்ன ஆச்சு?"

விசாலம் எட்டிப் பார்த்தாள்.

"அமராவதி ஆண்ட்டியுடைய ஹஸ்பண்ட் - அதாம்ப்பா அந்த நரேந்திரநாத் பானர்ஜி அவரைச் சந்திச்சோம். கப்பல்ல அந்தமானுக்குக் கொண்டு போறா..." என்று மூச்சிரைக்கச் சொன்னபடி நாற்காலியில் உட்கார்ந்தவன் மற்ற விவரங்களையும் கூறினான்.

விரிந்த விழிகளுடன் எல்லாவற்றையும் கேட்ட ராமசாமி, "கதையில வர்ற திருப்பம்



மாதிரின்னா இருக்கு? ஆச்சரியத்திலயும் ஆச்சரியம், அவனைத் தூக்கில போட்டிருப்பான்னு நெனச்சு மிஸ்டர் ராஜாராமன் மனசு உடைஞ்சு போயிருந்தார். அந்தப் பொண்ணுந்தான். பாவம். உசிரோடயாவது இருக்கானே, நினைச்சுக்கூடப் பார்த்திருக்க மாட்டா யாருமே இப்படி சந்திக்க வாய்க்கும்னு!" என்றார்.

"யாருடாப்பா கப்பல்ல போறா? அவளை நாசம் பண்ணிட்டுப் போன அந்தக் கடன்காரனா?" என்றாள் விசாலம்.

ராமசாமி அவளை முறைத்தார். கங்காதரன் தலையைக் குனிந்து கொண்டான்.

"ஏண்டாப்பா, கங்கா, நீ அவாத்துக்கா போயிட்டு வரே?"

"ஆமாம், அத்தே."

"அவாள்ளாம் ஒரு மாதிரி கூர்கெட்ட குடும்பம். அடிக்கடி அங்கே போகாதேப்பா. உன்னோட நல்லதுக்குத்தான் சொல்றேன்."

விசாலத்துக்குப் பதில் சொல்ல ராமசாமி வாயைத் திறக்குமுன் கங்காதரன் முந்திக் கொண்டான். "அத்தே, அவாள்ளாம் ரொம்ப நல்ல மனுஷா. ஊர் மனுஷாதான் அவாளோட அருமை தெரியாம கண்டபடி பேசறான்னா, அஞ்சனா மாமியோட இத்தனை வருஷமாப் பழகிண்டு கூர்கெட்ட குடும்பம் அது இதுன்னு நீயும் பேசறியே?"

கலங்கிய விழிகளால் தம்பியைக் கணம் போல் பார்த்தபின் விசாலம் நொடியில் அங்கிருந்து அகன்றாள். ராமசாமி ஆயாசத்துடன் எழுந்து அவளுக்குப் பின்னால் சென்றார்.

"அக்கா... என்னக்கா நீ? கொழந்தைகள் எதிர்ல கன்னாபின்னான்னு பேசிட்டுப் போறே? அவா மேல உனக்கேன் இத்தனை கடுப்பு? அவா உன்னை என்ன பண்ணினா?

"ஃபோட்டோ ஆல்பத்தைப் பார்த்துட்டு உங்க மகன் அழுறானே... ஏன்?"

"அது அவனோட கல்யாண ஆல்பம்!"

— சோம. முத்துக்குமார்

இல்லே, என்னைத்தான் என்ன பண்ணினா?"

கண்களைத் துடைத்துக் கொண்ட விசாலம், "கங்காவுக்கு இருபத்திரண்டு வயசு ஆறது. அவாத்துப் பொண்ணுக்குப் பதினேழு வயசு ஆயிடுத்துன்னு நினைக்கிறேன். பஞ்சும் நெருப்புமாப் பத்திக்கிற வயசு. ஒரே காலேஜ் வேற. நாளைக்கு அந்தப் பொண்ணைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு நம்மாத்துப் பிள்ளை ஒத்தைக் கால்ல நிக்காம இருக்கணுமேன்னு நினைச்சா எனக்கு ராத் தூக்கம் வருவேனாங்கிறது. நீ என்னடான்னா இதை அற்ப விஷயமா நினைக்கிறே!"

"விஷயம் அற்பமில்லேக்கா. அந்தக் கொழந்தைகள் அப்படி ஆசைப்பட்டு அதுக்கு நாம குறுக்கே நின்னா, அதுக்குப் பேர்தான் அற்பம்."

"நீ பேசறதெல்லாம் உனக்கே சம்மதமா இருந்தா சரி. நான் பதில் சொல்றதா இல்லே. கண்ட புருஷாளோடயும் மீட்டிங்குக்குப் போறதும், கார்ல சுத்தறதும், கண்ட நேரத்துல வீட்டுக்குத் திரும்பறதும் நல்ல பொம்மனாட்டிகள் செய்யற காரியமா? அக்கா, தங்கை ரெண்டும் அந்த விஷயத்துல ஒரே அச்சுல வார்த்ததுகள். ஊர் முழுக்க சிரிக்கிறது."

"நீயும் வேணும்னா அவாளோட சேர்ந்துண்டு சிரி. நான் குறுக்கே நிக்கல்லே. ஆனா நான் சிரிக்க மாட்டேன். ஏன்னா அவா மாதிரி நல்லவாளைப் பார்த்துச் சிரிக்கிறவாளுக்கு ஏழேழு ஜென்மத்துக்கும் சாபல்யம் கிடையாது."

ராமசாமி கோபத்துடன் தமது அறைக்குத் திரும்பினார்.

அறையை விட்டு வெளியே சென்று அப்பாவும் அத்தையும் பேசிக் கொண்டதைக் கேட்டு விட்டே தனது அறைக்குப் போன கங்காதரன், சிந்தனைவயப்பட்டான். 'பெண்களுக்குக் கல்வியறிவு வேண்டும் என்பது இதனால்தான்' என்று அந்தக் கணத்தில் அவனுக்குத் தோன்றியது.

தனது காதலை பவித்திராவிடம் அவன் வெளிப்படையாய்ச் சொல்லி இரண்டே நாட்கள்தாம் ஆயின. அதற்குள் அத்தைக்கு மூக்கில் வியர்த்து விட்டதே என்று வியப்படைந்தான். இரண்டு நாட்களுக்கு முன்னால் கல்லூரியிலிருந்து திரும்பிக் கொண்டிருக்கையில், "பவித்திரா, உங்கிட்ட ஒண்ணு சொல்லணுமே? எப்ப உன்னைத் தனியாப் பார்க்கிறது?" என்றான் அவன் சிரித்தபடி. உள்ளுணர்வாக இருவருக்குமே தங்களுக்கு ஒருவரையொருவர் பிடித்திருப்பதும், காதல் வெளிப்பாடு அதிகத் தொலைவில் இல்லை என்பதும் புரிந்தே இருந்தன.

எனவே, பளிச்சென்று கேட்டு விட்டாள் பவித்திரா. "இப்ப தனியாத்தானே இருக்கோம்? சொல்லிடேன், 'ஐ லவ் யூ'ன்னு அதானே?" - தலையைப் பக்கவாட்டில் திருப்பிச் சாய்த்துக் கோணல் பார்வையுடன் அவள் இப்படிக் கேட்டதும் அவன் வியந்துதான் போனான்.

"என்ன அப்படிப் பாக்கறே, கங்கா? நீ இப்படி ஒருநாள் பேசுவேங்கிறது நான் என்னிக்கோ எதிர்பார்த்ததுதான். அதுக்கு என்னோட பதிலும் 'யெஸ்'தான்கிறது உன்னோட உன் மனசுக்குத் தெரியும்..."

"கெட்டிக்காரிதான் நீ."

"பின்னே? ஒரு கெட்டிக்காரன் தேர்ந்தெடுக்கிற பெண் மக்காவா இருப்பா?"

கங்காதரன் சிரித்தான். அதை எண்ணிய போது இப்போதும் அவன் மனம் கிளுகிளுக்க, தனக்குத்தானே மீண்டும் சிரித்துக் கொண்டான்.

(தொடரும்)

குண்டல் தகவலரிடம்

ஒரே சினிமாவுல இவரும் இவர் மனைவியும் நடிப்பாங்களாம்; ஃபைட் சீன்ல நிச்சயம் 'டூப்' போட வேண்டாம்!





குண்டல் விநியோகம் போல தினம் ஒரு தகவல் தரும் தென்கச்சி கோ. சுவாமிநாதன் கிண்டல் பேட்டிக்கா அசந்து விடுவார்!

☹ "மனைவியைக் கிண்டல் பண்ண முடியலே... அதனாலேதான் தகவலை முடிக்கிறபோது, சில சமயங்கள்லே பெண்களைக் கிண்டல் பண்ணி... மனசைத் தேத்திக்கறீங்க... இல்லையா?"

☺ "மனைவி பண்ற கிண்டல் தாங்க முடியலே... அதனாலேதாங்க அப்படி பண்றேன்! அதுமட்டுமில்லே.... அப்படி அவங்களைக் கிண்டல் பண்ணி, நம்மளை மாதிரி பலபேர் மனசைத் தேத்திக்கறத்துக்கும் உதவியா இருக்கேன். இது ஒரு சமூக சேவை மாதிரி...!

☹ "உங்கள் குரலின் கவர்ச்சிக்கு ஏதோ லேகியம் சாப்பிடறதாகப் பேசிக்கிறாங்களே... நிஜமா?"

☺ "ஏங்க... குரல் ஒண்ணுலேயாவது நான் கவர்ச்சியா இருந்துட்டுப் போறேனே... அதுக்குமா ஆபத்து? லேகியத்துக்குத்தான் பெருமை போய்ச் சேரணுமா?

☹ "விழுந்து விழுந்து சிரிக்கிறாங்களே... அடிபடாதா?"

☺ "விழுந்து விழுந்து இப்படிக் கடிக்கிறீங்களே.... ரத்தமா வருது?"

☹ "உங்களுக்கு எதைப் பார்த்தா பயம்? அய்யனார் சிலையையா? கட்அவுட்டையா?"

☺ "அய்யனார் சிலை மாதிரி காட்சியளிக்கிற கட்அவுட்டை...!"

☹ "'இது என்னங்க சமையல் உப்பு, புளி, காரம்ன்னு எதுவுமே இல்லாமே...' என்று உங்கள் மனைவி சலிச்சுக்கும்

கிண்டல் பேட்டி!

போது என்ன செய்வீங்க?"

☺ "இதுக்குத்தான் அப்பவே சொன்னேன்... உனக்குச் சம்பந்தமில்லாத வேலையெல்லாம் செய்ய வேணாம்ன்னு...! கேட்டியா?' அப்படின்னு சொல்லி நானும் சலிச்சிக்குவேன்!"

☹ "உங்களை ஹீரோவா போட்டுப் படமெடுக்க ஒருத்தர் (தற்கொலை முயற்சிதான்) துணிஞ்சு இறங்கிட்டா... நீங்க யாரை ஹீரோயினா போடச் சொல்லுவீங்க?"

☺ "அவருடைய முயற்சியில் அவர் சீக்கிரம் வெற்றி பெறச் செய்ய வேண்டியது என் கடமை... என்பதால் என் மனைவியைத்தான் ஹீரோயினாகப் போடச் சொல்லுவேன்!"

☹ "உங்க வீட்டு ரேடியோ தகவல் நேரத்துலே மட்டும் மக்கர் செய்யறதாச் சொல்றாங்க...?"

☺ "தகவல் நேரத்துலே மட்டும்தான் மக்கர் செய்யறதில்லே...! அதனாலேதான் விவகாரமே!"

☹ "1995 லேயாவது தகவல் நிகழ்ச்சியில் பெரிய மாறுதல் கொண்டு வரணும்ன்னு கையெழுத்து சேகரிப்பு இயக்கம் நடத்தால்.....?"

☺ "முதல் கையெழுத்து நான் போடுவேன்!"

☺ ☺ ☺ ☺ படம் : **யோகா**

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, எக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

